Registered as a News Paper

# ஈழநாதம்

Eelanatham வெள்ளி நாதம்

விலை: 12.00



உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்

முத்துமாரி நகைமாடம்

78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வன்னியில் நாச்சிக்குடாச் சந்தியில் செயற்பட்டு
வந்த எமது நிறுவனம் தற்போது பெயர்
மாற்றத்துடன் யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது.

(சி-7411)

நாதம் -13 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி -08 25-10-2002 வெள்ளிக்கிழமை ஓசை 249







## மானுடத்தின் தமிழ்க்கூடல்; மீண்டும் தோடங்கிய மிடுக்கு




மானுடத்தின் தமிழ்க்கூடல்
வரலாற்றை வென்றதனை
நினைவுகளில் உயிர்த்திருக்கும்
நீங்களும் பார்த்திருப்பீர்....!

மானுடத்தின் தமிழ்க் கூடல்
2002





ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 25.10.2002

## நம்பிக்கையற்ற சூழ்நிலையும், நம்பிக்கைதரும் வார்த்தைகளும்

-கொழும்பில அரசியல் நிலையில் மீண்டும் ஒரு ஸ்திரத்தன்மை அற்ற தழும்பல் நிலை உருவாகியுள்ளது.

- மாற்று அரசு வருமா? பொதுத்தேர்தல் வருமா? என்ற கேள்விகள் பரவலாகப் பரபரப்புடன் பேசப்படும் நிலை தோன்றியுள்ளது.

-நாடு பற்றிய சிந்தனையோ, மக்களின் பிரச்சினை குறித்த பிரஞையோ ஏதுமின்றி பதவியொன்றையே குறியாகக்கொண்ட 'அரசியல்வாதம்' சிறிலங்காவை மிகக் கடுமையாக பீடித்துள்ளதை உணர முடிகிறது.

-குறிப்பாக சிறிலங்காவின் எதிர்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவியான சந்திரிகாவின் அரசியல் குயுக்திகளும், வியூகங்களும் சிறிலங்காவை அதல பாதாளத்துள் தள்ளாமல் விடுவதில்லை என்று உறுதி கொண்டு அவர் இயங்குவதையே தெளிவாகக் காட்டுகிறது.

சமாதானத்துக்கான யுத்தமென்ற கொள்கையுடனான அவரது தலைமையிலான ஏழாண்டுகால ஆட்சி தமிழ் மக்களின் வாழ்வையும், வாழ்விடங்களையும் முற்றாக நிர்மூலம்செய்யும் மூர்க்கத்தனத்துடன் கூடியதாக இருந்த அதே வேளை, ஊழலும், மோசடியும், நிறைந்தும் காணப்பட்டது. இது சிறிலங்காவின் திறைசேரியை வெறுமையாக்கவும் வைத்தது.

ரணில் பதவிக்கு வந்ததும், சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய முன்னணி மக்களால் புறக்கணிக்கப்பட்டதும் சமாதானம் மீதான மக்களின் வெளிப்பாடாகவே அமைந்தது.

விடுதலைப் புலிகளுடனான ரணிலின் உடன்பாடும், போர்நிறுத்தமும் அதனைத் தொடர்ந்த பேச்சுவார்த்தையும், மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினாலும் சந்திரிகாவுக்கு எரிச்சலையும், சீற்றத்தையுமே ஏற்படுத்தியது. சமாதானத்தை ஆதரிப்பவர்போன்று பாசாங்கு செய்தபடி அதனைக் குழப்புவதற்கு என்னென்ன தந்திரோபாயங்களைக் கையாள முடியுமோ அவற்றையெல்லாம் கையாண்டு வந்தார் என்பதும் இரகசியமானவையல்ல....

சமாதானம் தனது எதிர்கால அரசியலைப் பாதிக்கும் என்பதில் சந்திரிகா உறுதியாக இருந்ததாலேயே, அதை எப்படியாவது முறியடிக்க வேண்டுமென்பதிலும் அவர் முழுமூச்சாக இருந்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் விளைவுதான் இன்றைய சிறிலங்காவின் அரசியல் பதற்றநிலையாகும்.

ரணில் இப்போது அவரின் சமாதான முனைப்பு காரணமாக மக்கள் மத்தியில் அவருக்கு இருக்கும் செல்வாக்கினை காலமறிந்து பயன்படுத்த நினைக்கிறார் என்பது அவர் தேர்தலைச் சந்திக்கத் தயாராவதில் இருந்து தெரிகிறது. நிச்சயமாக அவருக்கு இது ஒரு சாதகமான சூழல்தான்.

புதிய தேர்தல் அவரின் பாராளுமன்றப் பலத்தை நிச்சயம் அதிகரிக்கவே செய்யும், இப்போது அவரின் முயற்சிகளுக்கு தேவையானதும் அதுதான். சமாதானம் குறித்த முயற்சிகள் மீதான மக்களின் எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் ரணிலுக்கான வெற்றிவாய்ப்பினை இலகுவாக்கும் என்பதில் ஐயமில்லை.

இது சந்திரிகாவுக்கும் தெரிந்த அவருக்கு அச்சமூட்டும் விடயமுமாகும். இதனாலேயே தேர்தலைத் தவிர்த்து மாற்று அரசு ஒன்றை உருவாக்கும் முனைப்பில் அவர் செயற்பட்டு வருகிறார்.

தனது கட்சிக்குள்ளேயே உட்கட்சிப் பூசல் மிகுந்துள்ள நிலையில் தேர்தல் அவருக்குள்ள இருப்பையும் இழக்கவைக்கும் ஒன்றாகவே அமையும். கடந்த தேர்தலின் போது கிடைத்த ஸ்தானங்களை தக்கவைப்பதே அவருக்கு இயலாமல் போகலாம்.

மாற்று அரசை அமைப்பது என்பது- ஆளும்கட்சியை உடைக்கும் நடவடிக்கையாகவே கருதவேண்டும். ஆனால் ஆளும் கட்சியை அவ்வளவு சுலபமாக உடைக்கலாம் என சந்திரிகா நினைப்பதுதான் விந்தையானது.

பேரினவாதிகளின் ஆசியும், அனுசரணையும், வேண்டுமானால் கிடைக்கலாம். மக்களின் ஆதரவு கிடைக்கப்போவதில்லை. ஆளும் கட்சியின் பதவிப்பதர்கள் சிலர் ஆதரவு அளிக்க முன்வரக் கூடும். ஆனால் அதனையும் உறுதிபடக் கூறுவது இந்த நிலையில் சாத்தியமற்றதேயாகும்.

ஆயினும் உயர்நீதிமன்றத்தின் 19வது அரசியலமைப்பின் சீர்திருத்தம் தொடர்பான தீர்ப்பு சந்திரிகாவிற்குத் தெம்பூட்டக் கூடியதாகவே அமைந்துள்ளது. ஆனாலும் இது மக்களின் தீர்ப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தப்போவது கிடையாது.

இந்த நிலையில் தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி ரணிலின் அரசை அச்சுறுத்லை அதற்குள் விரிசலை ஏற்படுத்தி, அந்த அரசிலுள்ள பதவி பதர்களை குறிவைத்து அவர்களை தன்பக்கம் இழுத்து மாற்று அரசொன்றை உருவாக்குவதிலேயே சந்திரிகா கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

ரணிலோ, தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகின்றார் என்றே தோன்றுகின்றது.

ஆக இன்றைய சமாதானத்தின் எதிர்காலம், சிறிலங்காவின் ஸ்திரத்தன்மையற்ற அரசியலின் காரணமாக, இழுபறி நிலையை எட்டக் கூடிய அபாயம் தோன்றும் கட்டத்தை எட்டிவருவதாக அஞ்சப்படுகிறது.


'ஆனாலும், ஆட்சிமாற்றம் அரசியல் ஸ்திரத்தன்மையின்மை ஏற்பட்டாலும் தற்போதைய சமாதான முயற்சிகள் இடைநிறுத்தப்படாது'என்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனின் யாழ்ப்பாண பேச்சு ஏதோவொரு வகையில் நம்பிக்கை தருவதாக இருப்பது ஆறுதலான விடயமேயாகும்.

### தூரனின் பார்வையில் ....

## புதிய தேர்தலும், மாற்று அரசாங்கமும்: ரணில்-சந்திரிகா முன்னுள்ள இரு தேர்வுகள்!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் நடந்து வரும் இந்த வேளையில் சிறிலங்கா அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மை குறித்த





அச்சுறுத்தலாக உருவாகி வருவதை அவர் அச்சத்துடனும் உணர்ந்து வருகிறார்.

இதேவேளை தனது தனிப்பட்ட செல்வாக்கு, அதிகாரவல்லு ஆகியவற்றில் மட்டுமே நம்பிக்கை கொண்டு பொதுசன ஐக்கிய முன்னணி என்ற கூட்டமைப்பு இன்றுவரை இயங்கி வருகின்றது என்று எண்ணும் சந்திரிகாவுக்கு இந்தக்

அபாயத்தையும் தவிர்க்க, மாற்று அரசாங்கமொன்றை அமைப்பது குறித்து தீவிரமாக செயற்பட்டு வருவதாக கூறுப்படுகிறது.

இந்தமாற்று அரசாங்கம் ஏற்படுமாயின் ஒரே கல்லில் இரண்டல்ல மூன்று மாங்காய்களை வீழ்த்தும் திட்டம் அவருக்கு சாத்தியப்படக் கூடும் எனச் சந்திரிகா நம்புகிறார்.

புதிய தேர்தல் ஒன்றினை சந்தித்து படுதோல்வியடையும் அபாயத்தை தவிர்த்து விடலாம்.

அச்சமும் சந்தேகமும் எழ ஆரம்பித்துள்ளது.

ஸ்திரத்தன்மையில்லாத ஒரு அரசுடன், மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகள் குறித்த நம்பகத்தன்மை என்பது எப்போதும் கேள்விக்குறியாகத்தான் இருக்கும்.

இரட்டை ஆட்சி நடைபெறும் நாட்டில் - அதாவது சிறிலங்காவில் ஆட்சியாளரின் ஸ்திரத் தன்மையின்மையும் - எதிர்க் கட்சியாளரின் நிறைவேற்று அதிகார வலுவும் மோதிக்கொண்டும், முரண்பட்டுக்கொண்டுமிருக்கையில் எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் சுமுகமான முடிவு காண்பதென்பதும் உறுதியான தீவு காண்பதென்பதும் சாத்தியமற்ற விடயமேயாகும்.

அரசு எடுக்கும் முடிவுகளையும், மேற்கொள்ளும் செயற்பாடுகளையும், அவை தேசிய நலன் கருதியதாக இருந்தாலும் கூட, அர்த்தமற்ற முறையிலும், அதிகார முனைப்புடனும் நிறைவேற்று அதிகார பலத்தை பிரயோகித்து ஒடுக்கவும், நிராகரிக்கவும், எதிர்க்கவும், முனைவதென்பது மிகவும் மூன்றாம் தரத்தன்மை கொண்ட அரசியல் நடவடிக்கைகளேயாகும்.

சிறிலங்கா சனாதிபதியின் கையாலாகாத்தன அரசியல் நடவடிக்கைகளின் தன்மைகள் தனது சொந்த அதிகாரபலத்தைத் தக்கவைத்துக் கொள்வதையே இலக்காகக் கொண்டவையாகும். ரணிலின் ஆட்சியை அகற்றுவதை மட்டுமே ஒரு வெறித்தனமான கொள்கையாகக்கொண்டு அவர் இயங்கிவருகிறார். அண்மைக்காலமாக அவர் விடுத்துவரும் அச்சுறுத்தல்களும், எச்சரிக்கைகளும் சந்திரிகாவின் தற்போதைய தடுமாற்ற நிலைப்பாட்டினையும், அரசியல் நெறிப்படுத்தலையும், வெளிப் படையாகவே துலங்க வைத்துள்ளன.

நிறைவேற்று அதிகார சனாதிபதிப் பதவியில் தனக்கு எஞ்சியுள்ள எதிர்காலத்தின் நிலை தனக்கு அடுத்தபடியாக பொ.ஐ.முன்னணிக் கூட்டமைப்பின் எதிர்காலம் தனது பரம்பரைச் சொத்தான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையின் எதிர்காலம் இந்த மூன்றுமே சந்திரிகாவின் நிகழ்காலக் குழப்பங்களுக்கான காரணிகளாகும்.

தற்போதுள்ள சனாதிபதிப் பதவியில் சகல சுகங்களையும், சகல அதிகாரங்களையும் எந்தவிதமான சிக்கல்களோ, குறைபாடுகளோ எதுவுமின்றி பூரணமாக அனுபவித்து, எஞ்சியுள்ள ஐந்தாண்டுப் பதவிக்காலத்தையும் முழுமையாகப் பூர்த்திசெய்ய விளையும் அவரது விருப்பார்வத்திற்கு ரணிலின் அரசியல் நகர்வுகளும், திட்டங்களும் கூட்டமைப்பின் எதிர்காலம் குறித்து ஒரு பயமும் இப்போது எழுந்துள்ளது. கூட்டணிக் கட்சிகளிடையே முரண் பாடுகள் அவ்வப்போது தோன்றி வருவதையும், அதனை ஏதோ வொரு வகையில் மிரட்டியும், அச்சுறுத்தியும், சிலவேளைகளில் தவிர்க்க இயலாத வகையில் அனுச ரித்து சமாளித்தும் அவர் இதுவரை வந்துள்ள போதிலும், இந்த அணுகுமுறை இனியும் நீண்ட காலத்திற்கு அவருக்கு கைகொடுக் குமா என்ற அச்சமும் ஏற்படத் தொடங்கியுள்ளது. குறிப்பாகபொ.ஐ. முன்னணிக்குள்ளான ஜே.வி.பியின் நுழைவு இப்போது ஒட்டகத்திற்கு கூடாரத்தினுள் இடம்கொடுத்த நிலையாகி ஒட்டவும் முடியாது வெட்டவும் முடியாது ஒரு சிக்கலான நிலையை அவருக்கு உருவாக்கி யுள்ளமையானது சந்திரிகாவின் அரசியல் ஆளுமைக்கு ஒரு அச்சுறுத்தலுமாகியுள்ளது.

ஜே.வி.பியின் அடாவடித்தன அரசியல் அணுகுமுறை பொ.ஐ. முன்னணியிலுள்ள ஏனைய கட்சியினருக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள நிலையில், கூட்டமைப்பு உடையாது காப்பாற்ற சந்திரிகா பெரும் சிரமப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்ததாக தங்கள் பரம்பரைச் சொத்தெனப் பெருமையுடன் கூறிக்கொள்ளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கான வாரிசு யார் என்ற போட்டியானது கட்சியின் இறுக்கத்தையே சிதைத்து விடுமோ என்ற அச்சமும் சந்திரிகாவுக்கு ஏற்படத் தொடங்கியுள்ளது. கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் 'அநுரா'வின் கட்சிக்குள்ளான மீள் பிரவேசத் தையும், தலைமைக்கான அவரது உரிமை கோரலையும் அங்கீகரிப்ப வர்களாக இல்லை. தற்போதைய எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவோ தனது இருப்பை விட்டுக்கொடுப்பவராகவுமில்லை. அநுராவோ தனது கட்சியிலுள்ள சில ஆதரவாளர்களையும் ஜே.வி.பி. யினரையும் துணைக்கு வைத்துக் கொண்டு கட்சியின் தலைமையைக் கைப்பற்ற முயன்று கொண்டி ருக்கிறார். இந்த நிலையில் கட்சிக்குள் ஏற்படத் தொடங்கிவிட்ட விரிசலை ஒட்ட சந்திரிகா படாதபாடு பட்டுவருகிறார். தந்தையால் உருவாக்கப்பட்டு, தாயால் வளர்க்கப்பட்டு தன்னை மேல்நிலையில் இருத்திய கட்சியின் தலைமைத்துவம் தனது காலத்தில் இன்னொருவரின் -அதாவது தமது பரம்பரையல்லாத இன்னொருவரின் கைக்குள் முழுமையாகச் சிக்கு வதை சந்திரிகா விரும்பவில்லை.

இந்த நிலையில் சந்திரிகா இவையனைத்தையும் சமாளிக்க ஒரே வழியாக ரணில் தலைமையிலான ஐ.தே.முன்னணி ஆட்சியைக் கலைத்துவிட்டு, தேர்தல் ஒன்றினை மீண்டும் எதிர்கொள்ளும் கட்சிக்குள்ளான கூட்டணிக் குள்ளேயான முரண்பாடுகளை பதவிகளை வழங்குவதன் மூலம் தவிர்த்து கூட்டமைப்பின் எதிர்காலத்தை உறுதி செய்து விடலாம்.

கட்சியின் தலைமையினை நிரந்தரமாகத் தன்வசமாக்கி, ஜே.வி.பியுடனான நெருக்கடி களையும் தவிர்த்து அநுராவையும் மெல்ல அவர்கள் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ளலாம். அதன் மூலம் கட்சித்தலைமையையும் மெல்ல மெல்ல அநுராவுக்கானதாக்கி விடலாம்.

இது அவரது ஆட்சி,அரசியல் , பதவி,சார்ந்த முக்கிய இலக்குகளாக இருந்தாலும் அவரது பிரதான இலக்கு சமாதானத்திற்கு எதிரானதாகவே இருக்கும்.

நோர்வே பிரதி வெளிநாட்டமைச்சர் கூறுவது போன்று அரசியல் ஸ்திரத் தன்மையோ ஆட்சி மாற்றமோ சமாதான முயற்சிகள் இடை நிறுத்தப்படாது என்று உத்தர வாதமளித்தாலும் கூட, அதையே சந்திரிகாவும், கூறினாலும் கூட பேச்சுவார்த்தை தொடர்பாக சந்திரிகா புதிய நிலைப்பாடுகளை எடுப்பார். புதிய நிபந்தனைகளை விதிப்பார் என்பது மட்டும் நிச்சயம்.

எரிக் சொல்ஹெய்ம் நீக்கப்படக் கோரலாம்.

பீரிசின் இடத்திற்கு கதிர்காமர் நியமிக்கப்படலாம்.

புதிய வரையறைகளையும், கால நிர்ணயங்களையும் ஏற்படுத்தலாம்.

ஏற்கனவே உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை நிராகரித்து புதிய உடன்பாடொன்றை எட்டவும் நிர்ப்பந்திக்கலாம்....

இவையெல்லாம் நோர்வே பிரதி வெளிநாட்டமைச்சின் வாக்குறுதியை கேள்விக்குறியாக்கவே செய்யும்.

விடுதலைப் புலிகள் சந்திரிகாவின் சுயாதீனமான முடிவுகளையும், தன்னிச்சையான செயற்பாடு களையும் எந்தவிதத்திலும் அனு சரிக்கமாட்டார்கள். சந்திரிகா, பேச்சு வார்த்தைக்காக விடுதலைப் புலிகளும் - ரணிலும் அமைத்துள்ள தளத்தை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார். அப்படியே நிர்ப்பந்தங் களுக்கு ஆளாகி ஏற்றுக் கொண்டாலும் அதற்கு விசுவாசமாக நடக்கவும் மாட்டார்.

இந்த நிலையில் சமாதான நகர்வு ஒரு தேக்க நிலையை, அல்லது நிரந்தரமாகவே நின்றுபோகும் நிலையை எட்டவே செய்யும்.

இதனை சந்திரிகா இப்போது விரும்புகிறார் எனலாம். ஏனென்றால் அவரின் கூட்டமைப்பினர் விடு தலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தையை முற்றும் முழுதாக நிராகரிப்பதனாலேயாம்.....

தனது கூட்டாளிகளைப் புறந்தள்ளி, அவர்களது அபிலாசை களுக்கு மாறாக சந்திரிகா சமாதான முயற்சிகளில் ஈடுபடப்போவது கிடையாது. அது அவரது பாரம்பரிய வழக்கமும் அல்ல.

□□□


காந்தன்

# மானுடத்தின் தமிழ்க்கூடல் ; மீண்டும் தோடங்கிய மிடுக்கு...

**– தான்** எரியுண்ட, சாம்பலிலிருந்து மீண்டும் புத்துணர்வுடன் உயிர்த்தெழுமாம் 'பீனிக்ஸ்' என்ற பறவை.

-யாழ்ப்பாணமும் ஒரு பீனிக்ஸ் பறவைதான்.

-எதிரிகள் எத்தனை தரம் அதனைத் தீயிட்டிருப்பார்கள்.

-எதிரியின் எரியூட்டலை ஒவ்வொருதரமும், தனது அழிவுராத்தன்மையை, எவராலும் அழித்தொழிக்க முடியா ஆத்ம பலத்தை, ஒரு தீக்குளிப்பாகவே எதிர்கொண்டு, புத்துயிர்ப்புடன் மீண்டும் மீண்டும் அது தனது எழுச்சி கோலத்தை விசுவரூபமாக காட்டியே வந்துள்ளது.

-இது கதையல்ல.....வரலாறு.

-காலம் காலமாக அந்நியர்களின் கொள்ளிக்கண்களுக்கு யாழ்ப்பாணம் எப்போதும் எரிச்சலையூட்டியே வந்துள்ளது.

'விழவிழ எழுவோம் விழவிழ எழுவோம்...ஒன்று விழ நாங்கள் ஒன்பதாய் எழுவோம்....' என்ற தமிழீழத்தின் தீர்க்க தரிசிக் கவிஞன் காசியானந்தனின் வரிகள் மிகமிக அழுத்தமான அர்த்தமான வரிகள் தான்...

-அந்நிய கொள்ளிக்கண்ணர்களின் 'எரியூட்டல்' பார்வைக்கு யாழ்ப்பாண மண்ணின் 'ஆத்மா' எந்த வொரு கட்டத்திலும் அசைந்து கொடுத்தது கிடையாது.

-அந்த மண்ணின் வளம், அந்த மண்ணின் மக்கள், அந்த மக்களின் அறிவு ,ஆற்றல் குடி,மனை,சுற்றம், நட்பு, கலை, கலாச்சாரம்,பண்பாடு எல்லாவற்றையும் தானே அவர்கள் தீக்கிரையாக்கி, அவற்றின் ஆதிமூலத்தையே நிர்மூலமாக்க முயன்றிருப்பார்கள்...?

-எரியூட்டிய வெற்றிக்களிப்பின் சூடு அவர்கள் மனதில் ஆற முன்னமே யாழ்ப்பாணம் ஒவ்வொரு தடவையும் முன்னைய விடவும் பேரெழுச்சி கொண்ட, முன்னைய விடவும் உத்வேகம் கொண்ட, ஆத்ம பலத்துடன் உயிர்ப்புக் கண்டே வந்துள்ளது.


கவிஞர் இன்குலாப்

-ஆமாம், இது கதையல்ல, வரலாறு....'அந்த மண்ணில் என் காலடி பதியும் ஒவ்வொரு தடவையும் என் ஆத்மாவின் ஆத்மாவான யாழ். மண் எனக்குள் உணர்த்துவதும், உரைப்பதும், இதுவே தான்..

'வாடா..என் செல்வமே.. இத்தனை நாள் எங்கு சென்றாய்...

உன் பலத்தையும், வளத்தையும், என்றுமே தளராத நம்பிக்கையையும்

நான் இன்னமும் உனக்காகப் பாதுகாத்து வைத்திருக்கிறேன்... வந்த

பகை விரட்டி, வரும் பகையை எதிர்கொள்ள எடுத்துக்கொள்....'

-இதனை எனக்கு மட்டுமல்ல உங்களுக்கும் தான் சொல்லியிருக்கும்...

தாயே உன்னைத் தீயிட வந்த தீயோர்கள் எல்லாருமே தீயில் வெந்து

கருகிப்போனார்கள்... நீ அப்படியே தீக்குளித்து புடமிட்டபொன்போல்

அப்படியே நிற்கிறாய்.-

-கடந்த கால வரலாற்றின் காட்சியாய், நிகழ்காலத்தின் காட்சியாய், எதிர் காலத்தின் மாட்சியை எடுத்துரைப்பவனாய்.....

■■■■

-இதோ.. அதே பழைய கம்பீரத்துடன் வீரசிங்கம் மண்டபம்.

-இங்கு மானுடத்தின் தமிழ்க் கூடல் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.....

-கொடிகள் அசைந்தாட விழாக்கோலம் கொண்டிருக்கிறது மண்டப முன்புறம்

-மண்டபத்தின் வலப்புற வெளியிலும் எதிர்புறத்திலும் விழாவுக்கு வருகை தந்திருப்போரின் வாகனங்கள் மொய்த்துள்ளன.

-அருகே போரின் வடுக்களையும் அழிவையும் சுமந்து நிற்கும் றீகல் திரையரங்கு எதையெதையோ சொல்லத்துடிப்பது போன்று கோலம்காட்டி நிற்கிறது. புதர்மண்டியும், புல் வளர்ந்து கிடக்கும் புல்லுக்குளம்.... அதற்கப்பால தெரியும் அசோகா ஹோட்டலில் சோகத்தில் சுவடுகளை வரலாற்றின் பதிவுகளாக்கி நிற்கின்றது. உல்லாசப்பயணிகளின் விடுதியாக இருந்து, பின்னர் மாற்றுக்குழுக்களினது -இலங்கை-இந்திய இராணுவங்களினதும் வதைமுகாமாகவும் இருந்த அதன் இடிபாடுகளுள் யாழ்ப்பாண வரலாற்றில் இரத்த வாடை வீசும் சில அத்தியாயங்களும் சிக்கியிருக்கவே செய்யும்.

-றீகல் தியேட்டரையும் புல்லுக்குளத்தையும் வகிடெடுத்துச் சென்ற அந்த ஒற்றையடிப்பாதை இப்போது ஒரு பிரதான இணைப்பாதையாகிவிட்டது.

-அதோ- திறந்த வெளியரங்கு... அந்த முழுநிலாக்கால நினைவுகளை மீட்க வைக்கிறது. நகைச்சுவை நடிகர் கே.ஏ.தங்கவேலுவின் நாடகங்கள் அங்கு தொடராக நடந்தபோது முன்னிட இருக்கையை பிடிக்க மதில் பாய்ந்து பிடிபட்டு பொலிஸிடம் குட்டு வாங்கியது இந்த இடத்திலல்வா... தினகரன் விளையாட்டு விழாவினை இந்த புல்வெளியில் அலைந்தபடி தானே பார்த்து ரசித்தோம்.

-இந்த முற்றவெளியின் வரலாறே தனி வரலாறு.

மாட்டுவண்டில்ச் சவாரி பார்த்துவிட்டு இந்த முற்றவெளியின் முனியப்பர் கோவில் பின்புற, கோட்டை அகழி மதிலின் விளிம்பில் இருந்தபடி கச்சான் கடலை கொறித்த படி, எதிரே தெரியும் தூக்குமர கட்டடத்தையும் அதற்கு அப்பால் விரிந்த மாலை நேரசெவ்வானின் சுடரொளியையும் பார்த்துக்கொண்டே நேரம் போவது தெரியாமல் இருந்த காலம்....

எரிக்க எரிக்க... சுடுகலங்களின் வேட்டுக்கள் தாக்க...தாக்க... இன்னமும் முனியப்பர் அப்படியே.. அசையாது கம்பீரம் காட்டியபடி அந்தக்கோயில் அப்படியே... யாழ்ப்பாணத்தானைப் போல்..

-அதோ அதையடுத்த விளையாட்டரங்கில் பார்வை பதிகையில்... அந்த மகாஜனா- ஸ்கந்தவரோதயா கல்லூரிகளுக்கிடையேயான 'சம்பியன் கப்' உதைபந்தாட்ட போட்டி நாட்கள் முன்னே விரிகின்றனவே..

-அதற்கு அப்பால் இருந்த பொலிஸ் நிலையமும், அடுத்திருந்த மாநாகரசபைக் கட்டடமும், எதிரேயிருந்த சுப்பிரமணியம் பூங்காவும் அதற்கப்பால் இருந்த நீதிமன்ற வளாகமும். எங்கே..? போர்கொண்டே போயிற்றே...

-இரண்டரை நூற்றாண்டு கால எமது அடிமை வரலாற்றின் சின்னமான அந்தக்கோட்டை... ஒல்லாந்தர் கட்டிய பிரமாண்டமான கோட்டை.... எமது மக்களின் வீரம் செறிந்த போர் துவம்சம் செய்து விட்டது. அந்தக் கோட்டையின் பிரமாண்டத்தை பண்ணைப்பாலம் பக்கம் நின்று தான் பார்க்கவேண்டும். இந்தக்கோட்டையில் இருந்துகொண்டு தான் ஒல்லாந்தர், ஆங்கிலேயர்,சிங்களவர்கள்- இந்தியர்கள் , பின் மீண்டும் சிங்களவர்கள் எம் மீது ஆக்கிரமிப்பு ஆட்சியை நடத்தினார்கள்.

அதோ அந்த மூலைப்பகுதிக்குள் நின்றுகொண்டுதானே.... ரஷ்யா விண்வெளி வீரர் யூரிக்காரினை நான் பார்த்தேன்.....

மாநகரசபையில் 'அகன்ற திரை'யுடன் (70 mm) அமைக்கப்பட்ட றியோ தியேட்டரில் 'கவுண்ட் ஓவ் மியூசிக்' 'மை பெயர்லேடி', 'றயன்ஸ் டோட்டர்' என்ற அற்புதமான படங்களைப் பார்த்து விட்டு பொன் கொண்டல் மரம் பூச்சொரியும் வீதி வழியாக நடந்து வரும் போது ஒரு விதமான சந்தோஷம் ஏற்படுமே... அதைவிட அலாதியானது வேறெதுவுமில்லை.....

ஆறுமுகநாவலர் கற்பித்த மத்திய கல்லூரியும் அதன் எதிரேயிருக்கும், விளையாட்டு மைதானமும் கலகலப்பிற்கு பஞ்சமில்லாத இடங்கள்.

காலத்தை வென்று நிற்கும் மணிக்கூட்டுக் கோபுரம் இவ்வளவு போரின் அனர்த்தங்களுக்கும் முகம்கொடுத்து இப்போது மீண்டும் புதுப்பொலிவு காட்டி புத்தியிர்த்து நிற்கிறதே...! அதுவும் யாழ்ப்பாண மண்ணில்தானே வேர்விட்டு நிக்குது!,

வெள்ளைக் கலையுடுத்த கலாவள்ளியாக காட்சிதரும் யாழ். நூலகம் தன் அகத்து நூலையெல்லாம் தீ மனத்தோர் தீக்கரையாக்கி ரசித்த பின்னர் கருமை போர்த்தி சோகம் ததும்ப நின்ற கோலம் இன்னமும் மனதைப் பிசைகிறதே....நூலகம் மட்டும் அதனகத்திலிருந்த நூல்களையிழந்து வெறுமையான களஞ்சியம் போலிருக்கிறதே.... முகில்கள் மீது நெருப்பெழுதிய அந்த நாள் நள்ளிரவு போதின் மன அழுத்தம் இன்னமும் அப்படியே.... அன்றைய நாள் விடியும் போது இந்த இடத்தை நோக்கி நானும் எனது நண்பன் பாலாவும் செல்லும்போது மணிக்கூட்டு வீதியில் எரிந்து அரைகுறையாகக் கருகி .... காற்றில் பறந்து வந்து வீழ்ந்து கிடந்த அந்த பேப்பர் துண்டை எடுத்துப்பார்த்தபோது நெஞ்சமே கருகியது.....

அது பாரதியார் கவிதைகள். புத்தகத்தின் ஒரு தாள்... கையில் எடுத்து படித்தது இன்னமும் ஒரு வரலாற்று ஆவணமாய் பாதுகாத்துவரும் அந்தத்தாளில் இருந்த வரிகளில் ஒன்று....

'கண்ணீரால் காத்தோம் கருகத்திருவுளமோ...'

இதன் பின்னர்தானே வரலாறு முற்றிலும் தலைகீழாய் மாறத் தொடங்கியது.

' ஒவ்வொரு தமிழனும் ஒவ்வொரு தீப்பந்தமாய்' மாற வேண்டியதன் அவசியத்தை உணர்த்திய நாள்அதுவல்லவா.....

இப்போது அதை எரித்தவர்களே அதற்கு வெள்ளை மையும் அடித்துவிட்டார்கள்.... தங்களினால் ஏற்படுத்தப்பட்ட கறையை மட்டுமல்ல தங்களின் ஆத்ம அசிங்கத்தையும் மறைக்கும் பணிதான் இதில் பளிச்சிடுகிறது.

வரலாறு எதையுமே தள்ளிவிடாது அனைத்தையும் உள்வாங்கி பதிவு செய்து வரும் தலைமுறைகளுக்கு வழங்கியே தீரும்....

இந்தப் பகுதியெங்கும் ஒரு காலத்தில் கூடிய தமிழ் மானிடர் இடையில் திக்கற்றும் திசையற்றும் செல்ல.... ஆக்கிரமிப்பு வெறியர்களின் ஈனச்சுவடுகளின் அழுத்தம் தாங்காது இந்தமண் எப்படியெல்லாம் தன் ஆத்மாவுள் அலறியிருக்கும்.

■■■■

கனக்கும் மனதுடன் பார்வை வீரசிங்கம் மண்டபத்தின் எதிரே பதிகிறது. அந்த நினைவுத் தூண்கள்..... வெள்ளையடித்து பளீரெனத்தெரியும் அந்தத் தூண்கள் தமிழீழ மக்களின் வரலாற்றில் அடக்குமுறை பேரினவாதிகளதும் அவர்களது அடிவருடிகளதும், அவர்களுக்கு ஏவல் பணிபுரியும் காவல்படையினரதும் காட்டுமிராண்டித்தனத்தின் அடையாளமாக அல்லவா அவை நிற்கின்றன.

அந்தத் தூண்கள் எத்தனைதரம் இடிக்கப்பட்டிருக்கும், சிதைக்கப்பட்டிருக்கும் அடையாளமே இல்லாமல் செய்யப்பட்டிருக்கும்?


ஆனால் அவையும் சாம்பலில் இருந்து உயிர்க்கும் பீனிக்ஸ் பறவைகள் போல் ...

இதோ மீண்டும் இன்றும் அதிக வலிமையுடன், அதிக உறுதியுடன் நிமிர்ந்து கம்பீரம்காட்டி நிற்கின்றன.













1974இன் தைத் திங்கள் பத்தாம் நாள் அன்றைய தினம்.... தமிழர் திருநாள் - பொங்கல் பெருநாள் வர நான்கு தினங்களே இருந்த சமயம் அதுவும் ஒரு மானிடத்தின் தமிழ்க்கூடல் நாள்தான்... உலகத் தமிழ் மானிடத்தின் ஒன்று தமிழ் குறித்து அதன் பெருமை குறித்து அதன் எதிர்காலம் குறித்து ஆராயும் உலகத்தமிழராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்த நேரம் .... இரவு.... எங்கும் ஒளி வெள்ளம், பரந்துவிரிந்த முற்றவெளிப்பரப் பெங்கும் பிரதான வீதியை மூடி பெருக்கெடுத்து நிறைந்து ததும்பும் தமிழ் மக்கள் வெள்ளம்.....

இதே வீரசிங்கம் மண்டபத்தின் முன்புறம் அமைக்கப்பட்டிருந்த பெருவரங்கில் அனைத்துலக தமிழறிஞர்கள் குழுமியிருந்தனர்.

எங்கும் தமிழுணர்ச்சி,பொங்கும் தமிழ் எழுச்சியென யாழ்ப்பாண நகரமே தமிழ்க்கோலம் பூண்டிருந்தது.

தைப்பொங்கலுக்கு முன்னேயே... தமிழ் பொங்கல் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. தமிழகத்திலிருந்து வந்த பேராசிரியர் நயினார் முகம்மது தமிழுணர்ச்சி மேலிட தமிழின் பெருமையை அடுக்கடுக்காக அழகு தமிழில் கூறி தனது பேருரையை நிகழ்த்திக்கொண்டிருந்தார்......

உலகிலுள்ள மொழிகளுள் மூத்த தமிழின் மேன்மை குறித்த அவரது பேச்சில் கட்டுண்டு ஒன்றியிருந்த மக்கள் தாங்களும் தமிழர் என்ற பெருமிதம்பொங்க சிலையாய் இருந்தனர்.

பேராசிரியர் நயினார் முகம்மது உணர்ச்சி பீறிட உச்சஸ்தாயியில் உரை நிகழ்த்திக்கொண்டிருந்த அந்தக்கணத்தில்தான் ......

பொறுக்காத பேரினவாத வெறிமிக்க சிறிலங்கா அரசின் காவல்ப்படையினர் தமது வெறியாட்டத்தை நடத்தினர்.

மின் வயர் துண்டிக்கப்பட்டன.... கண்ணீர்ப்புகைக்குண்டுகள் வீசப் பட்டன.மக்கள் அல்லோலகல லோலப்பட்டனர்.... திக்குத்திசை தெரியாது ஓடினர்,மரண ஓலம் எழுந்தது. எல்லாமே சிலமணித்துளிகளுள் நடந்து முடிந்தன.

மறுநாள் போது - இதோ இப்போது இங்கு வெறும்கற்றூனாய் நிற்போரின் மரணச்செய்திகளையும் ஏனையோர் பலர் குறித்த அவலச்செய்திகளுடனும் விடிந்தது.

இவையனைத்தும் நடந்து இருபத்தெட்டாண்டுகள் ஆகிவிட்டன.....

ஆனால் இப்பத்தான்நடந்து முடிந்தது போன்று நெஞ்சை இன்னமும் அழுத்துகின்றதே...

இந்தக் கற்றூண்கள் -வெறும் நினைவுச் சின்னங்கள் மட்டுமல்ல... தமிழ் மக்களின் குறிப்பாக தமிழ் இளைஞர்களின் எழுச்சியின் அடையாளச் சின்னங்களும் கூட..... இப்போதும் இதோ இந்தச் சின்னங்களின்... அதே வீரசிங்கம் மண்டபம்..... இரண்டுமே எதிரிகளின் எத்தனையோ தாக்குதல்களுக்கும்-சிதைத்தலுக்கும் முகம்கொடுத்து இன்னமும் ஒன்றையொன்று பார்த்தவண்ணம் நிமிர்ந்து பூரிப்புடன் நிற்கின்றன.... சரித்திரச் சான்றுகளாக.... வரலாற்றுச் சின்னங்களாக....

இப்போது மீண்டும், மானிடத்தின் தமிழ் கூடல் நிகழ்வுகள் மற்றொரு தமிழராய்ச்சி மாநாட்டின் சாயலாகவே நடந்து கொள்கின்றன.

முன்னர் 1974இல் பேராசிரியர் நயினார் முகம்மது பேசிய குரலின் அதே கம்பீரத்துடனும் அதனைவிட இன்னொரு பங்கு மேலான தமிழின உணர்வுடனும் இன்னொரு பேராசிரியர் பேசிக்கொண்டிருக்கிறார். மண்டபத்தின் வெளியேயுள்ள ஒலிபெருக்கியினூடாக அது திசையெங்கும் பரவுகிறது.

அவரும் நயினார் முகம்மது போன்று ஒரு இஸ்லாமிய தமிழரே... கவிஞர் இன்குலாப் என நன்கு அறியப்பட்ட பேராசிரியர் காஹுசல் ஹமீதுதான் அவர்.

ஒரு கணம் உடல் சிலிர்க்கிறது, வரலாறும் சிலிர்க்கிறது.

இப்போது 1974இல் விடப்பட்ட குறையிலிருந்து வரலாறு தொடர்கிறது.

அப்போது அருகிருந்து வந்து கண்ணீர்ப்புகைக்குண்டுவீசி மக்களின் தமிழுணர்வைக் குழப்பிய பொலிசார் இருந்த இடத்தின் அடையாளமே இல்லை.

ஆனால் எமது அடையாளம் இன்னமும் அப்படியே.....

தனது சாம்பலில் இருந்தே உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போல்.....

சற்றுத் தூரத்தில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அண்மையில் காவலரண் ஒன்றில் இருக்கும் அந்த சிங்கள இராணுவச் சிப்பாய்களுக்கும் சற்று முன்னர் சிங்கள அறிஞர் ஒருவர் ஆற்றிய உரை கேட்டுத்தானே இருக்கும்...!

வரலாறு மீண்டும் தமிழினத்தின் மிடுக்கை ஓங்கி பறைசாற்றி உயிர்ப்பெழுச்சிகொள்ள வைத்துள்ளதை அவர்களால் புரிந்துகொள்ளமுடியுமா?

'தமிழ்' என்ற பீனிக்ஸ் பறவையின் உயிர்த்தெழுகை சிறகடிப்பின் ஒலிக்காற்றில் கலந்து திசையெங்கும் வியாபிக்கின்றது.

ஆமாம் கவிஞர் 'இன்குலாப்'பின் உணர்ச்சி மிக்க உரை பேராசிரியர் நயினார் முகம்மது வின் '1994'இல் ஆற்றிய உரையின் தொடர்ச்சியாக பிரவாகம் கொள்கின்றது.

அது தமிழ் மானிடம் வெல்லும் என்பதற்கான கட்டியமாகவும் அமைந்திருப்பதை உணரக் கூடியதாக உள்ளது. ❋❋

# ஊர்கோலம்

## சாமிக்கோலம்

மனிதர்களை விடவும்வாகனங்கள் வன்னிப்பகுதியில் அதிகமாகிவிட்டதோ என்ற சந்தேகம் இப்போது அனைவர் மனதிலும் எழுவது இயல்பாகிவிட்டது.

விதம் விதமான மகிழூந்துகள், பேருந்துகள், 'மோட்டார் சைக்கிள்கள், பள்ளம்மேடு பாராத புழுதி கிழப்பி விரைவதைப்பார்க்கும்போது இவ்வளவு வாகனங்களும் எங்கிருந்து வந்தன என்ற வியப்பும் எழவே செய்கிறது. கிரவல் வீதி, கிடங்கு வீதி, குறுகல் வீதியென எங்கும் வாகனங்களின் விரைவு தான்... யாழ். கண்டி வீதியில் வாகனங்கள் காற்றாய் பறக்கின்றன. மின்னலடிக்கும் விரைவு.

விபத்தில்லாத நாளே இல்லை... சாரதிகளோ தங்கள் உற்சாக ஓட்டத்தை குறைப்பதாகவும் இல்லை.

என்னைப்போல் பாதசாரிகளுக்கேற்றதாக நடைபாதையும் இல்லை.

விதி வீதிகளில் நிர்ணயிக்கப்படும் காலமிது.

வாகனதாரிகள் பொதுமக்களை மனிதனாக நினைப்பது மிகவும் அருகிவிட்டதொன்று.

இனி மழையும் மெல்ல மெல்ல அருக்கூட்டத் தொடங்கிவிட்டது.

இவ்வளவு நாளும் புழுதி மண்டலத்தை வாரிவழங்கிய வாகனச்சவாரி மன்னர்கள் இனி சேறாபிஷேகம் செய்யப்போகிறார்கள்.

கிரவல் வீதிப் புழுதியைப் போல் கிரவல் வீதிச் சேறும் விஷேடமானது. உடைகளில்- அதுவும் வெள்ளை உடைகளில் பட்டால்... வெற்றிலைத்துப்பல் பட்டது போன்றிருக்கும்.

பாதசாரிகளின் சிற்றூர்திகளில் செல்வோரின் அவலங்கள் பேரூர்திக்காரர்களுக்கு புழுகத்தை ஏற்படுத்தும் விடயம் என்பதை சொல்லத்தேவையேயில்லை.

எனது நண்பர் ஒருவர், வெள்ளை வேட்டிக்காரர் பளிச்சென்று இருப்பார்.

கடந்தவாரம் 'காவி'யுடையணிந்தவராகக் காணப்பட்டார். என்ன இது திடீரெனச் சாமிக்கோலம்' என்றேன்....விசுவமடு வீதி - கிரவல் வீதிப் புழுதி குளித்து வந்த என்னை வள்ளிபுனத்தில பெய்த மழை இப்படி காவியுடைச்சாமியராக்கிவிட்டது. என்றாரே பார்க்கலாம்...!

▼▼▼

## வெறிப்பேச்சு...

புதுக்குடியிருப்பு கள்ளுத் தவறணை ஒன்றிலிருந்து வெளியேறிய இருவர் பேசிக்கொண்டது......

'வரவர கள்ளும் சப்பென்று கிடக்குது... கசிப்புக்குடிக்க பயமா இருக்கு..... சாராயம் குடிக்க உழைப்புக் காணாது என்ன வாழ்க்கை? வெறுத்தே போச்சு...'

'சொல்லுறன் அதன்படி செய்யன்'

'என்ன யோசனை....'

'நஞ்சைக் குடியன் எல்லாம்சரியாகிவிடும்.....'

'அப்ப இவ்வளவு நாளும் குடிச்சதை அமுதம் என்டே சொல்லுறாய்... மடையா...'

▼▼▼

## என்ன செய்யலாம்

ஆஸ்பத்திரிவாசல்.....

'என்னப்பா பெருமூச்சு விடுறாய்?'

பின்னயென்ன டொக்டர் இருக்கிற நாளிலை மருந்து இருக்காது.... மருந்து இருக்கிற நாளிலை டொக்டர் இருக்கமாட்டார்.....'

'ரெண்டும் இருக்கிற நாளைப்பார்த்து வாறதுதானே....'

'நீ சொல்லுறதும் சரிதான்... அண்டைக்குப் பார்த்து நோயிருக்காதே.....!'

▼▼▼

பாதசாரி

# ஓ...அப்படியா!



“முஸ்லிம்களால் இன்றைய சமாதானம் குழம்பக் கூடாது என நான் இதுவரை சொல்லி வந்ததை வாபஸ்பெறுகிறேன். முஸ்லிம்களும் பாதிக்கிறார்கள் என்று கூறப்பட்டும் தங்கள் உரிமைகளுக்காகக் குரலெழுப்ப வேண்டியுள்ளது கிழக்கில் இன்றும் முஸ்லிம்கள் பாதிக்கப்படுகின்றார்கள். தங்களின் போராட்டத்தை முஸ்லிம்கள் கொச்சைப்படுத்துகின்றார்கள் என தமிழர்கள் தரப்பில் கூறப்படுகிறது. கொச்சைப் படுத்துகிறார்கள் எனக் கூறுவது தவறு பாதிக்கின்றார்கள் என்று கூறட்டும் பாதிப்பு இல்லாமல் முஸ்லிம்களுக்கு சமாதானம் கிடைக்காது”

'அமைச்சர் ரவூப்ஹக்கீம்
முஸ்லிம் மீடியா போரம்' கருத்தரங்கில் கூறியது.



“விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டை எவ்வாறு ஜே.வி.பி ஏற்பதில்லையென்று உறுதியுடன் இருக்கிறதோ அதைப்போலவே கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்குத் தனியலகு வழங்குவதையும் ஜே.வி.பி எதிர்க்கிறது. இவ்வாறான தனியலகுகள் பற்றிச் சிந்தித்தால் இனி மலையக மக்களும் தனியலகு கேட்பார்கள். இவையெல்லாம் இலங்கையின் ஒற்றுமையைப் பாதிக்கும்”

ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர்
விமல் வீரவன்ச



“ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு நாட்டிலுள்ள மக்களின் விருப்பு வெறுப்புக்களை புரிந்துகொண்டு செயற்படவில்லை. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது சனநாயகத்திற்கு விரோதமான பல சட்ட மூலங்களை அரசாங்கம் இயற்றி வருகின்றது. இந்த அரசு மக்களுக்காக செயற்பட்டு வருவதாகக் கூறி வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது.”

எதிர்க்கட்சித்தலைவர்
மகிந்த ராஜபக்ஷ.



“அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பான நிகழ்ச்சி நிரல்களை முன் கூட்டியே பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.... அப்படி இல்லாத பட்சத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி சந்தேகப் பார்வையுடன் நோக்குவது தவிர்க்க முடியாததாகிவிடும்.... அத்துடன் நாம் அதனை மக்களின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டிய நிலையும் ஏற்படும்”

பொ.ஐ.முன்னணி செயலாளர்
**D.M.** ஜெயரத்தனா.



பிரதமர் ரணில் தன்னிடம் ஒரு பானை சோறு இருந்தாலும் அதனைப் பங்கீடு செய்யும் கரண்டி சனாதிபதியிடம்தான் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர் இன்று அனைத்து நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டிருப்பதால் அவர்தன் விருப்பத்தின் படி நாளை எவரை வேண்டுமானாலும் பிரதமராக நியமனம் செய்ய முடியும் ரணிலை பதவி நீக்கவும் முடியும்”

பண்டாரநாயக்கா சிலை திறப்பு
விழாவில் அனுரா பண்டாரநாயக்கா

# இயற்கை தரும் இனிமையான திறமை

நம்முடைய வாழ்க்கையின் அமைப்பும் நீரூற்று போலத்தான்! சுனை போன்ற மழலை, துள்ளிவிழும் அருவியென இளமை, நதியென முதுமை, கடலோடு நதி கலப்பது போல கடைசிப் பயணம் இப்படி வாழ்வுக்கோலம் எல்லாம் சுகமும் சுவையும் சுமையும் வளைய வருகிறது.

மழலையில் தொடங்கி இளமையில் ஓங்கி முதுமையில் ஒடுங்கி இறுதியில் இறப்புடன் கலக்கும் இடைக்காலத்தில் நிகழ்கின்ற எல்லா நிகழ்ச்சிகளின் தொகுப்பே வாழ்க்கையாகிறது.

தென்றல் தவழ்கிறது. நிலவு ஒளி தருகிறது. பரிதி காய்கிறது. எல்லாம் இயற்கையின் இனிய போக்கு. அதனதன் கடமையைச் செம்மையாகச் செய்து நமக்கு உற்சாகம் ஊட்டுகிறது.


அதே போல நாமும் இயற்கை தந்த வாழ்வினைச் செம்மையுடன் வாழ்ந்து நற்பேறு பெற வேண்டும்.

உலகமென்பது ஒரு விடுதி. அதனுள் வருவோரும் வந்து தங்குவோரும் திடீரெனப் பிரிவோரும் இருப்பார்கள்.

விடுதியின் விதிகள், அமைப்பு, வசதி முதலியவற்றைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப நம்மைச் சரி செய்து கொண்டால் இன்பமாக இருந்துவிட்டுப் போக முடியும். உல்லாசமாக உலாவி வர முடியும்.

விடுதியின் அமைப்பைப் புரியாமல் விதிகளின் குறிப்பைத் தெரியாமல் தாறுமாறாக நடப்பவர்களின் காலம் கசப்பாகத்தான் இருக்கும். விடுதியே சிறையாக, மருத்துவக் கூடமாகத் தோன்றும்.

நம்முடைய அறிவை உபயோகித்துத் திறமையுடன் செயலாற்றும்போது எப்படி நம்முடைய வாழ்க்கை நல்ல படியாக அமை யாமல் போய்விடும்? அறிவும் திறமையும் ஆண்மையின் அடையாளம்!



குருவி அமைக்கின்ற கூடு, கரையான் கட்டுகின்ற புற்று, தேனீக்கள் செய்திருக்கும் தேன்கூடு இவை யெல்லாம் அவற்றிற்கு ஏற்ற வகையில் உள்ள அறிவையும் திறமையையும் உபயோகித்து உருவாக்கப்பட்ட சின்னங்கள்.

நம்முடைய வாழ்க்கையை இன்பம் நிறைந்ததாக ஆக்கிக் கொள்ள வேண்டுமானால் மேலே நடந்து செல்ல வேண்டும். எதிர்காலம் நமக்கென்று இருக்கிறது. அதனை நோக்கிச் சென்று கொண்டே இருந்தால்தான் வாழ்க்கையில் வளமுடன் வாழ முடியும்!

வாழ வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டால்தான் வாழ்க்கையில் வழியும் தெரியும். விவரமும் விளங்கும். வெற்றியும் கிடைக்கும்.

'தனக்குள்ளே என்ன செய்ய வேண்டும் என்று கேட்டுத் தெரிந்து வாழ்ந்து கொள்ள முடியாத ஒரு மனிதனை எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை!' என்று கூறுகிறார் கன்பூசியஸ்.

எங்கோ எப்போதோ சில மனிதர்கள் தாரகைகளைப் போல நம் கண்ணில் பட்டுக் கருத்தில் நிலைத்து விடுகின்றனர்.

பெரும்பாலானவர்கள் நடந்த தடத்திலேயே நடந்து தங்கள் சுவடுகள் அழித்துக்கொண்டு வாழும்போது-

மேதைகள் புதிய பாதைக்கான சுவடுகளைப் பதித்து முன்னோடிகளாய் நிற்கின்றனர்.

அவர்களின் வாழ்க்கை, இலட்சியத்தைத் தங்கள் இதயத்தில் இசைத்துக் கொண்டவர்களுக்கு வழி காட்டும் விளக்காகிறது.

இலட்சியமில்லாத பாமரப் பயிருக்கு வணக்கத்துக்குரியதாய் ஆகிறது. அது போன்ற மேதைகளின் வாழ்க்கையை இங்கே பின்பற்றுவதற்குரிய வாழ்க்கை என்று நினைத்துக் கொள்ள வேண்டும்.

இழப்பதற்கும் உழைப்பதற்கும் தயங்காத மனிதர்களின் வாழ்க்கை நமக்கு வழி காட்டும். உண்ணும் உணவுக்கும் சுவாசிக்கும் காற்றுக்கும் கணக்குப் பார்த்துக் கொண்டு நடமாடும் நம் மத்தியில்-

அவர்கள் இணையற்ற மேதைகள் அல்லவா! குறைந்த பட்சம் அவர்களை இனங்கண்டு அவர்கள் கருத்தோடு மனத்தளவிலாவது இணக்கம் கொள்வது, நாமும் அவர்களைப் போல ஆக வேண்டும் என்ற உறுதியை உள்ளத்தில் ஏற்படுத்தும்.

உலகை உருவாக்கிய உத்தமர்களிலிருந்து, கருவிகளைக் கண்டுபிடித்துத் தந்த கண்டுபிடிப்பாளர் வரை இந்தவித அமைப்பிற்கு உட்பட்டவர்கள்தான்.

அவர்களுடைய சாதனைகளின் வித்து தானாகவே மனத்தில் திடீரென்று பளிச்சிட்டவைதான்.

பெரிய அறிவாளிகளுக்குத்தான் இப்படி விஷயங்கள் பளிச்சிடும் என்று நினைத்து விடக்கூடாது. நமக்கும் இப்படிப்பட்ட விஷயங்கள் பளிச்சிடுகின்றன.

ஆனால் நாம் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் சிந்திப்பதில்லை. அதனை அலட்சியமாக விட்டு விடுகிறோம்.

சமையல் வேலையில் மூழ்கியிருக்கும் வீட்டுப்பெண்கள் மனத்தில் என்ன புதிய சிற்றுண்டி செய்யலாம் என்று பளிச்சிடுவது முதல், எந்த இடத்தில் வீடு கட்டினால் நல்லது என்பதுவரை, எவ்வளவோ விஷயங்கள் மனத்தில் அடிக்கடி பளிச்சிட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்த பளிச்சிடும் எண்ணங்களை ஏற்ற வகையில் பயன்படுத்தினால் நிச்சயம் நாமும் வெற்றி பெற முடியும். மனிதனாகப் பிறந்த எவருக்குமே இது சாத்தியமாகும்.

நமது சிந்தனைக்கு ஓய்வு கொடுத்து, அதன் பின் சிந்தனையைச் சீராக்கிச் செயல்பட்டால் சிறந்தவர்களாக மாற முடியும் என்பது உண்மை!

இதன் அடிப்படையில்தான் பல புதிய நாடுகள், புதிய சமுதாயங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அத்தகைய சாதனைகளைச் செய்தவர்கள் எத்தகைய வீரம் செறிந்தவர்களாக விளங்கினார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது-

நம்மிடத்திலேயும் பொதிந்திருக்கும் அந்த அற்புத ஆற்றலை உணர்ந்து கொள்ள முடியும்.

எதையும் வீரத்துடன் ஏற்றுத் தீரத்துடன் போரிடும் சக்தியால்தான் மனித இனம் வளர்ச்சி பெற்று வருகின்றது. நாகரிகம் மேம்பட்டு வளர்கின்றது.

எக்ஸ்ரே படம் பிடிக்கும் எக்ஸ்ரே கதிரைக் கண்டு பிடித்த ராண்ட்ஜென் என்ற விஞ்ஞானி எக்ஸ்ரே கதிரால் தாக்கப்பட்டு குடலில் புற்று நோய் வந்து இறந்தார்.


இதே போல, கிளாரான் ஸ்டோரி என்ற விஞ்ஞானி எக்ஸ்ரே கதிரால் தாக்கப்பட்டு, இரண்டு கைகளிலும் புற்று நோய் ஏற்பட்டுக் கைகள் எடுக்கப்பட்டு இறந்தார்.

தங்களுடைய வாழ்வு சிதைந்து போனாலும் சமுதாயத்தில் பலரும் பயன்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் திறமையை உபயோகித்தபடியினால் இன்றும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ◆

நன்றி
-மெர்வின்-

ஒவ்வொருவரிடமும் அறியாமை உண்டு. வெவ்வேறு பொருள்களைப் பற்றி. - வில் ரோஜர்ஸ்


# தகவல் தொழில்நுட்பப் புரட்சியும் அதன் விளைவுகளும்



இன்றைய நவீன உலகில் மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கும் துறைகளில் தகவல் தொழில்நுட்பம் என்னும் துறையே முன்னணியில் உள்ளது. வானொலி, தொலைக்காட்சி போன்றவையும் பின்னர் தொலைத் தொடர்பு சாதனமுமே ஆரம்ப கால தகவல் தொழில்நுட்ப சாதனங்களாகக் காணப்பட்டன. எனினும், கடந்த நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் அறிமுகமான 'தகவல் தொழில்நுட்ப புரட்சி' என்னும் பதத்தோடும் அதனோடு புதிதாகப் புகுந்து கொண்ட வலைப்பின்னல் தொலைநகல், மின்னஞ்சல் போன்ற சாதனங்களோடு கனணியும் இணைந்து கொண்டதோடு இது உண்மையிலேயே மக்கள் மனங்களில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியும் விட்டது.



இன்று உலகின் எல்லாத் துறைகளிலுமே தகவல் தொழில் நுட்பப் புரட்சியின் தாக்கம் காணப்படுகிறது. இதனால், இன்று உலக சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் அதனைக் கற்றிருக்கவோ இல்லை அது பற்றி அறிந்திருக்கவோ வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. இவ்வாறெல்லாம் முக்கியத்துவம் பெற்று விட்ட இத்துறைக்கு அறிஞர்களால் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.



தகவல் தொழில்நுட்பம் என்பது கனணித் தொழில்நுட்பத்தினை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் இணைத்துக் கூறுவதற்கு விபரிக்கும் ஒரு பதமாகும். தகவல் தொழில் நுட்பம் என்பது ஒரு தகவல் முறைமையின் தொழில்நுட்பக் கூறு அல்லது ஒரு நிறுவனத்தின் முழுமுறைமையின் சேகரிப்பு எனலாம்.

இவ்வாறு இன்னும் பல வரைவிலக்கணங்கள் இதற்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், இவ்வரைவிலக்கணங்களூடாக தகவல் தொழில்நுட்பப்புரட்சியின் கதாநாயகன் கனணி தான் என்பதனைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

இத்துறையின் செயற்பாடானது விளையாட்டுத் துறையில் ஆரம்பித்து பாரிய நிறுவனங்கள்-அரச அலுவலகங்கள் வரை பரந்துபட்ட அளவில் காணப்படுகிறது. ஆரம்ப காலங்களில் ஒரு தொழிற்சாலையின் அமைவிடத்திற்கு போக்குவரத்து வசதி எவ்வளவு அவசியமானதாக நோக்கப்பட்டதோ அதேபோன்று இன்று இவற்றின் உற்பத்திக்கு உதவும் மூலப் பொருட்களில் ஒன்றுபோல் ஆகிவிட்டது இந்த தகவல் தொழில் நுட்பம்.

இந்தத் தகவல் தொழில்நுட்பப்புரட்சியால் உலகம் பல மாற்றங்களை பெற்றிருக்கிறது. இன்றைய உலக வல்லரசுகளினதோ அல்லது அவ்வாறான குழுக்களினதோ கருத்துக்கள் என்றில்லாமல் எல்லோருடைய கருத்துக்களையும் எல்லோரும் புரிந்து கொண்டு சுயமாகவும் சுதந்திரமாகவும் ஒரு முடிவினைத் தாமே மேற்கொள்ள இந்தத் தகவல் தொழில்நுட்பம் பெரும் பங்களிப்பை ஆற்றி வருகிறது.

ஒரு நாட்டின் விரிவான அபிவிருத்திக்கும் அதில் வாழும் மக்களின் தொழில்நுட்ப திறனை சர்வதேச தரங்களுக்கேற்ப உயர்த்தவும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் உலகப் போட்டிகளுக்கு ஈடு கொடுக்கவும் வளங்களின் உச்ச பயனைப் பெறவும் வேலையில்லாத் திண்டாட்டங்களை ஒழிக்கவும் இத்துறை பேருதவி புரிகிறது.

இன்றைய, பரபரப்பான உலகில் தமது அன்றாடக் கடமைகளையே தீர்த்துக் கொள்ள வகையின்றி அந்தரிக்கும் மக்களுக்கு இத்துறை ஒரு வரப்பிரசாதமே. ஏனெனில் தற்கால சனநெருக்கடியும் போக்குவரத்து நெருக்கடியும் நிறைந்த உலகில் தமது விரல்களின் அசைவுகளின் மூலமே தேவையின்றிய செலவுகளையும் அலைவுகளையும் தவிர்த்து மிகவும் திருப்திகரமான முறையில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முடிகிறது.

பாரிய நிறுவனங்களும் மற்றும் பல்வேறுபட்ட அமைப்புக்களும் தங்களின் பண்டங்களையும் சேவைகளையும் மிகக்குறைந்த முதலீடுகளோடு மக்கள் மத்தியில் தங்களைப் பிரபல்யப் படுத்திக் கொள்ளவும் தமது நோக்கங்களைப் பூர்த்தி செய்யவும் மிகவும் குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெறவும் இந்தத் தகவல் தொழில்நுட்பம் வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இவ்வாறெல்லாம் மனித முன்னேற்ற வாழ்வியலோடு ஒன்றிப் போய்விட்ட இன்றைய நவீன தகவல் தொழில்நுட்பம் அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டில் எவ்வளவு பின்னிப் பிணைந்திருக்கிறதோ அதே போல் அவர்களின் சீரழிவிற்கும் காரணமாய் இருந்துள்ளமையையும் இருக்கின்றமையையும் மறுத்துவிட முடியாதன.



மனித வலுவைக்குறைத்து அதேவேளை அதன் சக்தியை உச்சநிலைக்கு கொண்டு செல்லல், விளம்பரம், சினிமா என்று அவரவர்க்கு ஏற்ற வகையில் மனிதர்களின் மனங்களை ஆட்டிப் படைக்கிறது இத்துறை.

இத்துறைகளோடு நேரடியாகத் தொடர்புடையோர் மட்டுமல்லாமல் இவற்றின் வெளியீடுகளை நுகர்ந்து கொள்வோரே இதனால் அதிக பாதிப்புக் குள்ளாகின்றனர். தற்காலத்தில் எங்கும் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி என்று வெகு சாதாரணமாகி விட்டது. அன்றாடம் நாம் பயன்படுத்தும் 'டோர்லைட்'களில் கூட வானொலிக் கருவியின் இணைப்பு. இவ்வாறான பல்வேறு உப கரணங்களை நாம் ஒரே வேளையிற் கையாள்வதால் எமது கவனங்கள் பல்வேறு திசைகளில் சிதறி



விரும்பத்தகாத எதிர் விளைவுகளையெல்லாம் ஏற்படுத்தி விடுகிறது.

இவ்வாறெல்லாம் பல்வேறு பெறுபேறுகளையும் தந்து கொண்டிருக்கும் இன்றைய தகவல் தொழில்நுட்பப் புரட்சியை எமது சமுதாயமும் கற்றுக் கொண்டதோ இல்லையோ அதன் இறுதி வெளியீடுகளான பிரச்சாரப் பீரங்கிகளின் வாயில் சிக்கித் தவிப்பது உண்மையே.

அந்த வகையில் எல்லா நல்ல விடயங்களிற்குமே சில எதிர்மறையான விளைவுகளும் ஏற்பட்டு விடுவது வழமையே. ஏதோ ஒன்றைப் பின்னணியாக கொண்டு அது அரசியலாகவும் இருக்கலாம்: சமூகவியலாகவும் இருக்கலாம்: இவை அனைத்திற்கும் அப்பால் விளம்பரத் துறையாகவோ விஞ்ஞான ஆராட்சித் துறையாகவோ எதுவாகவும் இருக்கலாம். இவற்றில் ஒன்றைப் பின்னணியாகக் கொண்டு மக்களின் மனங்களைச் சூழ்ந்து கொண்டுள்ள இத்துறையின் விளைவுகளை சமூகங்களின் வழிகாட்டிகள் மிகத்தெளிவாக இனம் கண்டு அவற்றினை மக்களுக்கு புரிய வைத்து காய்களைத் தவிர்த்து கனிகளைக் கவர்வதன் மூலம் தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் புரட்சிகரமான பயனை எமது சமூகம் சரியான முறையில் பயன்படுத்த வகை செய்வது இவைகளோடு தொடர்புடையோரின் பொறுப்பு மிக்க கடமையாகும்.

**-குணாளன்-**

---

# உன்னாலும் முடியும்

**இ.சுடரொளி**

ஆபிரகாம்லிங்கன் வறிய குடும்பத்தில் பிறந்தவர். இவர் கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். கல்வியுடன் மட்டும் நின்றுவிடவில்லை. படிக்கிற நேரம் போக மிகுதி நேரத்தில் தந்தையுடன் சென்று வயல்வேலை செய்து வந்தார். இவரின் தன்னம்பிக்கையினாலும், விடாமுயற்சியினாலும், ஆர்வத்தினாலும் அமெரிக்க நாட்டின் சனாதிபதியானார்.

ஆபிரகாம் லிங்கன் மற்றவர்களுடன் பழகுவதிலும், மற்றவர்களுக்கு ஆபத்தான வேளையில் உதவுவதிலும் வல்லவர். இவருக்குச் சிறு வயதாக இருக்கும் போது தாயார் இறந்து விட்டார். தாயாரின் மறைவால் ஏற்பட்ட துயரத்தை அவரால் மறைத்துக் கொள்ள முடியவில்லை. இவரின் நண்பர்கள் நகைச்சுவைக் கதைகள் கூறி, சிரிக்க வைத்து அவரை அதிலிருந்து விடுபடச் செய்து வந்தார்கள்.

இப்படி வாழ்ந்து கொண்டிருக்கும்போது, சில வருடங்களின் பின் தந்தையார் மறுமணம் முடித்துக் கொண்டார். இவரின் சின்னம்மா, இவரைப் படிக்க வைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். அறிவு சார்ந்த புத்தகங்களை வாங்கிக் கொடுத்தார். ஆபிரகாம் லிங்கனுக்குப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் வளர்ந்து கொண்டு வந்தது.

இவரது பொழுதுபோக்கு வாசிப்பாகிவிட்டது. இவரின் கையில் புத்தகமிருந்தால் உணவையே மறந்து விடுவார். ஒரு நாள் இவர் அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு குரல் கேட்டது.

''தம்பி வந்து படு'' நீண்ட நேரம் படித்தால் கண்ணுக்குக் கூடாது'' அது அம்மாவின் குரல். புத்தகத்தை கீழேவைக்க மனம் வரவில்லை. அம்மாவின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காக விளக்கை அணைத்து விட்டு படுத்தார். இரவு முழுவதும் அந்தப் புத்தகத்தின் சிந்தனையாக இருந்தது. அந்தப்புத்தகத்தைப் படித்து முடிக்க வேண்டும் என்று ஆவலாக இருந்தார்.

அன்று இரவு கடுமையான மழை பொழிந்தது. வீடு ஒழுகியதால் அப்புத்தகம் நனைந்து விட்டது. அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்புத்தகத்தை 'கிரா போர்டு' விடமிருந்து இரவல் வாங்கியிருந்தார். அவரிடம் போய் எப்படிச் சொல்வது? அவர் ஒரு கோபக்காரர். என்ன செய்வது...? என்று பயந்து கொண்டே நின்றார். பின் துணிவுடன் சென்று ''உங்களுடைய புத்தகம் மழையில் நனைந்துவிட்டது, நீங்கள் என்ன தண்டனை தந்தாலும் ஏற்கத் தயார்'' என்று கூறினார். முதலில் கோபப்பட்டார். ''நீர் தந்தையுடன் வேலைக்குச் செல்லும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் எனக்குத் தோட்ட வேலை செய்ய வேண்டும்''என்று கூறினார். ஆபிரகாம் லிங்கனும் அப்படியே செய்தார். மூன்று நாள் கழித்து ''கிராபோர்''கூறினார். ''ஆபிரகாம் லிங்கன் நீர் இனி வேலை செய்ய வேண்டாம், உமக்கு நான் பரிசாக ஒரு பொருள் தரப் போகிறேன். அந்தப் புத்தகத்தை நீரே வைத்துக்கொள்ளும்'' என்றார். ஆபிரகாம் லிங்கனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவர் புத்தகத்தை மீண்டும் வாசிக்க வேண்டும் என்று ஆவலாக இருந்தார். அப்புத்தகத்தைப் படித்து முடித்தவுடன் ஓர் எண்ணம் தோன்றியது. ''நான் இந்நாட்டின் சனாதிபதியாக ஏன் வரக்கூடாது'' அவரின் எண்ணப்படி பின் நாளில் ஆபிரகாம் லிங்கன் சனாதிபதி ஆனார்.

முடியாது என்று ஒன்றும் இல்லை. அவர் எதுவாக நினைத்தாரோ அதுவாகவே ஆனார். அவரைப் போன்று நாமும் எது நினைக்கின்றோமோ அதை அடைய முயற்சிக்க வேண்டும்.

நான் ஒரு வேலையைச் செய்ய முற்படும் போது அவ்வேலையைத் திறமையாகச் செய்வேன் என்ற தன்னம்பிக்கை, துணிவு,உறுதி என்பன இருக்க வேண்டும். தன்னம்பிக்கை என்பதுவெற்றியை அடைவதற்கான பாதையாகும்.

> நான் ஒரு வேலையைச் செய்ய முற்படும் போது அவ்வேலையைத் திறமையாகச் செய்வேன் என்ற தன்னம்பிக்கை, துணிவு, உறுதி என்பன இருக்க வேண்டும். தன்னம்பிக்கை என்பதுவெற்றியை அடைவதற்கான பாதையாகும். தோல்வியைக் கண்டு மனம் தளரக் கூடாது மீண்டும், மீண்டும் முயற்சி செய்ய வேண்டும். அது விடா முயற்சியாக இருக்க வேண்டும்.

தோல்வியைக் கண்டு மனம் தளரக் கூடாது மீண்டும், மீண்டும் முயற்சி செய்ய வேண்டும். அது விடா முயற்சியாக இருக்க வேண்டும். தன்னம்பிக்கையின் இலக்கு வெற்றியடைவதேயாகும். தன்னம்பிக்கை இல்லாதவர்கள் வாழ்க்கை முழுவதும் துன்பத்தை அனுபவிப்பவர்களாவர்.

ஆபிரகாம்லிங்கன் ஒரு தடவை நாற்பது கிலோமீற்றர் தூரம்வரை நடந்து சென்று ஒரு காரியத்தை முடித்துவிட்டுத் திரும்பினார். இதற்குக் காரணம் அவரின் தன்னம்பிக்கையும், துணிவும், அசைக்க முடியாத மனவுறுதியும்தான்.

ஆகவே, முடியாதென்பது ஒன்றுமில்லை. நிறைய நிறையப் படிக்க வேண்டும். படிப்பதைக் கருத்தூண்றிப் படிக்க வேண்டும். அத்துடன் விளங்கிப் படிக்க வேண்டும் படித்தால்தான் பண்புள்ள மனிதர்களாகவும், உயர்ந்த மனிதர்களாகவும் நாம் மாறலாம். படிப்போடு மட்டும் நின்றுவிடாமல் நாம் ஒருவருக்கு நல்லதைச் செய்யும்போது எம் உள்ளத்திலும் நல்ல உணர்வுகள் ஏற்படும். ஆபிரகாம்லிங்கனைப் போன்று நாமும் வாழ்வோமாக. ◆

---

நம் அறியாமையை உணர்வதே, அறிவை எய்துவதற்கு முதல் படி. - ரிச்சாட் ஸிஸில்

# நறுக்கென....

## சந்திரிகாவும்-மகிந்தவும்.....





சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாவுக்கும் அவரது கட்சியைச் சார்ந்த எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான பனிப்போர் அப்படியே இருக்க இருவருக்குமிடையே ஒரு தற்காலிக சமாதானமும் அரசியல் நெருக்கடி நிலைகளைச் சமாளிப்பதற்காக ஏற்பட்டுள்ளதை அடுத்து சர்ச்சைக்கும், முரண்பாட்டுக்கும் இடம் தரும் விடயங்கள் குறித்து தற்போதைக்கு இருவரும் பேசுவதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

பொது எதிரியும், பொதுசன ஐக்கிய முன்னணியின் எதிரியுமான ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அவரின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் எதிரான அரசியல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும், அடுத்துவரும் இருமாதங்களுள் சனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக ரணிலின் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவுமே சந்திரிகா மகிந்தராஜபக்ஷவுடன் சமாதானக் கரம் நீட்டியுள்ளார் என்பது பொதுவாக அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஆகவே மகிந்த ராஜபக்ஷவுக்கும் இது தெரியாது என்று கூறமுடியாது. சந்திரிகாவின் தந்திரங்களும், சுயநலப் போக்குகளும், நேர்மையற்ற தன்மையும் மகிந்த நன்கு அறிந்து வைத்துள்ள விடயங்களே ஆகும்.

இருப்பினும் மகிந்தவுக்கும், அநுராவுக்குமிடையிலான பனிப்போரில் சந்திரிகா நிச்சயம் மகிந்த பக்கம் இருக்கப்போவதில்லை. கட்சித் தலைமைக்கும் அடுத்த சனாதிபதி வேட்பாளர் பதவிக்கும் தனது பரம்பரை வாரிசான தம்பியே நியமனமாக வேண்டும் என்ற சந்திரிகாவின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை.

இதேவேளை ஜே.வி.பி.யுடனான சந்திரிகாவின் உறவுகள் அநுரா்வால் இணைக்கப்பட்டுள்ளதால் அதனை வெட்டவும் முடியாமல் அதனோடு ஒட்டவும் முடியாமல் சந்திரிகா குழம்பியுள்ளார். மகிந்தவிற்கு ஜே.வி.பி.யை கண்ணிலும் காட்டக்கூடாது. இது சந்திரிகாவிற்கும் மகிந்தவிற்கும் இடையேயான மற்றொரு முரண்பாடு.

இந்த நிலையில் சந்திரிகாவின் அதிகாரம் வெட்டப்படாது தப்பி, ஓராண்டு காலக்கெடு முடிய ரணிலின் ஆட்சியை தனது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு கலைத்தாலோ, அல்லது ரணிலே தானாகப் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு மீண்டுமொரு தேர்தலை எதிர்கொள்ளத் தயாரானாலோ சமாதானத்தின் பேரால் லாபமடையப் போவது ரணில் தான்.

முரண்பாடுகளால் நஷ்டமடையப் போவது மகிந்தவும், சந்திரிகாவும், ஜே.வி.பி.யும் தான்......அநுராவையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

❄❄

## உண்மை சுடும்





சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க அண்மையில் தெரிவித்துள்ள ஒரு கருத்து நியாயபூர்வமான அர்த்தங்களைக் கொண்டதாக உள்ளது.

'தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சமாதானத்தை எட்டுவதற்கான தற்போதைய வாய்ப்பினை சந்தர்ப்பத்தை தவறவிட்டால், அல்லது பயன்படுத்தாது விட்டால் எல்லோருமே அழிக்கப்படுவோம், நாட்டுக்கும் எதிர்காலம் என்ற ஒன்று இருக்கவே மாட்டாது' - இதுதான் அவரது பேச்சின் சாரம்.

இந்தப் பேச்சு எல்லோரும் - அதாவது சமாதானத்தை நேசிப்போர் அனைவரும் முன்வைக்கும் கருத்தை உள்ளடக்கியது தான் ஆனாலும்பேசப்பட்ட இடம், காலம் ஆகியவற்றால் இது முக்கியத்துவம் கொண்டதாகின்றது.

திருமலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் அங்கு வருகைதந்திருந்த பௌத்தபிக்குமார், விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும் கடுமையாகக் கண்டித்தும், திட்டியும் வார்த்தைகளைப் பிரயோகித்த போதே ஜோன் அமரதுங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது பௌத்த பிக்குமாரின் இனவாத கொள்கைக்கு நேரடியாவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல் எச்சரிக்கையாகவே கருத வேண்டும்.

நேரம் ஒரு கருத்தை முன்வைத்துக் குழப்புவதில் அரசியல் இனவாதம் பேசும் பௌத்த பிக்குமாருக்கு இணையாக எவரும் கிடையாது.

ஜோன் அமரதுங்க இப்படிப் பேசியது சிங்கள பௌத்த தீவிரவாதிகள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தாதா? என்று எவரும் கேட்கவும் கூடும்

ஜோன் அமரதுங்கவை ஒரு கிறிஸ்தவர் என்ற கோணத்தில் பார்த்து கோபப்பட்டு விமர்சிக்கவும் கூடும்.

ஆயினும் அவர் கூறியது உண்மையென்பதை அமைதியையும், சமாதானத்தையும் உண்மையாகவே விரும்பும் தென்பகுதி மக்களும், ஏனைய அமைப்புக்களும் புரிந்து கொண்டால் போதும்....

❄❄

## பரிதாபத்திற்குரிய ஜெனரல்





முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் போலி ஜெனரல் எனத் தென்பகுதி ஊடகங்களால் வர்ணிக்கபட்டவர்- பல்வேறு குற்றச் செயல்களுக்கு பொறுப்பானவர் எனக் குற்றம் சாட்டப்பட்டவர், கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள இரு புத்திரர்களின் தந்தை, ஆயுதக் கொள்வனவு தொடர்பாக பல்வேறு ஊழல் மற்றும் மோசடிகளைச் செய்தவர் எனக் குற்றவிசாரணைகளுக் குள்ளானவர்........

போதும் போதும் அநுருத்த ரத்வத்தையைத்தானே கூறுகின்றீர்கள் என்கிறீர்களா.....? அவரையே தான்........

பதவியிழந்து, மதிப்பிழந்து, ஒரு காலத்தில் அடிக்கடி ஆசீர்வாதம் வழங்கிப் பாராட்டிய அஸ்கிய பீடாதிபதியே சந்திக்க மறுப்புத் தெரிவித்து வெறுத்தொதுக்கும் அளவுக்கு விலாசமற்றவராகி விட்டாலும், இன்றும் அந்த ரத்வத்தை குடும்ப அகங்காரம் விடவில்லை.

தான் கஷ்டப்பட்டு கைப்பற்றிய யாழ்ப்பாணத்திற்குள் மீண்டும் விடுதலைப்புலிகளை கஷ்டப்படாமலே நுழைந்து அதிகாரம் பண்ண இந்த அரசு விட்டுவிட்டதாம்.

அதுசரி அவருடைய காலத்தில் தானே முல்லைத்தீவை, கிளிநொச்சியை, ஜெயசிக்குறு - சத்ஜெய, எடிபல, ரணகோஷ, வோட்டர்ஷெட் என வரிசையான நடவடிக்கைகள் மூலம் ஒருவருட காலப்பகுதிக்குள் கைப்பற்றிய பகுதிகளை, ஏன் ஆனையிறவுப் பெருந்தளத்தை ஆயிரக்கணக்கான படையினரைக்காவு கொடுத்தும் - பறிகொடுக்கப்பட்டதும்.

- இதுபற்றி என்ன சொல்லப் போகிறாராம்?

அதுமட்டுமல்ல யுத்தத்தில் புலிகளைத் தோற்கடிக்காமல் உறுதியான சமாதானத்தை ஏற்படுத்த எவராலும் முடியாது என்றும் அவர் கூறியுள்ளாராம்.

புலிகளை அழிப்பது என்றால் சந்திரிகாவினதும், ரத்வத்தையினதும் அகராதியில் தமிழர்களை அழிப்பது என்றுதானே அர்த்தம்.......

- இப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் என்ற பதவியையும் சந்திரிகா இவரிடமிருந்து பறித்து வேறு யாராவது கௌரவமான நபரிடம் ஒப்படைப்பது தொடர்பாக யோசித்து வருகிறாராம்.

- அதிகமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஒருவரால் கட்சியின் அமைப்பாளர் என்ற ஸ்தானத்தில் இருந்து கொண்டு மக்கள் செல்வாக்கை பெறமுடியாது என சந்திரிகாவுக்கு கட்சியின் மூத்த தலைவர்கள் எச்சரித்துள்ளார்களாம்........

ஒரு ஜெனரலுக்கு இப்படி ஒரு கதியா?

போனால் போகட்டும் போலி ஜெனரல் தானே.........

❄❄

## புரியாத புதிர்கள்...



அண்மையில் - அதாவது கடந்த வாரத்தில் வடமராட்சிப் பகுதிக்கு அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறியவென விஜயம் செய்திருந்த பிரிட்டிஷ் மற்றும் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அங்குள்ள இரு முன்னணி பாடசாலை களான ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த கல்லூரி ஆகியவை இராணுவ உயர் பாதுகாப்பு வலையப் பகுதிக்குள் இயங்கு வதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனராம்.

இராணுவ முகாம்பகுதிக்குள் பாடசாலைகள் இருப்பதென்பது எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் என அவர்கள் மிகப் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளனர்.

இதென்ன அதிசயம் வடக்கு கிழக்கில் பலமுன்னணிப் பள்ளிக்கூடங்களையே இராணுவ முகாம்களாக மாற்றி இருந்த அநியாயம் அவர்களுக்கு தெரியாது. ஏன் வடக்கு கிழக்கில் யாழ்குடா, திருமலை, மட்டக்களப்பு, மன்னார், உட்பட பிரதான நகரங்களே மிகப் பெரிய இராணுவ முகாம்களாக இருந்த காலத்தில் இவர்கள் வந்து பாக்கவில்லை. பார்த்திருந்தால் சிறிலங்காவில் பேணப்படும் சனநாயக சோசலிஷ ஆட்சியின் 'மேன்மை' தெரிந்திருக்கும்.

பாடசாலைகளைச் சூழ அமைக்கப்பட்டிருந்த காவலரண்களையும், முட்கம்பித்தடுப்பு வேலிகளையும் பார்வையிட்ட அவர்கள் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் கேட்டறிந்ததுடன், இந்த உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்துதம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை என்றும் கூறினராம்.

அதுசரி இந்த உயர்பாதுகாப்பு வலயம் குறித்து படைத்தரப்புக்குஏதும் புரிந்திருக்குமோ என்பதே பெரும் சந்தேகம் தான்.

அதியுச்ச பாதுகாப்பையும் இரும்பினை ஒத்த அரண்களும் கொண்ட ஆனையிறவு பெருந்தளத்தாலேயே படையினரைப் பாதுகாக்க முடியவில்லை.... இந்தப் பாதுகாப்பு வலயங்கள் அவர்களை எப்படிப் பாதுகாக்கப் போகிறதாம்!

இந்தப் பாடசாலைகள் இரண்டும் இராணுவ முகாமுக்குள் இருப்பதை தங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர்கள் தெரிவித்தாலும் சிறிலங்காஅரசு அதனை ஏற்றுக் கொண்டு தானே இருக்கின்றது.... இதனை அவர்கள் புரிந்து கொண்டு சிறிலங்காவின் அரசியல் இராணுவ கலாச்சாரத்தை உணர்ந்து கொண்டால் போதும்.....

❄❄

# சமாதானத்துக்கான சூழலில் மீனவர்கள் முகங்கொடுக்கும் புதிய நெருக்கடி

தமிழர் மீதான இன அழிப்பு யுத்தம் ஆரம்பமானது முதல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிலை இன்னும் திருப்திப்படும் நிலைக்குத் திரும்ப வில்லை. சிங்கள அரசுகளாலும் இராணுவத்தாலும் அமுல்படுத் தப்பட்ட சட்டங்களாலும் தடுப்பு மற்றும் அழிப்பு நடவடிக்கை களாலும் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக கடற்றொழில் பாதிக்கப் பட்டே வந்துள்ளது.

ஆயிரக்காணக்கான மீனவக் குடும்பங்கள் எதிர்கொண்டுவரும் ஜீவமரணப் போராட்டம் சமாதானத் துக்கான இன்றைய சூழ்நிலையில் கூட தணியவில்லை. நீண்டகால மாக இடம் பெற்ற போரினால் பாதிக்கப்பட்ட அவர்கள் சிறிலங்கா கடற்படையின் கொலை அச்சுறு த்தலை எதிர்கொள்ள நேரிட்டது.

இப்போது அவற்றுக்கு முடிவு காணப்பட்டிருப்பினும் கட்டுப்பாடின்றி மீன்பிடிக்கும் சுதந்திரம் இன்னும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இலங்கையில் நிலவும் சமாதானத் துக்கான சூழலில் தமிழ் மீனவர்கள் அனுமதிக்கப்பட்ட கடற் பிராந்திய த்தில் மீன் பிடிப்பதே கடற்படையின ருடனான இழுபறியிலேயே நிகழ்கின்றது.

இடத்துக்கு இடம் கடற்படையினர் விதிக்கும் மாறுபட்ட நிபந்தனைகள், பாஸ் நடைமுறை கள் என்பவற்றுக்கு ஊடாகவே கடற்றொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது நீண்ட காலமாக ஈழத்தமிழ் மீனவர்கள் எதிர்கொண்டு வரும் ஒரு நெருக்கடியின் எச்சம்.

இப்போது புதிதாக அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் கூட கடற்றொழிலை மேற்கொள்ள முடியாமல் அயல் நாட்டு மீனவர்களால் பாதிக்கப்படும் நிலை தீராத ஒரு பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்து வருகிறது.

தென்னிந்திய மீனவர்களின் கடல் எல்லையைத் தாண்டியதும் வடக்கு கிழக்கு கரையோரங்களை நெருங்கியதுமான கடற்றொழில் விரிவாக்கம், ஏற்றுக்கொள்ளப்பட முடியாததும் ஈழத்தமிழ் மீனவர் களை இன்னொரு ஜீவமரணப் போராட்டத்துக்குள் தள்ளுவது மானதாக உள்ளது.

இது வரையறுக்கப்பட்ட கடற்பிரதேசத்திலும் முழுமையான பலனைப் பெறமுடியாதவாறு கொள்ளை கொண்டு போகும் படையெடுப்பாக நடக்கின்றது. இதனால் ஈழத் தமழ் மீனவர்களின் கடல் வளங்கள் இழக்கப்படுவ தோடு மீன்பிடி உபகரணங்களும் சேதமாக்கப்படுகின்றன.

இராமேஸ்வரம், மண்டபம், தங்கச்சி மடம் போன்ற தென்னிந்திய கிராமங்களிலிருந்து வரும் இழுவைப் படகுகள் இங்குள்ள கடலுணவுகளை வாரி வழித்துக் கொண்டு சென்று விடுகின்றன.

விடத்தல் தீவு வரையும் வந்து அப்படகுகள் இழுவை செய்வதால் களங்கட்டி வலைகள், பட்டிவலைகள் என்பனவும் அழிக்கப்படுகின்றது. வெட்டப்பட்டு சிதைந்து விட்ட வலைகளைத் தேடி அலைவது மீனவர்களின் அன்றாடத் தொழிலாகி விட்டது என்று கடல் தொழில் சமாசங்கள் கூறுகின்றன.

வலைகளை இழந்து விடக்கூடாது என்பதற்காக இந்தியப் படகுகள் இக்கடல் பகுதிக்கு வரும் நாள்களில் மீனவர்கள் தொழிலுக் குச் செல்லாதிருக்க நேரிடுகின்றது. இவர்கள் தொழிலுக்குச் செல்வதா? இல்லையா என்பதைத் தீர்மானிக் கும் இன்னொரு சக்தியாக இந்திய இழுவைப் படகுகள் மாறிவிட்டன.

இந்த அவல நிலைக்கு அதிகமாக வடபகுதி மீனவர்கள் மன்னார் பேசாலை மீனவர்கள் உள்ளாகின்றனர். மன்னாருக்கும் தென்னிந்தியாவின் இராமேஸ்வர த்திற்கும் இடையில் உள்ள மிகக் குறுகிய நீரிணை இதற்கு அதிக வாய்ப்பாகவும் அமைந்து விடுகிறது. பேசாலையில் இருந்து மட்டும் 1990 க்கு முன்னர் நாளாந்தம் பத்து, பதினைந்து லொறிகளில் தென்னில ங்கைக்கு மீன்கள் அனுப்பப்பட்டன. இன்று அத்தகைய நிலை அற்றுப் போய் மீனவக் குடும்பங்களின் உணவுக்கே கடலுணவு இல்லாத



துர்பாக்கியம் நேர்ந்துள்ளது.

பேசாலையிலுள்ள சுமார் மூவாயிரம் குடும்பங்கள் இதனால் நிர்க்கதிக்கு உள்ளாகி இருக்கின்றன. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகும் வரையும் சிறிலங்கா அரசின் கடல்வலயத் தடைச் சட்டத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த மீனவர்கள் இந்த சமாதானத்திற்கான காலத்தில் இன்னொரு விதமாக தொழில் பாதிப்பை எதிர் நோக்குவது கவலைக்குரியது.

தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளான மன்னார் மீனவர்கள் சம்மந்தப்பட்ட வர்களுக்கு பலமுறை முறையிட்டும் தீர்வைக் காணவில்லை. இதனால் கடந்த மாதம் அதற்கான ஒரு எதிர் நடவடிக்கையை மேற்கொண்டு பிரச்சினையை தீர்க்க முயன்றனர். செப்ரம்பர் 18 ஆம் திகதி மன்னார் கடற்பரப்பினுள் அத்துமீறி தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களை இவர்கள் சுற்றி வளைத்துப்

— ஞாபகன் —

பிடித்தனர்.

பேசாலைக் கரையில் இருந்து 200 மீற்றர் தூரம் வரை வந்து மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே அவர்கள் பிடிக்கப்பட்டனர். இரவு 7 மணி முதல் அதிகாலை 4மணிவரை பகுதி பகுதியாக 25 படகுகளில் இருந்து கைது செய்து மன்னார் மீனவர் சங்கக் கட்டடத் திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இவர்களை விடுவிக்க மன்னார் மாவட்ட அரச அதிபர், சிறிலங்காப் பொலிசார் மற்றும் உயர்அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகள் பலன ளிக்கவில்லை. கச்சதீவைத் தாண்டி இலங்கைகடல் எல்லைக்குள் வந்து தொழிலில் ஈடுபடமாட்டார்கள் என்ற உறுதிமொழி தந்தாலே விடுவிக்க முடியும் என்று திட்டவட்டமாக கூறப்பட்டது.

இதனை அடுத்து கொழும் பிலுள்ள இந்திய தூதரகத்தின் கொன்சியூலர் எஸ்.கே. கோகுலச்சந்திரன் நேரில் வந்து மன்னார் மீனவர் சங்கப் பிரதிநிதி களுடன் பேச்சு நடத்தினார். மன்னார் மாவட்ட ஆயர், அரச அதிபர், பொலிஸ் அதிகாரிகள் பிரசன்னமாகி இருக்க நடந்த பேச்சுக்களின் போது இந்திய தூதரக அதிகாரி அடுத்த பத்து நாட்களுக்குள் கச்சதீவைத் தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமென அவர் உறுதியளித்தார். இதனை அடுத்து அந்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு வழங்கப்படும் வாக்குறுதிகள் எவையும் காப்பாற்றப்படுவதில்லை என்ற துயரம் இதி லும் தொடர் கிறது. இந்திய தூதரக அதி காரி விதித்த கால அவகாச த்தின் பின்பும் வடக்கு கடல் பிராந்திய கடலுணவுகள் கபளீகரம் செய்யப்படுகின்றன.

இம்மாதம் மாதகல் கடலில் மீன்பிடியில் இந்திய படகுகள் ஈடுபட்டதோடு மாதகல் பகுதி மீனவர்களின் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான கடல் தொழில் உபகரணங்களையும் சேத ப்படுத்தின. தொடர்ந்தும் வடமராட்சிக் கடலிலும் மன்னாரிலும் இத்தகைய அத்துமீறல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடிக்கடி மீறும் சிறிலங்கா கடற்படையினர் இதனைக் கண்டும் காணாமல் இருப்பதாக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் படையதிகாரிகளிடம் கூறியிருக்கின்றனர்.

கடந்த ஆண்டுகளில் தமது கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது கூட இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படை யினரின் தாக்குதலுக்கு இலக்கா கினார். கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் இந்திய மீனவர்கள் உயிரிழந்த சம்பவங்களும் நிகழ்ந்தன.

கடல் எல்லையைத் தாண்டி வந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களிலும் ஆஜர் செய்யப் பட்டார்கள். அப்போதெல்லாம் இலங்கையில் தமிழ் மீனவர்களை நோக்கி கடல் வலயச் தடைச் சட்டம் அமுலில் இருந்தது. அத்துடன் தமிழகத்திலும் மத்திய அரசிலும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான சக்திகள் அதிகாரத் திலும் இருந்தன.

இதன் காரணமாக ஒட்டுமொத்த தமிழர்கள் மீதும் வஞ்சம் தீர்க்கும் நோக்கோடு சிறிலங்கா கடற்படையினர் செயற்பட்டனர். இதற்கு தமிழகத்தில் இருந்து கண்டனங்களும் எதிர்ப்புக் குரல்களும் எழுந்திருந்தன.

இப்போது இந்தியாவிலும் இலங்கையிலும் நிலைமைகள் தலைகீழாக மாறிவிட்டன. சமாதான முயற்சிகளுக்கும் மீனவர்கள் சுதந்திரமாக தொழில் புரிவதற்கும் எதிரான சிறிலங்கா கடற்படை இது விடயத்திலும் மாறான நிலைப் பாட்டையே கொண்டிருக்கிறது.

எந்த வகையிலேனும் ஈழத்தமிழ் மீனவர்கள் பாதிக்கப்பட்டால் சரி என்ற மனப்பாங்கிலேயே அது நடந்து கொள்கிறது. வடக்கு - கிழக்கு கடல் பிராந்தியம் முழுவதும் தமது ஆதிக்கத்தின் கீழேயே இருக்க வேண்டும் என்று கடற்படை விடாப்பிடியாக உள்ளபோது இச்சம்பவங்கள் நிகழ்கின்றன.

அத்துமீறும் இந்திய மீனவர்கள் தடுக்கப்படாததும் முன்பு போல கைது செய்யப்பட்டு நீதிமன்றங் களில் ஆஜர் செய்யப்படாததும் இதனையே காட்டுகின்றது.

கடற்படையை தனது பிடிக்குள் வைத்திருக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி சந்திரிகா, ஈழத்தமிழர்களின் விடுதலை தொடர்பாக தமிழகத் திலிருக்கும் ஆதரவை - உறவைச் சீர்குலைக்க ஏதுவாக இப்பிரச்சினை யைக் கையாளக் கூடும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இதுவும் புறக்கணிக்கக் கூடிய ஒன்றல்ல.


இப்போதுள்ள தமிழக அரசின் ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பான கடும் போக்கைப் பயன்படுத்தி இப்பிரச்சினையை அதனோடு இணைத்து முரண்பாட்டு நிலைக்கு கொண்டு செல்லும் முயற்சியாகவே கடற்படையினரின் அசமந்தப் போக்கை கருத வேண்டும்.

இந்தியத் தூதரகமும் மன்னார் மீனவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை கைவிட்டுள்ள நிலையில் இத்தகையதொரு கருத்துருவாக்கம் தவிர்க்கப்பட முடியாததாக இருக்கிறது. தொடரும் இந்த அத்துமீறல்கள் ஈழத்தமிழ் மீனவர்களின் தொழில் வாய்ப்பை பறிப்பதோடு அவர்களின் தொழில் உபகரணங்களையும் நாசம் செய்தபடி உள்ளன.

கடும் போரினால் மிக மோசமாக நஷ்டப்பட்ட மீனவர்கள் அதிலிருந்து மீள்வதற்குப் படும்பாடு துன்பகரமானது. அதன் மீட்சி இதனாலும் மீண்டும் பின்தள்ளப் பட்டுவிடக் கூடாது என்பது நியாயமான மனக்குமுறலே. இப்போது வடமராட்சி கடற்றொழி லாளர்கள் இதற்கு எதிரான ஒரு போராட்டத்திற்கும் தயாராகி வருகின்றனர்.

❑❑

# மதவடி மயிலர்



செய்தி:- அத்துமீறி பிரவேசித்தால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுமென யாழ்ப்பாணப் படைமுகாம்களின் அறிவிப்புப் பலகைகளில் எழுதப்பட்டுள்ளது.

மயிலர்: எங்கட ஊர்மனையுக்க, கோயிலிலை, பள்ளிக்கூடங்களுக்கையெல்லாம் அத்துமீறிப் பிரவேசித்து எங்கட சனத்தைக் கொன்றும், காயப் படுத்தியும், துரத்தியும் அநியாயம் செய்து போட்டு அடாத்தாகக் குந்தி இருந்து கொண்டு அத்துமீறிப் பிரவேசித்தால் சுடப் போறம் என்று எச்சரிக்கை யுமெல்லே செய்யினம். அதுசரி அத்துமீறிப் பிரவேசி த்தால் தான் சுடுவினமே... சும்மா போறவாறவையை சுட்டதெல்லாம் என்னவாம்.... ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்திச்சாம் எண்ட கதைதான் பாருங்கோ.

செய்தி:- காஞ்சிரங்குடா படுகொலைகள் தொடர்பான கண்காணிப்புக் குழுவின் அறிக்கைக்கு பலத்த கண்டனம்

மயிலர்: கண்காணிப்புக்குழு எல்லாத்தையும் சரியா, ஒழுங்கா கண்காணிச்சுத்தான் அறிக்கை விடவேணும். கண்ணை மூடிக்கொண்டு, காதால் ஒருபக்க நியாயத்தை மாத்திரம் கேட்டுவிட்டெல்லாம் அறிக்கை விடக்கூடாது பாருங்கோ.... கண்காணிப்புக்குழுவுக்கு சனம் கண்டனம் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதே எண்டதை நினைக்கத்தான் கண்ணெல்லாம் கலங்குது. அதுசரி கண்காணிப்புக்குழு எல்லாத்தையும் சரியாச் செய்யும்எண்டுதானே எங்கட சனம் பேசாமை யிருக்குது... அவையையும் கண்காணிக்க வேண்டு மென்றால் பிறகு எப்படி.....?

செய்தி:- ஈழமா? சமாதானமா? என்ற தலைப்பில் ஜே.வி.பி. கொழும்பில் ஆர்ப்பாட்டம்.

மயிலர்: முந்தி ஒருத்தர் இப்படித்தான் 'தர்மிஸ்டர்' என்று தன்னைக் கூறிக்கொண்டு தன்னிஷ்டப்படி யுத்தமா? சமாதானமா? எண்டெல்லாம் அறைகூவல் விடுத்து அட்டகாசம் செய்தார். அவற்றை கதை முடிஞ்சு போச்சு. இப்ப இவை ஈழமா? சமாதானமா? எண்டு ஆர்ப்பாட்டம் நடத்துகினம்... அதுசரி இவையின்ர வேலை இப்ப ஆர்ப்பாட்டம் நடத்துறதுதான் போலிருக்கு... போராட்டம் நடத்திப் பாத்தினம் சரிவரேல்ல... இப்ப ஆர்ப்பாட்டம் நடத்திப் பாக்கினம்.... தாங்களும் இருக்கிறம் எண்டதைக் காட்ட வேறை என்ன வழி பாருங்கோ.....

செய்தி:- சமாதான முயற்சிகள் எவ்வகையிலும் குழம்பாது, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.

மயிலர்:- சமாதான முயற்சிகள் எவ்வகையிலும் குழம்பாது என்று கூறும் போதே..... அதை எந்தவகை யிலாவதுகுழப்ப முயற்சிகள் நடக்குது என்பதை பிரட்மன் ஐயா ஒப்புக்கொள்கிறார் எண்டு தெரியுது... சமாதானப் குழப்பிகளையும், சபை குழப்பிகளையும் தெரிஞ்சு வைச்சுக் கொண்டும் சும்மா இருக்கிறது சரியில்லை பாருங்கோ.... அவை யார்.. எப்படியெல் லாம் குழப்பினம் என்பதைச் சனத்துக்குச் சொல்ல வெல்லே வேணும்... அப்பத்தானே அவையின்ர தில்லுமுல்லு சனத்திற்கு விளங்கும் பாருங்கோ...

செய்தி:- திருகோணமலையில் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை இனம் காட்ட மக்கள் தயார்

மயிலர்: காட்டுவதற்கு மக்கள் தயார்! காட்டுங்கள் என்று சொல்ல அரசு தயாரா? எண்டது தான் இப்பவுள்ள கேள்வி... கண்காணிப்புக் குழுவிடம் பட்டியல் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் செய்தி வந்திருக்கு. அரசும் - குழுவும் என்ன செய்யப் போகுது பார்ப்பம்.... ஆணைக்குழு, விசாரணைக்குழுவெல்லாம் ஒரு கண்துடைப்பு வேலைதான் பாருங்கோ... காலத்தை கடத்தி பிரச்சினையை கிடப்பில் போட்டு குற்றவாளிகளை தப்ப வைக்கிற வேலைதானே கனகாலமா நடக்குது.

☞ உனக்குத் தெரியாதது, ஒரு சிறந்த புத்தகத்தை நிரப்பும். - ஸிட்னி ஸ்மித்







**-ச.முருகானந்தன்-**

இந்தப்பாதையில் பிரயாணம் செய்வதாயின் ஒவ்வொரு நாளும் உடுப்பு மாற்ற வேண்டும். அவ்வளவு புழுதி. பத்தாண்டுகள் முன்னர் தார் றோட்டாக இருந்தவைதான், இன்று பள்ளமும் திட்டியுமாக , பயணம் செய்ய முடியாததாக.... அதிலும் இப்பொழுது கிடைத்த யுத்த இடைவெளியில் அடுத்தடுத்து வாகனங்கள் தெற்கிலிருந்து வந்து போக ஆரம்பித்த பின்னர் ஒரே புழுதி மயம்தான்.

எதிரே உறுமிக்கொண்டு வந்த வாகனத்திற்கு இடம்விட்டு ஒதுக்கமாக அந்த ஒடுங்கிப்போன பாதையின் ஓரமாகத் தனது எம் டீ 90 ஐ நிறுத்தினான். ஓ! எமது மக்களின் வாழ்வும் தான் இந்தப் பாதையைப் போல் எவ்வளவு ஒடுங்கிப்போய்விட்டது!

வாகனம் கடந்து சென்றதும் தனது மோட்டார் சைக்கிளை முடுக்கினான் ஆனந்தன். அவன் வைத்தியசாலையை அடைந்த போது நூற்றுக்கணக்கான நோயாளர்கள் அவனது வரவுக்காகக் கர்த்திருந்தனர்.

டொக்டர் ஆனந்தனுக்கு கைராசிக்காரன் என்று நல்ல பேர். அதுவும் வைத்தியர்கள் இன்றி கடந்த பத்து வருடங்களாக அவலப்படும் மக்களுக்கு அவனது சேவை அளப்பரியது. அவன் மாவட்ட வைத்திய சாலையில் பணியாற்றிக்கொண்டு பிற்பகல் ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை அளிப்பான். வைத்தியர்கள் தட்டுப்பாட்டினால் தான் இந்த நிலைப்பாடு. இங்குள்ள வைத்தியர்கள் யாவரும் அல்லும் பகலும் அயராது உழைத்து வருவதனால் தான் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட, இராணுவத்தி னரிடமிருந்து விடுவிக்கப்பட்ட, இப்பிரதேச மக்களின் சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்திட முடிகிறது.

நாட்டு நிலைமையில் புதிதாக ஏற்பட்ட மாற்றம் நம்பிக்கையூட்டு வதாக இருந்தாலும் கூட, வசதியீனங்கள் இப்பகுதியில் தொடர்ந்து இருப்பதாலோ என்னவோ புதிய வைத்தியர்கள் வரவில்லை. யாழ்ப்பாணத் திலிருந்து இடம்பெயர்ந்து வந்த ஐந்து இலட்சம் மக்களுக்கு மகத்தான சேவையாற்றிப் பழக்கப்பட்ட வைத்தியர்கள் தொடர்ந்தும் சலிப்பின்றி பணியாற்றிக்கொண்ருந்தனர்.

மருந்தகத்திற்கு வந்த ஆனந்தன் நோயாளர்களைத் துரிதமாகவும் அதேநேரம் கவனமாகவும் பரிசோதித்து சிகிச்சை வழங்கினான். ஊழியர் பற்றாக்குறையினால், ஊதியமற்ற சில தொண்டர்களும் அவனுக்கு உதவியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தமை, எமது மக்கள் எந்தக் சவாலையையும் எதிர் கொள்ளக் கூடியவர்கள் என்பதற்குக் கட்டியம் கூறியது.

மீண்டும் வைத்தியசாலையை நோக்கிய பயணம். இன்று அவனுக்குத்தான் இரவுக்கடமை.

“ஓய்வே இல்லாமல் பணியாற்றி உங்கள் உடம்பை கெடுத்துக் கொள்ளப்போகிறீர்கள்” என்று மனைவி காந்தா அடிக்கடி கடிந்துகொள்வாள்.

அவன் தனது விடுதியை அடைந்தபோது அங்கே சிறிய சொகுசு வாகனம் ஒன்று நின்றிருந்தது. வீட்டினுள்ளும் ஒரே கலகலப்பு.

“ஹலோ ஆனந்த்...” என்று அவனை வரவேற்றவனை நிமிர்ந்து பார்த்தான். மிகச் செழிப்பாக இருந்தான். பட்டென்று ஞாபகத்திற்கு வரவில்லை. அவனை எங்கோ பார்த்தமாதிரி நினைவுக்கு வந்ததே தவிர உடனடியாக நினைவுக்கு வராமையினால் புருவத்தை உயர்த்தினான். “டேய் .... என்னைத் தெரியவில்லையா?... நான்தான் முரளி... ஏ.எல். வரை உன்னுடன் படித்தேன்....”

சட்டென்று ஞாபகத்திற்கு வர, “அடடா முரளி...! என்னமாய் மாறிவிட்டாய்?....” என்றான் ஆனந்தன் ஆச்சரியத்தோடு. “எப்படி இருக்கே முரளி...ம் ... பத்துப் பன்னிரெண்டு வருசம்”

“ லண்டனில் வாழ்க்கை நன்றாகப் போகிறது.... இப்போ பிரிட்டிஷ் குடியுரிமை பெற்று விட்டேன்.... என்னுடைய நிறுவன த்திலே கணனி இயக்குபவளாக இருந்த ஸ்டெல்லாவை கலியாணம் முடிச்சிட்டேன்.... தமிழ்நாட்டு கேள்ஸ்... மீட்மை வைப்...” எதிரே அமர்ந்திருந்த மனைவியை அறிமுகம் செய்தான் முரளி. “இவன் என்னுடைய பிரண்ட். டொக்டர் ஆனந்தன். “ஏற்கனவே சொல்லியிருக்கிறேனே....” மனைவிக்கு நண்பனை அறிமுகம் செய்து வைத்தான்.

“நீ எப்படி இருக்கே... ஒரு ரெலிபொன் கூட இல்லாமல்.. ஒரு டொக்டர்... நினைச்சுப்பார்க்கவே முடியலை. எப்படி உன்னால வாழமுடியுது...? தொடர்ந்தான் முரளி. ஆனந்தன் வெறும் சிரிப்பைப் பதிலாக உதிர்த்தான். தேநீர் பரிமாறியஅவனது மனைவி காந்தா தான் பதிலளித்தாள். “அவருக்கு தொழில்தான் உலகம்... கொழும்பு, கண்டிப்பக்கமாவது மாற்றம் எடுக்கச் சொல்லிக் கேட்டால் எரிஞ்சு விழுகிறார்... நாங்கள் இந்தப் பத்து வருடமாக இங்கிருந்து என்னத்தைக் கண்டம்....?”

“ஆனந்த்... ஆர் யூ ரியலி மாட்?. இந்தக்காட்டுக் குள்ளேயே தொடர்ந்து பணிபுரிகிறாய்... உலகம் எங்கே போயிட்டுது... இங்கே மின்சாரமும் இல்லாமல்...... கணனியும் இல்லாமல்...... ஓ... வாழ்வில் அனுபவிக்க வேண்டிய எவ்வள வையோ இழந்திட்டாய்.... இப்ப கூட லேற் இல்லை.. யூ கே.யில நல்ல வாய்ப்பு இருக்கு.... ஒரு எக்ஸாம் சிட் பண்ணனும்... நீ கெட்டிக்காரன். பாஸ் பண்ணிடுவாய்... ஏன் நீ யூ.கே வரக்கூடாது? உனது பிள்ளைகளினுடைய எதிர்காலம், மனைவியினுடைய அபிலாசைகள் எல்லாமே நிறைவேறும்... இங்க டொக்டராக இருந்துகொண்டு ஒரு கார் கூட இல்லாமல்....” முரளி தொடர்ந்தான். “என்னிடம் மூன்று கார் இருக்கு.

ஸ்டெல்லாவும் அவனை ஆமோதித்தாள். “அங்க வந்திட்டால் வாழ்க்கை சொர்க்க மாயிடும்... பாருங்க மிசிஸ் ஆனந். நீங்களே அங்கு வேலைபார்த்து மாதம் பல லட்சக்கணக்கில் சம்பாதிக்கலாம்.

“நான் அதிகம் படிக்கலை.. ஏ. எல் பாஸ் பண்ணினதோட சரி...” காந்தா கூறியதும், நான் என்ன பெரிதாகப் படித்தவளா? அங்கே போய் ஆறு மாதம் கணனிப் பயிற்சி பெற்றேன்....அப்புறம் இவருடைய மீன் கடையில் காசியராகச் சேர்ந்தேன்....இப்போ எங்கேயோ போயிட்டம்...”

“மீன் கடையா....?” காந்தா ஆச்சரியத்துடன் கேட்டாள். என்ன நீங்க...?”

முரளி சிரித்தான். “செய்யும்தொழிலே தெய்வம். மீன்கடை என்றதும் பயப்படாதீங்க. அங்கே எல்லாம் பாக்கிங் சிஸ்டம்....எனக்கு கீழே பன்னிரெண்டு பேர் வேலை செய்யிறாங்க. ஒவ்வொருவரும் மாதம் லட்ச ரூபாய்க்கு மேலே சம்பாதிக்கிறாங்க...”

“இதே கடையில் தான் நான் கம்பியூட்டர் ஒப்பரேற்றர்...” ஸ்டெல்லா சிரித்தாள். ‘நீங்க வந்தா நல்ல வாய்ப்பு இருக்கு. இலங்கையைச் சேர்ந்த பல டொக்ரர்மார் நல்லாக புகழோடும் பணத்தோடும் இருக்கினம்....”

இவர்களோடு உரையாட, உரையாட ஆனந்தனதும் காந்தாவினதும் மனதிலும் சிறு ஆசை அரும்பியது.

“ யோசி ஆனந்த்...” முரளி எண்ணையூற்றினான்.

“விசா ஒழுங்குகள் நான் ஸ்பொன்சர் பண்ணுவேன்...”

“சாப்பாடு ரெடி... சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும்,

“ சாப்பாடு என்ன ... இன்று நைட் அவுட் உங்களோடுதான்...” ஸ்டெல்லா சிரித்தாள்.

குதூகலமாக உரையாடியபடி உணவருந்திக் கொண்டிருந்த போது அவர்கள் சொன்ன தகவல் கள் யூ.கே. செல்லும் ஆசை யைத்தூண்டிய வண்ணமிருந்தது.

“டொக்டர்அட்மிசன்.... பாம்பு கடிச்சு ஒரு ஆளைக் கொண்டு வந்திருக்காங்க ....” வாசலில் அழைப்பு.

தின்றது பாதி,தின்னாதது பாதியாக எழுந்த டொக்டர் ஆனந்தன் கைகளை அலம்பி விட்டு வைத்திய சாலைக்குச் சென்றான். அவன் சென்று நீண்ட நேர மாகியும் திரும்பா ததினால் முரளி கேட்டான்... “இன்னும் காணே ல்லை...

“ இப்படி எத்த னை நாள் தான் காத்துக்கிடந்திரு க்கேன். இண்டை க்கு சாப்பிடும் போது வந்தது... சில வேளை களில் படுக்கை க்குப் போகும் போது... சில வேளை சாமத் தில்.... அதி காலையில்...” காந்தா சலிப் புடன் கூறி னாள் ஓய்வே இல்லை..”

சிறிது நேரம் உரையா டினார்கள். ஆனந்தன் இன்னமும் வரவில்லை. “நான் பார்த்து வரட்டுமா?” என்றபடி பதிலுக்குக் காத்திராமல் புறப்பட்டான் முரளி.

ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த இளைஞனின் உயிரை இயமனிட மிருந்து மீட்கப் போராடிக் கொண்டிருந்தான் ஆனந்தன். தாதியரும் ஊழியரும் துரிதமாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

மூச்சுத் திணறலுடன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த நோயா ளிக்கு ‘காடியக் மசாஜ்’ கொடுத்து செயற்கைச் சுவாசமும் கொடுத்து துரிதமாக இயங்கிக் கொண் டிருந்த ஆனந்தனின் செயற் பாட்டை கவனித்தான் முரளி. எனினும் அந்த நோயாளியின் நிலையைப் பார்த்து அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ‘அன்ரிவெனம்சீரம்’ என்ற விசமாற்று ஊசி குளுக்கோசுடன் நாளத்தினூடே ஏறிக் கொண்டிருந்தது. தாதி ஒருத்தி குருதி உறைதல் நேரத்தைக் கணித்துக் கொண்டிருந்தாள். நாடியோட்டத்தைக் கணித்த ஆனந்தன் ‘ஓ... மைக் கோட்...’ என்றபடி உடனடியாக கைரோக் கோட்டிக்சோன் ஊசியைச் செலுத் தும்படி தாதிக்குப் பணித்தான்.

நவீன கருவிகளோ, ஆளணியோ, பிறவாய்ப்பு வசதிகளோ இன்றி அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் ஊழியர்கள் அனைவரும் ஒரு அலகாக இணைந்து செய்துகொண்டிருந்த துரித சிகிச்சையை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தான் முரளி.

சிறிது நேரத்தில் நோயாளியிடம் அசைவுகள் தென்பட ஆரம்பித்தது. திருப்திகரமான முன்னேற்றத்தைக் கண்ட ஆனந்தன் நம்பிக்கையோடு சிகிச்சையைத் தொடர்ந்தான். பின்னர் செய்யவேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றித் தாதியிடம் கூறி, அவசியம் ஏற்பட்டால் தன்னை அழைக்கும்படி கூறிவிட்டு நண்பன் முரளியோடு விடுதிக்குச் சென்றான்.

அவர்கள் வெளியே வந்தபோது, வாசலில் கண்ணீ ருடன் தனது இருவயதுக் குழந்தை யுடன் காத்திருந்த அவ்விளை ஞனின் மனைவி“ டொக்டர் ஐயா, அவருக்கு எப்படி இருக்கு?... அவரைக் காப்பாற்றிடுங்க... நானும் குழந்தையும் அனாதையாயிடு வோம்....” என்று கதறி அழுதாள்.

“பயப்பட வேண்டாம்.... கடவுள் கைவிடமாட்டார்” என்று அவளு க்கு ஆறுதல் கூறினான் ஆனந்தன்.

“எனக்குத்தெரியும்... நீங்கள் எப்படியும் அவரைக் காப்பாற்றி விடுவீங்க.... இந்த ஐஞ்சு வருசத்தில நீங்கள் செய்த புண்ணியத்தை சனம் மறக்காது ஐயா.... நிலக்கண்ணி வெடித்து நான் வந்தபோது எனது காலை அகற்றி என்னுடைய உயிரைக் காப்பாற்றின தெய்வம் நீங்கள்.....” என்று அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள். அவளது ஒருகால் செயற்கைக் கால் என்பதை இப்போதுதான் கவனித்தான் முரளி.

முரளியின் மனதில் சிறு வயது நிகழ்வு ஒன்று நிழல்போல தெளிவில்லாமலும், மங்கலாகவும் நினைவில் வந்தது.

அப்பொழுது அவனுக்கு நான்கு வயது. அவனது அம்மாவை அரவம் தீண்டி இதேபோல வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றதும், வாசலில் அவனது கைகளைப் பற்றி அணைத்தபடி அப்பா அழுதுகொண்டிருந்ததும் ஞாபகத்திற்கு வந்தது. சிறிதுநேரத்தில் அம்மா இறந்துவிட்டதாக வைத்திய சாலை ஊழியர் கூறியதும், அப்பா உருண்டுபுரண்டு அழுததும் அவன் ஞாபகத்திற்கு வந்தது.

அப்புறம் அம்மாவை வீட்டு முன்விறாந்தையில் படுத்தி எல்லோரும் சுற்றி நிண்டு அழுத ஞாபகம் அன்று மற்றவர்கள் அழுவதைப் பார்த்து அவனும் அழுதானேயன்றி, அம்மாவை நிரந்தரமாக பிரியப் போகிறான் என்று தெரிந்திருக்கவில்லை. பின்நாளில் அம்மா இல்லாமல் வளர்ந்த போது அவன் அடைந்த கஸ்ரங்கள் நினைவில் நிழலாடின.

“என்ன யோசிக்கிறாய் முரளி....?”அமைதியாக நடந்து வந்துகொண்டிருந்த முரளியிடம் கேட்டான் ஆனந்தன்.

“ஆனந்த் ... உம்மையிலேயே உனது அளப்பெரிய சேவை இந்தமண்ணுக்குத் தேவை, யு ஆர் கிரேட்....” உணர்ச்சி பொங்கக் கூறினான் முரளி. “வெறும் காசும், சொகும் ஆடம்பரமும் தான் வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டிருந்தேன் அதற்கும்மேல் வாழ்க்கையில் பல விடயங்கள் இருக்கு. உன்னுடைய சேவை... இதனால் உனக்குக் கிடைக்கிற ஆத்ம திருப்தி இதற்கு முன்னால...”

“..........”

“ஆனந்த்..... அந்த இளைஞனுடைய உயிர் .... அவன் நம்பியிருக்கிற குழந்தை.... காலை இழந்த மனைவி..... இப்படி எத்தனை பேர் உன்னை வாழ்த்திறாங்க.... இதற்கு முன்னால எல்லாமே தூசு.... இங்கே சொந்த மண்ணிலே மருந்து கட்டவே ஆளில்லாமல் தவிக்கிறபோது அங்கே லண்டனில ரியூப்பேபி ஸ்பெசலிட், காடியக் கோர்ஜன், கைக்காற்றிக் பெசலிஸ்ட் என்று நிபுணராக வெள்ளைக் காரனுக்கு பணத்துக்காக தொழில் செய்யிறதில நம்மவருக்கு என்ன பெருமை இருக்கு? நான் முகஸ்துதிக்காக சொல்லேல்ல.... எங்களுடைய நாட்டு மக்களின் நலனைப்பற்றிச் சிந்திக்காமல் யூ.கே. யில வந்து குவிஞ்சிருக்கிற ஆயிரக் கணக்கான டொக்டர்களை விட யூஆர் கிரேட்! எங்களுடைய கஸ்ரப்படுற மக்களோடு இருந்து நீ இங்க செய்யிற சேவைக்கு ஈடேயில்லை!” ⌘

அறிஞனைக் கண்டுபிடிக்க, அறிஞனால் தான் இயலும். - டயோஜினீஸ் லேயர்ட்டியஸ்



# முகவரிச் சீட்டு

பாரியும் அதியமானும் சந்திக்கின்றனர்.
"முல்லைக்குத் தேர் கொடுத்தவரே! முகம் ஏன் வாடி இருக்கிறது"
"உயிரோடிருந்தவரை நல்ல பெயர் எடுத்தோம். எல்லாவற்றையும் கெடுத்துக் கொண்டிருப்பவர்கள் இப்போது நம்முடைய பெயர்களையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்."
"எப்படி"
பரிசுச் சீட்டுகளுக்கு நம்முடைய பெயர்களைச் சூட்டி இருக்கிறார்கள்."
"அதென்ன சீட்டு!"
"நம் நாட்டின் இப்போதைய முகவரிச் சீட்டு. ஒரே நாளில் லட்சாதிபதிகளை உருவாக்கும் மந்திரச் சீட்டு."
"பரவாயில்லையே. 'செத்தும் கொடுத்தான'என்ற பட்டம் சீதக்காதிக்கு மட்டும் சொந்தமாக இருந்தது. அந்தப் பட்டத்தை நமக்கும் தந்து விட்டார்களா"
"கொடையா இது? சூதாட்டம். பலருடைய கண்ணீரைத் திரட்டி ஒருவருக்கு குடிக்கத் தருகிறார்கள்.
"அரசாங்கமே சூதாடுகிறதா?"
"ஆமாம். அதுவும் மக்களிடம்."
"சூதாடுவது குற்றம் என்று சட்டம் இருக்கிறதே?"
"சட்டம் ஒழுங்கு எல்லாம் குடிமக்களுக்குத்தான்: கோலோச்சுகிறவர்களுக்கு அல்ல. மக்களைப் பிடிப்பதற்குத்தான் சிலந்தி வலை பின்னுகிறதுதான் சிக்குவதற்கு அல்ல"
"அறிவுகெட்டநாடாக இருக்கிறதே. வள்ளல்களைக் கொள்ளைக்காரர்கள் ஆக்கிவிட்டு கொள்ளைக்காரர்களை வள்ளல்கள் என்கிறார்களே?"
"நம்மிடமும் தவறு இருப்பதாக நினைக்கின்றேன"
"என்னதவறு,"
"மக்களைக் கொடுத்துக் கெடுத்துவிட்டோமோ என்று அஞ்சுகிறேன்,"
"இல்லாதவர்களுக்குத்தானே கொடுத்தோம்."
"இருக்கலாம். அதனால் வாங்கியே பிழைக்கும் பிச்சைக்கார மனப்பான்மை வளர்ந்து விட்டது. இலவசம், இனாம் என்றால் நாவைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஓடுகிறார்கள். பிச்சைப் பாத்திரத்தை இலவசமாகத்தந்தால் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் தருகிறவர்களையே தலைவர்களாகவும் முடிசூட்டவும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இந்த இலவசங்களைப் பெற அவர்கள் எதை விலையாகக் கொடுக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிவதில்லை இன்றைய முல்லைக் கொடிகள்இலவசமாகக் கிடைக்கும் கொழுகொம்புக்காகத் தங்கள் பூக்களை இழந்து விடுகின்றன. இன்றைய ஔவையார்கள் இனாமாகக்கிடைக்கும் கனிக்காகத் தங்கள் நாவுகளைப் பறிகொடுத்து விடுகிறார்கள்."
"நாம் வாங்கும் கரங்களை நட்டு வளர்த்தோம். இப்போது கிளைகளும் கையேந்துகின்றன."

**டாக்டர் அப்துல் ரகுமான்**

(நன்றி சுட்டுவிரல்)



## சரியும் பிழையுமாய்

"சீனா-மாவன்னா"

மணல் வெளியில்
கால்கள் புதைந்தன
ஓடி ஓடிக் கால்கள் துடித்தன –
எத்தனை காலமாய்
கண்களின் பார்வைக்குள்
அகப்படாத அழகுக் கோலமாய்...
பாதைகள் விரிந்தன.
கிடங்குகள் இல்லைத்தான்.
வீட்டு மதில்கள் புதியன தான்.
வீதியோரத்துப் பனைகள் எங்கே?
காய்த்த கனத்தில் வளைந்த தென்னைகள்
வயல் வெளிக்கரையில் உயர்ந்த மரங்கள்...
உறவுகள் எல்லாம் புதிய முகங்களாய்
கோவில்கள் கடைகள் பள்ளிகள் யாவும்
கோலம் மாறிப் போயினதுண்மையோ
பாதையில் போகும் என்னுருப் பார்த்து
வியப்போடனைவரும் விலகுகின்றார்கள்
தெரிந்தவர் சிலருடன் கதைக்க விருப்பமாய்
வாயைத் திறக்கவும் வார்த்தைகள் மறுத்தன
வீதிக்கு வீதி வெள்ளைக் கொடிகள்...
நிலையினைக்காட்ட நிமிர்ந்துவிண் நாடின
எங்களூர் எல்லையில் கால்கள் பதிந்தன
ஏகாந்த வெளியாய்...
எத்தனை மாற்றம்
சரியும் பிழையுமாய்...
வானத்தில் உறுமல் –
என்னவாய் இருக்கும்
எண்ணிப் பார்க்கையில்
பெரும் வேட்டொலிகள் – வானில் இருந்து
கோட்டைகள் இடிந்து வீழ்வது போல
குவலயம் நடுங்கிக் கொள்வது போல...
''அப்பா நேரம் ஏழரை''யென்றாள்
அன்பாய் என் மகள் கிருபாக்குட்டி
திடீரெனக் குழம்பிய சாமத்துக்கனவு
திசைகெட்டுப் போனது உண்மையோ? பொய்யோ?

# உருவகக் கதைகள்

## தேடல்

தாமரைப் பூக்கள் அழகாக மலர்ந்திருந்தன. வான் நோக்கி சூரியனைப் பார்த்து புன்னகைத்தன. அந்தப் பூவின் கீழ் பூவுக்கு மரகதக் கம்பளம் விரித்தது போன்றிருக்கு தாமரை இலையில் ஒரு நீர் முத்து.

நீர்முத்து மலரைப் பார்த்துக் கேட்டது-

' எப்போதும் வான்நோக்கி புன்னகைக்கிறாயே அந்தச் சூரியன் எப்போதாவது உன்னை நோக்கி புன்னகைத்துள்ளானா?

'என்னைப் பார்ப்பதற்காகத்தானே தினமும் அதிகாலையில் வருகிறான்' என்று கூறியது மலர்.

'அண்ணாந்து பார்த்து கழுத்துளையப் போகிறது. கீழே குனிந்து பார். உனக்காக உன் காலடியில் அவனைச் சிறைப்பிடித்து வைத்திருக்கிறேன்' என்றது இலை.

அதிர்ச்சியுடன் கீழே குனிந்த மலரின் பார்வையில் தாமரை இலைமேல் நீர்முத்துக்களினுள் சிறைப்பட்டிருக்கும் சூரியனின் குறுந்தோற்றம்தெரிய....

'வானத்தில் இருக்கும் நட்சத்திரத்தை விடவும் காலடியில் இருக்கும் முத்து பெறுமதியானது' என்றது குளத்தில் நீந்திய மீனொன்று.

## அது



" 'கரு' என்றால் என்ன?"-சீடன் கேட்டான்.
"அதுதான் உடலின் மூலம்"-குரு பதில் சொன்னார்.
" 'உரு' என்றால் என்ன?"-மீண்டும் கேள்வி.
"அதுதான் உடலின் கோலம்"-மீண்டும் பதில்.
"அப்படியென்றால்'உயிர்'என்பது என்னவாம்?"-
"அதுதான் படைப்பின் ரகசியம் சீடா....!"
"அப்படியென்றால்.....?"-சீடனின் கேள்வியில் ஆவல்.
சற்று நேரம் யோசித்த குருசொன்னார்:
''உஷ்...அதை மட்டும் கேட்காதே ரகசியங்கள்

## உண்மை

-மரணப்படுக்கையில் அந்த அரசியல்வாதி கிடந்தான்.
-அவனது கடைசிமூச்சை எதிர்பார்த்தபடி ...கடைசி ஆசையைக் கேட்கும் நண்பர்களும் உறவினரும் அவனைச் சுற்றிலும். அவன் எதையோ சொல்லத் துடிப்பது போல்பட்டது.......
ஒருவன் குனிந்து அவனிடம்: "நீ கடைசியாக என்ன சொல்லவிரும்புகிறாய்....?" என்று கேட்டான்.....
-அவன் உதடுகள் பிரித்து மெல்லச் சொன்னான்.....
"நான் ஏதாவதொரு உண்மை பேச வேண்டும்..."
-'அப்படியா என்ன உண்மை..?சொல்லப்பா..." என்றான் அவன்.
-"நான் சாகப்போகிறேன்" அவ்வளவுதான்.
'அவன் இறுதியாகச் சொன்ன சொல்லைக் காப்பாற்ற செத்தே போனான்.



**-தூரன்-**

## -பொய்க்கால்-

**நா.கானகன்**


அவன் மூன்றாவது
கடையேறுகையில்
நேரமோ...
காலை பதினொன்று
தள்ளாடியபடியே போகின்றான்.
உண்டிருப்பானோ, என்னவோ...

'உழைச்சுப் பிழைக்கத்
தெரியாதது'
நான்காவது கடையேற்றத்தில்
நரக வேதனை தரும்
ஒரு வார்த்தை
அதையும் கேட்டுப் போகையில்
மதியம் மணி பன்னிரெண்டு.
மனம் –
நொந்திருக்குமோ, என்னவோ...

இப்போது
ஆறாவது கடையேற்றம்
'அங்கபார் அது பொய்க்கால்'
நண்பனின் குரலையும் மீறி,
'அது காணி பார்க்கப் போனபோது
கண்ணிவெடியில் போனது'
பக்கத்தில் நின்றவரின்
பரகசியம் –
அவனுக்கு கேட்டிருக்குமோ, என்னவோ...

நேரமோ...
மாலை மணி ஐந்து
அவன் –
அடிக்கடி எண்ணிக் கொள்ளும்
ஐந்தாறு சில்லறைகள்
அரை இறாத்தல் பாண் வேண்டக்
காணுமோ, என்னவோ...

☞ தான் அறிஞன் இல்லை என்பதை அறிந்தவனே, அறிஞனாக முடியும். - புப்லிலியஸ் ஸைரஸ்



# இளையநாதம்

## குட்டிக்கதை

## தனக்கென வரும்போது...

அன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை விடுமுறை நாள். மோகன் தனியாக விளையாடிக் கொண்டிருந்தான். அவனைத் தேடி மதி வந்துகொண்டிருந்தான். ''டேய் மதி வாடாப்பா இண்டைக்கு லீவுதானே விளையாடுவம்'' என்று மோகன் கூப்பிட்டான்.

''மோகன் இண்டைக்கு முதலுதவிச் சிகிச்சை, தீ-தடுப்பு முறை பற்றி வகுப்பு என்று நேற்று சேர் சொன்னவரல்லோ வா போவம்'' என்றான் மதி.

''உனக்கு வேறவேலையே கிடையாதா? நான் வரேல்லை. நீ போயப் பழுகு பாடப்புத்தகத்தைப் படிச்சால் காணும். நான் தனிய விளையாடப் போறன்'' என்று மோகன் அலட்சியப்படுத்தி விட்டான்.

''சரி நீ வராட்டி விடு. காலம் வரும்போது உணர்வாய். நாம் பாடப் புத்தகத்தையும் படிச்சுக் கொண்டு ஆபத்துக்கு உதவ சில பயிற்சிகளையும் அறிந்து வைத்திருக்க வேண்டும் நான் போறன்'' என்று கூறி விட்டு வகுப்புக்கு ஒழுங்காகப் போய் வந்தான்.

இருவரும் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். மோகனோ புத்தகங்களை சப்புசப்பு என்று சப்பிக் கொண்டு போய் பரீட்சை எழுதி முதலாம் பிள்ளையாக வருவான். ஆனால் மதியோ வகுப்பில் படிப்பிக்கும் பாடங்களை புரிந்து கொண்டு மீதி நேரங்களில் நூலகங்களுக்குச் சென்று பொது அறிவை வளர்த்துக் கொண்டு, முதலுதவிச் சிகிச்சைகளைச் செய்வதிலும் சுறுசுறுப்பான், எங்கு என்ன விபத்துக்கள் நடந்தாலும் முன் நின்று உதவுவான்.

மதியின் செயலைக் கண்டு ஆசிரியர்களும், பெரியவர்களும் பாராட்டினர். மதி தன் பணிகளைத் தொடர்ந்து செய்தான்.

வழமைபோல் பாடசாலை விட்டு மதியும், மோகனும் வந்து கொண்டிருந்தனர். மோகனின் வீட்டடிக்கு வந்தபோது ''டேய் மதி வா என் அம்மா [illegible] வாங்கித்தந்திருக்கிறா காட்டிறன்'' என்றான் மோகன். சரி என்று மதியும் வீட்டுக்கு போனான்.

வீட்டுக்குள் மோகனின் அம்மா அலறும் சத்தம் கேட்டு ஓடிப் போனால் அவவின் சீலையில் நெருப்பு பிடித்திருந்தது. மோகன் என்ன செய்வதென்று நிற்க... மதி வேகமாக வாசலில் கிடந்த சாக்கை நனைத்து அவாவின் மீது சுற்றி நிலத்தில் புரட்டி எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்து விட்டு, வைத்தியசாலைக்குக் கொண்டு போனார்கள்.

மோகனின் தாயார் பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டார். மதி செய்த உடனடி முதலுதவியாலேயே பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டார் என்றதை அறிந்த டாக்டர் அவனைப் பாராட்டினார். மதியின் இரு கைகளையும் பிடித்து ''டேய் மதி அண்டைக்கு வகுப்புக்கு வா என்று நீ கூப்பிட அலட்சியம் செய்ததன் விளைவை இப்ப நல்லாப் புரிஞ்சிட்டன், நீ இல்லாட்டி என்ர அம்மாவை கண்டே இருக்க மாட்டண்டா'' என்று கண்ணீர்மல்க கூறினான் மோகன்.



சரி இப்ப என்ன நடந்திட்டுது என்று மோகனைப் பார்த்து மதி கேட்க, ''இல்லையடா நானும் உன்னோட முதலுதவி வகுப்புக்கு வரப்போறன்'' என்றான்.

காலம் வரும்போது மாறுவான் மோகன் என்றதை அன்று நினைத்தது மதிக்கு சந்தோஷமாக இருந்தது.

## வாரம் ஒரு குறள் அறிவோம்.



அடுத்தவர் மேல் பழிகளைச் சுமத்துவதிலும், அவர்கள் விடும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதிலும் எம்மில் பலர் சந்தோஷமும் நிம்மதியும் அடைகின்றோம். சதாநேரமும் அடுத்தவர்களைப் பற்றியே சல்லடை போடுகிறோம். அவர்களின் குறை, குற்றங்களைக் கண்டு கொள்வதற்காக அதற்குக் கையும் காலும் வைத்து எதை எதையெல்லாமோ பரப்பி விடுகின்றோம். ஆனால் எமது குற்றங்களை, நாம் செய்யும் தீய செயல்களைக் கண்டு கொள்கிறோமா? இல்லவே இல்லை. எனவே அடுத்தவர் மேல் பழி காண்பது போல எம்மீதுள்ள பழி, பாவங்களையும் குற்றச் செயல்களையும் கண்டு உணர்ந்து கொள்ள நாம் தலைப்படுவோமானால் இந்த உலகத்தில் தீய செயல்களே இல்லாதொழிந்து விடும் அல்லவா? இதனையே,

''ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம்
-காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

என்ற குறள் மூலம் வள்ளுவப் பெருந்தகை எமக்கு உணர்த்தியுள்ளார்.

## ரதனும் சுதனும்



ரதன்:- இறந்தவர்களின் எலும்புக் கூட்டிலிருந்து ஆணா, பெண்ணா என்று அறிந்து கொள்வது எப்படி?

சுதன்:- மண்டையோட்டிலிருந்து கூட நாம் வேறுபடுத்தி அறிய முடியும். ஆண்களின் முகத்தசை செயல்படுதிறன் மிகு விசையுடன் இருப்பதால் பொட்டெலும்பு (Temporal bone) உள்ள கோடுகள் பளிச்சென்று தெளிவாகத் தெரியும். மேலும் ஆண்களின் கண்குழிவு முழுமையான வட்டமாக இருக்கும். பெண்களின் கண்குழிவு முழுவட்டமாக இராது.

பொதுவாக பெண்களின் கபாலம் சிறிதாக இருக்கும். இதைத் தவிர பெண்களின் இடுப்பெலும்புப் பகுதி பெரியதாகவும், அகலமாகவும் இருக்கும். இதன் அடிப்படையில் எலும்புக் கூட்டைக் கொண்டு ஆணா, பெண்ணா என்ற வேறுபடுத்தி அறியமுடியும்.

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் பிறக்கும்போது உங்களின் உடலில் 350 எலும்புகள் வரை உள்ளன. உங்கள் வளர்ச்சிக்கு இறுதியில் 200க்கு மேற்பட்ட எலும்புகளே உடலில் இருக்கின்றன.

அப்படியானால் முந்தியிருந்த எலும்புகளில் பல விழுந்தவிட்டனவா? காணாமல் போய்விட்டனவா?

அப்படி ஒன்றுமில்லை. முன்னர் தனித்தனி சின்ன எலும்புகளாக இருந்த பல எலும்புகள் ஒன்றோடு ஒன்று பொருந்திச் சேர்ந்து ஒரே பெரிய எலும்பாக மாறிவிட்டன. உங்களது உடம்பில் எலும்பே இல்லை என்றால் எப்படி இருக்கும்?


உள்ளே ஒன்றுமே இல்லாமல் பொம்மியபடிஇருக்கும். கோணிச் சாக்குப்போல உங்களின் உடல் காணப்படும்.


மனித உடலின் மிகச் சிறிய எலும்பு எங்கே இருக்கிறது? இது உங்கள் காதிலே உள்ளது. இதன் நீளம் 2மில்லிமீற்றர்ஆகும்.

கிருமிகள் சின்னஞ்சிறு உயிரினமாகும். இவை கண்ணுக்குத்தெரியாதவை . மிகமிகச் சிறியவை. பல்லாயிரக்கணக்கான கிருமிகள் நம்மைச்சுற்றியுள்ளன. நமக்குள்ளும் எப்போதும் உள்ளன. இவை தீவிரமடைந்தால் உங்களுக்கு நோய் உண்டாகும். சதையில் ஒரு காயமோ, பழுதான உணவை நீங்கள் உண்டாலோ இந்தக்கிருமிகள் உங்கள் உடலிலே கலந்துவிடும். இப்படி நடக்கும்போது உங்கள் உடலில் உள்ள ஆரோக்கியமான இரத்தம் இந்தக் கிருமிகளைக் கொன்று அழித்துவிடும்.

## செய்து பாருங்கள் உங்கள் கைகளில் ஒரு உருவம் கிடைக்கும்


(1) பல நிறக் கடதாசிகளை எடுத்துக் கொள்ளுங்கள்.








(உ)செவ்வக முக் கோணவடிவத்தில் 1ஆவது, உஆவது, 3ஆவது மடிப்புகளாக மடியுங்கள்

(3) 3/4 பக்கத்தில் வெட்டித் திறந்து, 4 பக்கமும் பின் பண்ணுங்கள்




(4) நுனியையும் அடிப்பாகத்தையும் பிடித்து இழுத்தால் ஜப்பான் சங்கிலி உருவாகும்.




## அறிந்து கொள்வோமா...?


(01) இங்கிலாந்தின் செய்திப் பத்திரிகை...
டைம்ஸ், டெய்லி டெலிகிராப், கார்டியன்.

(02) அமெரிக்காவின் செய்திப் பத்திரிகை...
வாஷிங்டன் போஸ்ட், நியூயோர்க் ரைம்ஸ்.

(03) பிரான்ஸ்சின் செய்திப் பத்திரிகை...
லாபெட்டிட் சஞ்சிகை, லாமாண்டே.


(04) மலேசியாவின் செய்திப் பத்திரிகை...
டெய்லி எக்ஸ்பிரஸ்.

## வளர்ப்பு மீன்கள்



வண்ண வண்ண மீன்கள்- நீரில்
வளைய வரும் மீன்கள்
கண்ணைக் கவரும் மீன்கள்
உள்ளங் களிக்கச் செய்யும் மீன்கள்
மின்னி மின்னி நீந்தும்- அழகை
மேனி வண்ணம் ஏந்தும்
சின்னஞ் சிறிய மீன்கள்- எழில்
திகழும் வண்ண மீன்கள்
கண்ணாடியால் தொட்டி அதில்
காணும் மீன்கள் சுட்டி
எண்ண இனிக்கும் மீன்கள்- எனது
இனிய வளர்ப்பு மீன்கள்

தெ. மோகனதாசன்
கிளி/புன்னைநீராவி வித்தியாலயம்



## விடுகதைகள்

(01) வெளுத்தவயல், கருத்த விதை, கையால் விதைப்பது, வாயால் பொறுக்குவது அது என்ன?

(02) நல்லவர் கொள்ளும் தானம், நாலு பேருக்கும் தராத தானம். அது என்ன?


(03) தொப்பையனுக்கு ஒரு வாசல், தோழனுக்கு இரண்டு வாசல். அது என்ன?

(04) மண்ணிலே பிறந்து விண்ணிலே மறையும். அது எது?

(05) வரி வரி வண்ணக் கொம்பு, வாடாத முத்துக்கொம்பு. அது என்ன?

விடைகள்: (1) எழுத்து (2) நிதானம் (3) சட்டை (4) சாம்பிராணி (5) சோளம்

## மீன் உணவு



இங்கிலாந்திலுள்ள அஸ்ரன் பல்கலைக்கழக ஆராட்சியாளர்கள் மீன் உணவு நமது ஆரோக்கியத்துக்கு நல்லது மட்டுமன்றி உடலில் கட்டிகள் ஏற்படுவதை தடுக்கவும் செய்கிறது என்கிறார்கள். வயிறு, குடல், வால் உள்ளிட்ட பல உறுப்புகளில் புற்று நோய் வராமல் இருக்க இது உதவுகிறது. அதிகமாக மீன் உணவு உண்ணும் எக்சிமோ இன மக்களுக்கு புற்று நோய் வருவது மிகக் குறைவாம்.

அறிஞனின் மை, தியாகியின் இரத்தத்தைக் காட்டிலும் புனிதமானது - முகமது நபிகள்

# சுற்றுச் சூழல் மாசடைதல் மூலம் மனிதஇனம் எதிர்கொள்ளும் பேராபத்து


-வீ.தேவபானு-

சூழல் என்பது மனிதனும், அவனைச் சார்ந்துள்ள அதாவது, சுற்றியுள்ள சுற்றாடலுமே சூழலாகும். இச் சூழலுடன் ஆதிகால மனிதன் நாகரீக வளர்ச்சியின்மையால் ஒன்றி வாழ்ந்தான். ஆனால் பின்னர் நாகரீக வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம் என்பவற்றால் சூழலைத் தனக்கேற்றவாறு இசைவாக்கம் செய்ய முற்பட்டான். இதனால், மனிதனென்ற உலகமே பாரிய சூழல் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுவிட்டது.

சூழல்மாசடைவதற்கு முக்கிய காரணமாக அமைவது ஏது என நாம் ஆராய்ந்தால் அது மனித செயற்பாடுகளின் விளைவுகளே ஆகும். சனத்தொகைப் பெருக்கம், மனித விருத்தி இதன் காரணமாக மனிதன் தனக்குத் தேவையான புதிய வாழ்விடங்களை அமைக்க வேண்டிய கட்டாயத் தேவை ஏற்படுகிறது. இதனால், காடுகளை அழித்து, விளைநிலங்களாகவும், குடியிருப்புக்களாகவும் மற்றும் பெருந் தெருக்கள், கடைகள், கட்டடங்கள் இப்படி பலவற்றை அமைக்கின்றான். காடுகளை நாம் அழிப்பதால் பாரிய சூழல் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது: ஏற்பட்டிருக்கின்றது. மழை வீழ்ச்சி குறைகின்றது: மண்ணரிப்பு ஏற்படுகின்றது. அது மாத்திரமல்லாமல் சுற்றாடலில் காபனீரொட்சைட்டு ($CO_2$) அதிகரிக்க காடழிப்பே முக்கிய காரணமாக அமைந்துவிடுகின்றது. காபனீரொட்சைட்டு வாயு அதிகரிப்பால் சூழல் வெப்பநிலையும் அதிகரிக்கின்றது. இதையே 'பச்சைய வீட்டு விளைவு' என்பர். இதனாலேயே கடும் வரட்சியைச் சந்திக்க வேண்டிய நிலை உருவாகின்றது.

சனத்தொகை அதிகரிப்பு காரணமாக மக்கள் இடவசதியின்றி நெருக்கடியான நிலையில் வாழவேண்டிய தேவை ஏற்படுகின்றது. தங்களது சுற்றாடல் உட்பட, கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக கடும் சிக்கலை எதிர்கொள்கிறார்கள். வீதியோரங்கள், குடியிருப்புக்கள், நீர்நிலைகள் என்பவற்றில் கழிவுகளைக் கொட்டுவதால் வளி மண்டலம் உட்பட நீரும் மாசுபடுகின்றது. இவை பாரிய நோய்க்கிருமிகளை உண்டாக்கி, மனிதனைத் தாக்குகின்றது. இத்தாக்கத்தால் மனிதனுடைய வாழ்க்கை வட்டம் பாதிப்படையக் கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

தொழிநுட்ப விருத்தி, காரணமாகவும், சூழல்பெரிதும் பாதிப்படைகின்றதென்று கூறுவதில் ஐயமில்லை. இன்றைய உலகின் வளர்ச்சி காரணமாக புதிய புதிய தொழிநுட்ப சாதனங்களின் கண்டுபிடிப்பு, மற்றும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகை காரணமாகவும் சூழல் மாசடைகிறது. அதுமட்டுமல்லாமல் இத்தொழிற்சாலையில் ஏற்படும் மிகை ஒலிகாரணமாகவும் சூழல் பாதிக்கப்படுகின்றது. இதனால், மனிதன் சுவாசம் தொடர் பாகவும், செவி தொடர்பாகவும் பல நோய்களை தனதாக்கிக் கொள்கின்றான். இவ்வாறு இத்தொழிற்சாலையில் ஏற்படுகின்ற இரசாயனக் கழிவுகளை நிலத்தினூடாக குழாய்கள் மூலம் கடலினுள் விடுகின்றார்கள். இச்சந்தர்ப்பத்தின் போது, குழாய்களில் வெடிப்பு ஏற்படுதல், துவாரம் உண்டாகுதல் இதன் காரணமாக நச்சு வாயுக்கள், சூழலில் பரவுவதால் பல மைல் சுற்றளவான பிரதேசங்கள் பாதிப்படைகின்றன. இதற்கு 'போபால்' நச்சு வாயுக் கசிவு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனால் ஏற்பட்ட தாக்கம் இன்றும் இருந்து வருவதாக ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றார்கள். அதுமட்டுமா: தொழிநுட்ப விருத்தியால் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்களில் ஒன்றான குளிரூட்டிகள் அதன் பாவனைக் காலம் முடிவடைந்ததும் கனமின்றி விடப்படுவதால் அதிலிருந்து வெளியேறும் ஒரு வகை கழிவுப்பொருட்களான குளோரோ புளோரோ காபன் (CFC) ஆல் ஓசோன் படை ஓட்டையாகின்றது. அதுமாத்திரமில்லாமல் ஏனைய நச்சு வாயுக்களும் தாக்கிக் கொண்டு தானிருக்கின்றன. இவற்றாலும் ஓசோன் படையில் துவாரங்கள் ஏற்படுகின்றன. இத்துவாரங்களூடாக சூரியனிலிருந்து வரும் புற ஊதாக் கதிர்கள் (ULTRA-VIOLET RAYS) நேரடியாகப் புவியை அடைவதால் புவியில் வாழுகின்ற மனிதன் உட்பட அனைத்து ஜீவராசிகளும் தோல் சம்பந்தமான புற்று நோய்க்கு ஆளாகின்றன.



விவசாய நடவடிக்கை காரணமாகவும் நிலம், நீர், வளி ஆகியன மாசடைகின்றன. வயலிற்குப் பயன்படுத்தப்படும் உரவகைகள் , கிருமிநாசினிகள் போன்றவற்றால் விவசாயிகளின் நண்பன் உட்பட ஏனைய நுண்ணங்கிகளும் இறக்கின்றன. மண்ணை வளப்படுத்தியவை இறப்பதால் மண்ணிற்கு இயற்கையாகக் கிடைக்கும் வளப்படுத்தும்தன்மை அற்றுப் போகின்றமையே நிலம்தரிசாக மாறுவதற்கு முக்கியமான காரணமாக அமைகின்றது.

> இன்றைய உலகின் தவறுகள்
> எதிர்கால உலகை பெரும் ஆபத்தினுள்
> தள்ளி வருகின்றது
> சூழல் மாசடைதல் இன்றைய
> எரியும் பிரச்சினைகளில்
> முக்கியமானதாகின்றது.


இதனால், தொடர்ந்து பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். இரசாயனப் பொருட்கள் மழை,வெள்ளம் போன்றவற்றால் அள்ளப்பட்டு நீர் நிலைகளை சென்றடைவதால் அந்நீரில் வாழும் மற்றும் ஏன் அந்த நீரைப் பருகும் உயிரினங்கள் யாவும் இறக்கும் நிலை ஏற்படுவதை வயல் பிரதேசங்களுக்கு அண்மையாக காணலாம்.

அவசர உலகின் அத்தியாவசிய பொருளாக பயன்படுகிறது. எரிபொருளாகும். பெரிய விமானம் உட்பட சிறிய விளக்கு வரை மனிதன் எரிபொருளைப் பயன்படுத்துகின்றான். இதன்போது வெளியேற்றப்படும் புகை காரணமாக வளி மாசடைகின்றது. வளியை அனைத்து உயிரினங்களும் சுவாசிக்கின்றன. இதனால் விளைவு எப்படியிருக்குமென சிந்தித்துப் பாருங்கள். அத்துடன் வியாபார நோக்கம்கருதி எண்ணெய் வளநாடுகளும் ஏனைய நாடுகளும் விற்பனைக்காக ஏற்றிச் செல்லும் எண்ணெய்க்கப்பல்கள் இயற்கையின் நிமித்தமும், கப்பல்களைச் செலுத்துபவர்களின் அவதானிப்பின்மையாலும் கடலில் விபத்துக்குள்ளாவதும், மூழ்குவதும் சாதாரணமாக அமைந்து விடுகின்றன. இதன்காரணமாக ஏற்படும் தாக்கங்களால் மனிதன் கடலுணவை பூரணமாக நிறைவு செய்து கொள்ள முடியாது தவிக்கிறான்.

இன்று அனைத்து மக்களதும் அன்றாடப்பாவனையில் பரவலாக பயன்படுத்தப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்றவை சூழலில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அன்றாடத்தேவை முடிந்ததும் அவைகள் சுற்றாடலில் வீசப்படுகின்றன. இவை விரைவாக மண்ணுடன் தாக்கமடைந்து செயலற்றுப் போகும்தன்மை அற்றவை. அப்படி செயலற்றுப் போகும் தன்மை ஏற்படுத்தலென்பது பல ஆய்வுகளுக்குப் பின்பே சாத்தியமாகும். அதனால், புவி மேற்பரப்பில் அப்படியே முழுமையாக தாக்கமடையாது இருப்பதனால் புவிக்குக் கிடைக்கும் சூரிய ஒளி நுண்ணங்கிகள் வாழ்வதற்காக சூழல் போன்றவற்றை பூரணமாகப் புவியை அடையவிடாது தடுக்கின்றன. அத்துடன் எரிக்க முற்பட்டாலும், அதனால் வெளியேற்றப்படும் நச்சு வாயுவும் ஆபத்தானதாகவே உள்ளது.

இவ்வளவு பிரச்சினைகளும் உலகத்தின் பிற நாடுகளில் தான் உண்டு என எவருமே கருதக் கூடாது. எமது நாட்டிலும் அதே சூழல் பாதிப்பு ஏற்படவே செய்கிறது. தொடர்ந்தும் தாக்கும் 'வெள்ளம் வருமுன் அணை போட வேண்டும்' இன்றைய எரியும் பிரச்சினைகளில் ஒன்றாகச் சூழல் பிரச்சினையும் ஒருபடி மேலேதான் நிற்கின்றது. இந்த விடயத்தில் அக்கறையின்றி இருப்பது எமது தாயக மண்ணையும் அதன் சூழலையும் எதிர் காலத்தில் பெரும் ஆபத்திற்குள் சிக்க அனுமதிப்பதாகிவிடும். ✦

# கருத்துப் பகிர்வு




வெள்ளி நாதமே,

சில மாதங்களுக்கு முன்பு இலங்கையின் அவுஸ்திரேலிய தூதுவராக, திரு. ஜனக பெரேரா நியமிக்கப்பட்டபோது அதை எதிர்த்து பல தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஆயினும் அவுஸ்திரேலியஅரசு, தமிழ் மக்களின் எதிர்ப்பைப் புறக்கணித்து அந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியை தூதுவராக ஏற்றது. அதற்கு முக்கிய காரணம் என்னவெனின் அவர் சுமார் 600 தமிழ் மக்களைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டபோதும், எவரும் அதை ஆதாரத்துடன் நிரூபிக்கவில்லை

அக்கொலைகள் 1996 ஆகஸ்ட்- செப்ரெம்பர் மாதங்களில் நடைபெற்றன. ஆனால் பெரேரா தான் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றவில்லை எனப் போலி ஆதாரங்களுடன் நிரூபித்தார்.

இறுதியில் தமிழ் (?) அமைச்சர் கதிர்காமர்,அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுனருடன் கதைத்து பெரேராவை தூதுவராக நியமனத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

இன்னும் சில சிங்களவர்கள் வேறு விதமாக ஒரு கேள்வியை எழுப்பினர். அதாவது ஜனக பெரேரா 600 தமிழ் மக்களைக் கொன்றார் எனக் கூறுகின்றீர்கள், அப்படியாயின் அவர் இலங்கையிலிருந்து துரத்தப்படுவது உங்களுக்குச் சந்தோசமான செய்தியாக இருக்க வேண்டும் என்றனர். தமிழ் மக்களைக் கொல்லும் எண்ணத்தைக் கொண்ட ஒருவர் இலங்கையில் இல்லாமல் இருப்பது இலங்கைத் தமிழ் மக்களுக்கு மிகவும் நல்லது என வாதிட்டனர்.



இங்குள்ள சிங்களவர்கள் 'செறெண்டிப் நியூஸ்' என்னும் மாதப் பத்திரிகையை பிரசுரிக்கின்றனர். அத்துடன் அதை இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகமெங்கும் (Emtass) அனுப்புவதாகக் கூறப்படுகின்றது. இம்மாத இதழின் முன்பக்கத்தில் ஒருசெய்தியை பிரசுரித்துள்ளனர். அதில் பெரேரா கருணை உள்ளம் படைத்தவர். மற்ற இராணுவ அதிகாரிகளைப் போலல்லாது, விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் உதவி செய்வார் என்ற கருத்துப்பட செய்தியொன்றை பிரசுரித்துள்ளனர். (அதை நீங்களே வாசித்துப்பார்க்கலாம்) என படத்துடன் அதைக் கூறியுள்ளனர்.

இவ்வாறு ஜனக பெரேரா வெளிநாட்டுத் தூதுவர்களைத் தன்பக்கம் கவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

T.சத்தியமூர்த்தி.
அவுஸ்திரேலியா.

---

என் இனிய நாதத்திற்கு!

நாம்தொலை தூரத்தில் இருந்தாலும் கூட எமது சொந்த இடத்துப் பத்திரிகையான உன்னைப் பார்ப்பதையிட்டு பெருமையடைகின்றோம். பல செய்திகளையும்,நிகழ்வுக்காட்சிகளையும் எமக்குத் தருவதையிட்டு மகிழ்வடைகின்றோம். 04-10-2002 நீ எமக்காய் தந்த தேசிய மகளிர்மாநாட்டு நிகழ்வுக்காட்சியின் மூலம் எமது பாடசாலை ஆசிரியரைக் கூடப் பார்க்க முடிந்தது. இதைவிட வெள்ளி நாதத்தை மட்டும் இங்குபெற முடிவதால், குறிப்பிட்ட ஒரு வாரத்தின் முக்கிய செய்திகளை தொகுத்து வெள்ளி நாதத்தில் தருவாயானால் எமக்கு எமது பிரதேச நிலைமைகளையும் முழுமையாக அறியக் கூடியதாக இருக்கும். மற்றும்படி உனது வெளியீடு எமக்கு திருப்தியே.

'' ஈழத்தின் குரலாக நீ என்றும் நிலைத்திருக்க
உன்னை வாழ்த்துகிறோம் நாம் நிறைவாக''

ம.சுதன்,
பல்கலைக்கழகம்,
கொழும்பு.

# எமது சமகால எழுத்தாளர்களின் பொறுப்பு



"பொறுப்பு" என்ற சொற்பிரயோகத்துடன் எனக்கு அவ்வளவு உடன்பாடில்லை. வருமானவரிப் பத்திரங்களை நிரப்புவது போன்று சோர்வூட்டுவதாகவும் சற்று பகட்டான தொனியை உடையதாகவும் அது உள்ளது. ஆக்க இலக்கியமொன்றைப் படைப்பது -வாசிப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக இல்லாவிடில், அது தன்னளவில் அதிகம் பயனுடையதாய் இராது. தீய இலக்கியம் நல்ல செயல்திறனுடையதாக இருக்க முடியாது. இலக்கியத்தின் உயர்தரத்தை ஊக்குவிப்பவர்கள் அனைவரும் அறிந்த இவ்வுண்மை முன்னாள் சோவியத் யூனியன் ஆட்சியாளரைப் போல் அடிக்கடி மறந்துபோகிறது. அல்லது வேண்டுமென்றே அலட்சியம் செய்யப்படுகிறது.

மேலும், "பொறுப்பு" என்பதை ஒத்த ஒரு கருத்து அவசியமானதாக இருக்கிறது. ஏனெனில், ஒரு பாழ்வெற்றிடத்தில் எந்த ஓர் எழுத்தாளரும் வாழ்வதில்லை: எப்படைப்பும் எழுதுவதுமில்லை. ஒருவர் ஒரு மொழியைப் பயன்படுத்தும்போது சமூகத்துடன்

**யூ.ஆர்.ஆனந்தமூர்த்தி**

உறவுபூண்டவராகிறார். அது மொழியை உயிர்ப்புடன் திகழச் செய்கிறது. மறுமலர்ச்சியால் ஆங்கில மொழியில் ஏற்பட்ட எழுச்சி- அதிர்வு ஒரு ஷேக்ஸ்பியர் தோன்றுவதைச் சாத்தியமாக்கியது. அக்காலங்களில் மக்கள் உயிர்ப்புடையவர்களாகவும் பொறுப்புடையவர்களாகவும் (respones)இருந்த காரணத்தால் மொழியானது உயிர்ப்புடையதாகவும் அதிர்வுடையதாகவும் இருந்திருக்கிறது. ஆகவே, நல்ல எழுத்தாளர் அனைவரும் தமது மக்களுக்கும், தமது மொழிக்கும் சிலவிடயங்களில் கடமைப்பட்டவர்களாகவே இருப்பதை உணர்ந்திருக்கிறார்கள். அதுவே அவர்களைத் திறம்பட நகர்த்துகிறது. மக்கள் தம் கடந்த காலத்துடன் தொடர்ச்சியான கருத்தினையுடையவர்களாக இருப்பதற்கு மொழியானது உதவுகிறது. ஒரு மக்கள் சமுதாயத்தின் கனவுகளும் சாதனைகளும் வரலாற்றினூடே நினைவளவில் பேணிப் பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எமது நாடுகளில் கடந்தகாலம் பற்றிய எமது நினைவுகள் அனைத்தும் எமது நாட்டார் கதைகள்,பாடல்கள் நாடகங்கள் மற்றும் புராணங்களில் போற்றிக் காக்கப்பட்டிருக்கின்றன.

நிகழ்காலத்தைப் போலவே கடந்தகாலத்திலும் எமது இலக்கியங்களில் மிகச் சிறப்பானதாக இருப்பதைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் எழுத்தாளர்கள் என்றவகையில் எமக்கொரு கடப்பாடு உள்ளது. இது, கடந்தகாலத்தை அப்படியே பார்த்துப் பின்பற்றுவதாகவன்றி, அதனுடன் ஆக்கபூர்வமாகத் தாக்கம்செலுத்துதன் மூலம் செய்யப்படல் வேண்டும். யீட்ஸ் (Yeats) என்பார், 'நாம் எமக்கிடையிலான முரண்பாடுகளினூடாகத்தான் கவிதை படைக்கிறோம். அத்துடன், பிறருடனான முரண்பாடுகளாகத்தான் எமது அரசியற் கோட்பாடுகள் அமைந்துள்ளன' என்று சொன்னார். இவ்விருவகையான முரண்பாடுகளும், அவை எமது மரபுகளுடனானவையாகவும் இருக்கலாம்: நிலையின்மையும் மாற்றமும் உடைய எமது காலப்பகுதிகளில் மிக இன்றியமையாதவையாகும். ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கிடையில் இத்தகைய முரண்பாடுகள் கலந்துரையாடப்படவும் வேண்டும் என்பதை நாம் கண்டிப்பாகக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மற்றும் ஏன் நாம் இவ்வாறு சந்திக்க வேண்டும்? உங்களுக்கு மிக அருகில் இருப்பதாலும் அதேநேரம் மிகத் தொலைவில் இருந்தாலும் கூட நீங்கள் ஏன்

> ❂❂ ஆசிய எழுத்தாளர்களைத் தனித்துவமாய் அடையாளப்படுத்தக் கூடிய தன்மை எமது மொழிகளில் உள்ளார்ந்து காணப்படுகிறது ❂❂

என்னைப் போன்ற சக எழுத்தாளரை இந்தியாவிலிருந்து அழைக்க வேண்டும். எங்களில் ஒருவரோடு ஒருவரிலும் பார்க்க ஐரோப்பாவுக்கு மிக நெருக்கமானவர்கள் என்று உணரும் வகையில் எமது கல்விப் பயிற்சியின் மூலம் நாம் பயிற்றுவிக்கப்பட்டுள்ளோம். ஆதலால், இந்தப் பரஸ்பர அறிமுகமின்மை துரதிருஷ்டவசமானது. உண்மை என்னவெனில், நவீன ஐரோப்பாவுடன் பகிர்ந்து கொள்வதைவிட எமக்கிடையில் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்ள வேண்டியவை மிகவும் அதிகமானவையாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, எமது பொதுவான மரபுரிமை மேலும், எமது பற்றார்வங்களின் விளைவுகள் மாற்றியமைக்கப்பட வேண்டியது தேவையாகும் அத்துடன், மரபில் சிறப்பானதை உள்ளார்ந்த சிறப்புடைய கலந்துரையாடலின் பயனாய் இன்னும் பாதுகாக்க முடியும்.

அங்கு எமது இந்திய மொழிகளில் உள்ள எழுத்தாளர்களிலும் கூட

> ** தமக்கென்று சொந்த வரலாறுடைய, வரலாற்றின் பெறுமதிமிக்க நினைவின் ஊடான தொடர்ச்சியுடைய எமது மொழிகளை வலிமைப்படுத்த வேண்டியிருக்கிறது என்பதை நோக்க வேண்டியது எமது மொழிகளில் உள்ள எழுத்தாளர்களின் பொறுப்பாகும். **

இத்தகைய இடைவெளி காணப்படுகிறது. ஆசியாவில் நாம் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்வதானால் மட்டுமே ஐரோப்பாவின் தலைசிறந்த எழுத்தாளர்களோடு சேர்ந்து நாமும் இலக்கியப் பெருமுயற்சிகளில் நல்ல பங்குதாரர்களாக ஆகமுடியும். இந்தக் கேள்வி இக்கருத்தரங்கிலுள்ள சிலரை ஈர்த்திருக்கும் என நான் நம்புகின்றேன்.

எழுத்தாளர்கள் என்றவகையில் குறிப்பாக, ஆசிய எழுத்தாளர் என்ற வகையில், எமது சொந்த மரபுகளுக்கு நடுநிலை மதிப்பீட்டு ஆற்றலுடைய உள் அங்கத்தவர்களாக இருப்பது எமது தேவையாக இருக்கிறது. திறனாய்வற்ற வெறும் அக உறுப்பினர்களாக இருப்பதன் விளைவாக, அது வெற்று ஆரவாரச்சொல் நிரம்பிய சொன்னடையையும் வெகு இலகுவாக உள்வாங்கக் கூடிய சிறப்பற்ற வெறுஞ்சொற்துணுக்குகளையும் கொண்ட கருத்தற்ற எழுத்துக்களையே அடிக்கடி உருவாக்கிவிடும். எமது ஸ்தோத்திர மரபு காரணமாக முதல்தர இலக்கிய நலம்வாய்ந்த எமது தொன்மத்திலிருந்து மரபுரிமையாகப் பெற்ற உரைநயமார்ந்த நடத்தை, குடியேற்ற ஆட்சியால் வலிமைப்படுத்தப்பட்டது. எங்களில் பலர் தம் எழுத்துக்களில் இத்தகைய பாணியைப் பின்பற்றி, சிந்தனையற்ற விதத்தில் தவறிழைக்கின்றனர். எங்களில் சிலர், 'நவீனத்துவவாதிகள்' இவ்வகைப் பகட்டான எழுத்துக்களை விமர்சிப்பவர்களாக இருந்து வருகிறார்கள்.

எமது மரபுகள் பற்றிக் கண்மூடித்தனமாக விமர்சிப்பவராக இருப்பதானது இன்னொரு வகையில், மேற்கு மயமாதலையும் எமது தொன்மங்களில் உள்ள நல்லம்சத்தையெல்லாம் மறப்பதையுமே விளைவாக ஆக்கக்கூடும். இந்தியாவின் புகழ்வாய்ந்த 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த கவிஞரும் கண்மூடித்தனமான கோயில் வழிபாட்டையும் சாதிமுறைமையையும் எதிர்த்துப் புரட்சி செய்தவருமான அறிஞர் பஸாவா(Basava) நடுநிலை மதிப்பீட்டு ஆற்றலுடையவராக இருந்தார். அவரைப்போலவே மாரத்திக் கவிஞரான துக்காராமும் இந்திக் கவிஞரான கபீரும் இருந்தனர். உன்னதமான இடைக்கால அருட்தொண்டர்களான கவிஞர்கள் யாவரும் இத்தகைய நடுநிலை மதிப்பீட்டுத் திறனுடையோராவர். தமிழிலும் சிங்களத்திலும் நீங்கள் இவ்வாறான நடுநிலை மதிப்பீட்டுத் திறம்வாய்ந்த அக உறுப்பினர்களில் ஏராளமானோரைக் கட்டாயம் உதாரணம் காட்டுவீர்கள்.

மற்றொரு விடயம் ஆசிய எழுத்தாளர்களைத் தனித்துவமாய் அடையாளப்படுத்தக் கூடிய தன்மை எமது மொழிகளில் உள்ளார்ந்து காணப்படுகிறது. உலகமொழிகளில் தலைசிறந்த இரண்டு இயக்கங்கள் இருந்து வருகின்றன. சுமார் ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு அலுவலகத் தொடர்புடைய பண்பட்ட நகரார் (Cosomo Polis) மொழியாக இலத்தீன் மொழி காணப்பட்டது. இது ஐரோப்பிய கிளைமொழிகளுக்கு வழி வகுத்துக்கொடுத்தது. இந்தக் கலாச்சாரப் பண்முகப்படுத்தலின் விளைவாக ஐரோப்பிய மொழிகளில் தலைசிறந்த ஆக்க இலக்கியங்கள் தோன்றின. ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரும் இத்தாலிமொழியில் டாந்தேயும் இதனைச் சாத்தியமுடையதாக்கினர். காரணம், இலக்கிய ஆக்கங்களில் அகலுவலகத் தொடர்புடைய பண்பட்ட மொழிக்குப் பதிலாக இக்கிளை மொழிகள் மாற்றீடு செய்யப்பட்டமையாகும். இந்தியாவில் படைக்கப்பட்டிருப்பது போல, கலாநிதி செல்டன் பொல்லொக் (Dr.sheldon Pollock) என்பார். இம்மாற்றம் குறித்த அற்புதமான இலக்கிய ஆக்கங்களைச் செய்துள்ளார். என்னைப் பொறுத்தவரையில் நான் எழுதிவரும் கன்னடமொழிபற்றி மட்டுமே பேசமுடியும். ஓர் ஆயிரம் வடங்களுக்கு முன்பு பரந்த உலகத்தொடர்பை பண்பட்ட நகரார் மொழியாக இருந்த சமஸ்கிருதமானது, புவியியல் ரீதியாகக், கன்னடமொழி கன்னடப் பிரதேசத்துள் பேசப்படும் ஒன்றாக மொழியைக் கட்டுப்படுத்தி, வரையறுக்க வழிவகுத்தது. ஓர் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு எமது புகழ்சார்ந்த இலக்கியமான கவிராஜ் மாடகா(Kaviraja marja)வில் இது பற்றிய ஆழமான கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன் ஆசிரியரான ஸ்ரீவிஜய, மொழியைப் புவியியல் வரையறை கொண்டதாக நோக்கிய போதிலும் அவ் ஆசிரியரின் படைப்பானது வரையறைக்குஅப்பாற்பட்டு உலகளாவிய ரீதியில் தனிச் சிறப்புடையது என்பதால் இது மிக முக்கியமானதாகும். ஆக்க இலக்கியங்களின் இத்தகைய பன்முகப்படுத்தலானது, எமது தொன்மையுடனான முற்றான முறிவை ஏற்படுத்தவில்லை என்பதை நாம் இங்கு மறக்கக் கூடாது. டாந்தேக்கு இலத்தீன் வேஜில் (Virgil) முன்னோடியாக அமைந்தது. ஓர் ஆயிரம் வருடங்களுக்கு முன்பான சமஸ்கிருத காளிதாஸர் கன்னடத்தின் பம்பா (Pampa) வுக்கு ஒரு முன் மாதிரியாக அமைந்தார். தமிழில் இது போன்றவை மிக ஆரம்பத்திலேயே நடைபெற்றன. புராதன இந்தியாவின் புத்த பெருமான் மக்களுடைய மொழியில் பேசினார். எமது காலப்பகுதியில் முழு உலகத் திலுமுள்ள ஆக்க இலக்கியமும் மக்களுடைய மொழிக்கு மிகுந்த வல்லமை வழங்குவதற்குக் கடமைப்பட்டுள்ளது.

உலகமயமாதலின் தாக்கத்தின் கீழ் இன்னம் ஓர் ஆயிரம் வருடங்களுக்குப் பின் நாம்வேறொரு சுழற்சிநிலையைக் காண்போம். மக்களுடைய மொழிகள் அச்சுறுத்தப்படுகின்றதை, அவற்றின் அதிகாரம் குறைந்துவருகின்றதைக் காணமுடியும். பெரும்பாலும் இந்த முழு உலகும் அலுவலகத் தொடர்புடைய பண்பட்ட ஒரு மொழி என்ற ரீதியில் ஆங்கிலம் இருக்கும் கோணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கு உலகின் அதியுயர் சக்திவாய்ந்த நாடான அமெரிக்க ஐக்கிய நாடு அதனைப் பயன்படுத்துவது காரணமேயன்றி, ஷேக்ஸ்பியர் அம்மொழியில் இலக்கியம் படைத்தார் என்பது காரணமல்ல.

தமக்கென்று சொந்த வரலாறுடைய, வரலாற்றின் பெறுமதிமிக்க நினைவின் ஊடான தொடர்ச்சியுடைய எமது மொழிகளை வலிமைப்படுத்த வேண்டியிருக்கிறது என்பதை நோக்க வேண்டியது எமது மொழிகளில் உள்ள எழுத்தாளர்களின் பொறுப்பென்று உணர்கிறேன். இது ஒரு கலாச்சார இலக்கு என்பதைப்போலவே பெருமளவுக்கு அரசியல் இலக்குமாகும். இந்த இலக்கு பலவிடயங்களைக் குறிப்பிடுகிறது. ஒன்று: அதுபொருளாதாரப் பன்முகப்படுத்தலையும் கிராமிய மட்டத்திலான சனநாயக நிறுவனங்களின் வலிமைப்படுத்தலையும் குறிக்கிறது. இரண்டு: அது உண்மையில் கூட்டாட்சி அரசாங்கங்களைக் குறிக்கிறது.

வெறுமனே கலாச்சாரக் காரணங்களின் அடையாளத்துக்காக அன்றி, பொருளார்ந்த ஆளுகைக்காகவும் இத்தகைய உறுதிவாய்ந்த, நிலையான அரசியற் செயற்பாடு தேவையானதாகும். அத்துடன், இந்தியாவைப் போன்றதொரு பெரிய நாட்டில் இது பயனுறுதிவாய்ந்த ஆட்சியாகவும் இருக்கும்.

இந்திய மொழிகளில் எமது பன்முகத்தன்மை ஒரு பண்புக் கூறாகவும் எமது குடியரசுக்கான உத்தரவாதமாகவும் இருக்கிறது. எங்களின் இந்தியப் பண்பாட்டின் தன்மை பற்றி நாம் விபரிக்கும் போது நாம், "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறோம். இது எதைக் குறிக்கிறது என்றால், ஒரு சர்வாதிகாரியான ஆட்சியாளர் உயர் மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சியில் உள்ள விருப்பத்தினால் ஒற்றுமையை வற்புறுத்துவார் எனில், அதன்பின் நாம் எமது பிரிவினைகளில் முனைப்பான விழிப்புடையவர்களாகி விடுவோம்.

(அடுத்த வாரமும் வரும்)

# நாங்களும், விபத்தும்



'போர் நிறுத்தம்' ஒரு பக்க சந்தோசம். அதன் பின்னான 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' மறுபக்க சந்தோசம். அதைவிட, பாதை திறப்பு மென்மேலும் எம்மக்களை ஏன் உலகத் தமிழரையே இன்பத்தில் ஆழ்த்தியது என்று தான் சொல்ல வேண்டும். இத்தனைக்கும்பிரிந்த உறவுகள் ஒன்று சேரவும், நீண்ட காலத்தின் பின்தாய்நாட்டைப் பார்க்கவும், அதன் சிதைந்த அழகை இரசிக்கவும் பலபேரால் முடிந்தது.

நாட்டைவிட்டுப் பிரிந்தவர்களுக்கு நீண்ட போரின் பின்னும் தாயகத்தின் தலைநிமிர்க்கோலம் எப்படியிருக்கும் என்பதை இப்பாதை திறப்பு எடுத்துக் காட்டியிருக்கும். 'பாதை திறந்தாச்சாம்' என்று கேள்விப்பட்டதும் எத்தனைபேர் சொந்தமாக கார், பஸ், மோட்டார் சைக்கிள், ஆட்டோ .... அப்பப்பா! சொல்லவே முடியாத அளவிற்கு தென்பகுதியில் வாகன விற்பனை சூடுபிடித்துள்ளது. வாகனங்களைத் தமதாக்கியவர்கள் வவுனியாவிற்கும், யாழிற்கும் ஏ-9 ஊடாக கொழும்பிலுள்ள மலிவான, தரமான பொருட்களை அள்ளிக் கட்டிக்கொண்டு ஊர், உறவு எனப் பார்க்கவும், பேசவும், கட்டித்தழுவவும்: எவ்வளவு பேச வேண்டும், எவ்வளவு கேட்க வேண்டும் என்ற ஏக்கத்துடன் ஓடி வந்தவர்கள் ஒரு கணம் ஏ-9 பாதையில் திகைத்து நின்றனர்.

ஏன் நான் பூடகமாக இவ்வளவு நேரம் சொல்லி வந்தேன் என்றால், அதனைப் புரிந்துகொள்வீர்களா எனப்பார்க்கத்தான். புரிந்தால் உங்களுக்கு நன்றி: புரியாவிட்டால் எனக்கு நன்றி. ஏனெனில், நானே புரியவைக்கிறேன். பாதைகளில் தன்னைப் பல வடிவமாக மாற்றி சிரித்தவண்ணம், யாரையாவது இரையாக்க மாட்டேனா என்ற ஆவலுடன் விபத்து நடமாடுகின்றது. இந்த விபத்தை முறியடிக்க எம்மால் முடியும். முடியாது என்பது கிடையாது. "விபத்து உன்னைத் தேடி வந்தால் அதிலிருந்து நீ விலக்கிக்கொள்" அதற்காக விபத்துத்தான் உங்களைவிட்டு விலக வேண்டுமென எதிர்பார்க்கக் கூடாது. அப்படி எதிர்பார்த்தால் அது உங்களது வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும்.

திடீரென்று வீதியில் விபத்து: மக்கள் கூட்டம்: ''யாராம் அடிபட்டது?'' என்பார்களே தவிர, எவராவது விபத்துக்குள்ளானவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டுமெனச் சிந்திக்க மாட்டார்கள். உதவிதான் செய்யாவிடினும் விமர்சனத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். சிலர் இப்படித்தான் 'மச்சான் சைக்கிள் றிம்மைப் பார்த்தியா? எட்டா வளைஞ்சிட்டுது' இத்தனையும் எம் உறவுகள் தான் ஆனால், ஒருவராவது 'ஏன் இந்த விபத்து ஏற்படுகிறது' 'இந்த விபத்துக்கு யார் காரணம்?' 'இவ்விபத்தை எந்த நடவடிக்கையூடாகத் தடுக்கலாம்?' என்றெல்லாம் ஆராயும் தன்மை சொல்லவேண்டும். நாம் செலுத்தினால் தானே வாகனம் ஓடும். சாரதி இருக்கையில் ஏறி அமர்ந்ததும் கண், மூக்கு தெரியாமல் வாகனத்தைச் செலுத்துவது விபத்துக்கு ஒரு காரணமாகும். விபத்துக்களை தடுப்பதற்காக வாகன வேகத்தை, குறைக்குமளவுக்கு அறிவிப்பு இருக்கும். ஆனால் அதே இடத்தில் மணிக்கு 20 கி.மீ. எனக் குறிப்பிட்டிருந்தாலும் அதை விட வேகமாகத்தான் வாகனத்தை பெரும்பாலானவர்கள் செலுத்துகிறார்கள். இது ஏ-9 பாதையில் கிளிநொச்சி நகரில்காணக்கூடிய சம்பவம். பாதசாரிகளின் தவறுகளும் கணிசமான அளவு உண்டு என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

வாகனத்தை வேகமாகச் செலுத்தும் போது நிதானமிழப்பது மற்றுமொரு தவறு. 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' அளவுக்கு மீறிய வேகத்தில், அதுவும் அவசர தேவையை குறித்த நேரத்தில், குறித்த இடத்திற்குச் சென்று நிறைவேற்ற வேண்டுமென்ற அவா. இவை வாகனத்தை விட வேகமாக முன் செல்லும். இதை முந்துவதற்கு வாகனத்தை நீங்கள் செலுத்துவதால் வேலி முதல் மரவேர் வரை பிரட்டுவதே தற்போதைய சூழ்நிலையாகத் தென்படுகிறது. எடுத்துக்காட்டாக வீதியில் வளைவு அல்லது நான்கு சந்தி எனக் குறிக்கப்பட்ட அறிவுறுத்தலை விளங்கிக்கொள்ளக்கூடிய தன்மை சாரதிக்கு இருக்கவேண்டும். அப்போதுதான் ஓரளவாவது விபத்தை விலக்கலாம். ஆனால், சிலர் வீதியொழுங்கை விழுங்கி விட்டுத்தான் வாகனத்தைச் செலுத்துகின்றார்கள் என்பதை நேரடியாகவே காணக்கூடியதாகவுள்ளது.

'குடி குடியைக்கெடுக்கும்' என்பது பழமொழி. 'குடி விபத்தைகொடுக்கும்' என்பது என் மொழி. பெரும்பாலான சாரதிகள் குடிபோதை மயக்கத்தில் வாகனத்தைச் செலுத்தும் போது எங்கோ ஓரமாக நிற்கின்றவர்களைக் கூட முட்டிவிட்டுத்தான் போவார்கள். ஏன் குடித்து விட்டு வாகனத்தைச் செலுத்த வேண்டும். குடிப்பதென்பது தவறு. அதிலும் போதையில் வாகனத்தைச் செலுத்துவதென்பது மிகமிகத் தவறு. நாம் விபத்தை விலை கொடுத்து வாங்க ஒரு போதும் முற்படக்கூடாது.

நடு வீதியில் 'நீ செய்யிறதைச் செய், நான் இப்படியே தான் போவேன்' என மந்தைகள் நிற்பது போல.... மந்தைகள் வளப்போர், அவைக்கென்றொரு இடத்தைத் தீர்மானித்து, அவைகளை வளர்க்கவேண்டும். அத்துடன் அவைக்கு சரியான பராமரிப்பு இல்லாது போக அவை தன்னிச்சையாக வீதிகளில் அங்குமிங்குமாக நடமாடும் போது, விபத்து திடீரென்று ஏற்படுகின்றது. மந்தைகள் செத்தால் மீண்டும் வாங்கலாம். மனிதன் செத்தால் மீண்டும் வாங்கலாமா?

தற்போது, சாரதிகளுக்கான தேவை அதிகரித்துள்ள இன்றைய காலத்தில் புதிதாக வாகனம் செலுத்தக் கற்றுக்கொள்கிறவர்கள் தங்களது பயிற்சியை பூரணமாக நிறைவு செய்யும் முன்னர் அனுமதியின்றி வாகனத்தைச் செலுத்த முற்படுவதால், விபத்துக்கு இதுவுமொரு காரணமாக அமைந்து விடுகிறது. வாகன த்தைப் பூரணமாகத் தனது கட்டுப்பாட்டில் செலுத்தத் தெரியாதவர்கள், வாகனத்தைஓட்ட ஆசைப்படுவது தப்பானது.

வாகனச் சாரதிகளை பற்றிச் சொல்லிவர, ஏனையோர் சந்தோசப்படுவார்கள். இந்த விபத்துக்களுக்கும், எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்று. தொடர்பு உண்டு என நான் சொல்கிறேன். சாதார ணமாக, சைக்கிளைப் பயன்படுத்துகின்றவர் களையும், நடந்து செல்கின்றவர்களையும் பார்த்தால், அயலவருடன் கதைத்தவாறு, எடுத்த எடுப்பிலேயே சைக்கிளை நடுவீதியால் திருப்புவார்கள். நடப்பவர்களும் அப்படித்தான் திடீரென எதுவித அவதானிப்பின்றி, வீதியைக்கடக்க முயல்வார்கள். அப்போது, மூச்சைத் தள்ளியவாறு வரும் வாகனம், என்ன செய்யுமென யோசியுங்கள். அதைவிட வீதிகளால் நடப்பவர்கள், கடைகளில் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பொருட்கள் மற்றும் விளம்பரங்களைப் பார்த்தவாறு, ஆவெனச் சென்று பல்லுடைபட்டதும் தான், மீண்டும் சுயநினைவிற்குத் திரும்புவார்கள். அதைவிட. வாகன சாரதிகளால் பயன்படுத்தப்படும் வாகனக் குறிகாட்டிகள் எது எவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பது, சிலவீதிப்பாவனையாளர்களுக்குத் தெரிவதில்லை. குறிப்பாக. வாகனம் திரும்புவதற்கு குறிகாட்டி மின்குமிழ் ஒளிர்ந்தால் பின்னே செல்பவர் அதனைப் புரியாமல் அல்லது அவானிக்காமல் தொடர்ந்து செல்ல, வகனமும் திரும்ப.......?

அண்மைக்கால பத்திரிகையைப் பார்த்தால், ஓரேவீதி விபத்துத்தான். ஓராண்டு புள்ளி விபரம் இந்தத் தடவை முன்பை விட உயரத்தான் போகிறது. உங்களது அவதானமின்மை, சலிப்பு, வெறுப்பு இவற்றுக்குக் கொடுத்த விலை உயர்ந்த உயிர்கள் எத்தனை? சிதைந்த அங்கங்கள் எத்தனை? இத்தனை விபத்துக்களுக்கும் நீங்கள் தான் காரணம். உங்களாலேயே, உங்களது ஏன்? அடுத்தவன் எதிர்காலத்தையும் அழித்துக் கெடுத்துவிடுகின்றீர்கள். விபத்தை ஒழித்து, வீதியில் நடமாட நீங்கள் அனைவரும் ஒழுங்கு விதிகளை க்கடைப்பிடித்தே ஆக வேண்டும்.

ல

வி.பாணு

மேலும்: எவருக்குமே வருவதென்பது மிக மிகக் குறைவுதான்.

அன்று தொட்டு இன்றுவரை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வீதிகளுக்கென்றொரு சட்டம், விதி, ஒழுங்கு இருந்து கொண்டு தானிருக்கின்றது. அதனை எத்தனை சாரதிகள்? ஏன் வீதியைப் பயன்படுத்துபவர்கள் கூடக் கடைப்பிடிக்கிறார்களா என்றால் மிகக் குறைவுதான். அப்படி யார் வீதியொழுங்கை மீறாது பயணிக்கின்றானோ அவன் அவனது இலக்கை அடைகின்றான் ஆனால், எவன் வீதியொழுங்கை மீறுகின்றானோ அவன் சேர வேண்டிய இடத்திற்கு சேர்க்கப்படுகின்றான். நாம்வாழ வேண்டும், மற்றவரும் வாழ வைக்கப்பட வேண்டும் உங்கள். வாகனத்தால் இன்னொருவன் உயிர் பறிக்கப் படுவதையோ, அல்லது அவன் உடல் சிதைவதையோ விரும்பாதீர்கள்.

இவ் விபத்துக்கு முக்கிய காரணம் வாகனமென்றால் ஆம் என்று எவன் சொல்கிறானோ, அவனுக்கு வாகனம் செலுத்தத் தெரியாது என்று தான்

## படித்ததில் பிடித்தது

### ஆணிவேர்



இளைஞன் தோற்றுவித்த இயக்கம் படருகிறது. வேகமாய்ப் படருகிறது. நாலாபுறமும் மனித சக்தியின் தனித்துவக் கூப்பாடு.

இளைஞனும் அவன் சகாக்களும் இப்போது புதிது புதிதான ஆராய்ச்சிகள் செய்கிறார்கள். நாட்கணக்காய் அவர்கள் பேசுகின்றனர். ஆராய்கின்றனர். காடு காடாய் அலைகின்றனர். பச்சிலைகளைப் பிடுங்குகின்றனர். அரைக்கின்றனர். சாறு பிழிகின்றனர். அவர்களது வாழ்க்கைக் களிப்பும் அலுப்பும் நிரம்பியதாய் ஓடுகிறது.

அதோ ஒரு மனிதன் அலறித் துடித்துக் கொண்டிருக்கின்றான். 'ஆ- சாத்தான், பேய் - பேய் - என்னமாய்க் கொல்லுகிறது? என்னமாய் வலி எடுக்கிறது? எதைப் பலியிட? ஆடா? கோழியா? மாடா? இரத்தமா? பசிப்பிண்டமே - இரத்த வெறி பிடித்த பைசாசமே? நோகுது-நோகுது ஊ - ஊ'

இளைஞர் கூட்டம் பரபரப்பாய் ஓடி வருகிறது.

சாறுகள் பூசப்படுகின்றன. சாறுகள் கொடுக்கப்படுகின்றன.

சற்றுப் போதுக்கிடையில் தான் அந்த மனிதனின் முகத்தில் என்ன மலர்ச்சி, நோய் தீர்ந்து போய் விட்டது. பிசாசும் இல்லை. சாத்தானுமில்லை. மனிதனைத் தவிர ஒன்றுமில்லை, என்கிற உணர்வு பிறக்கிறது.

சில ஆண்டுகளுக்கிடையில் மருத்துவமனைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. மனிதன், என்கிற தனித்துவ உணர்ச்சி, அவனை விட மேலானதில்லை என்கிற தனித்துவ உணர்ச்சி

வேகம் - வேகம் - தீயின் வேகம்.

***

பாதுகாப்பான இடம். நோயற்றல். இவற்றின் மத்தியில் புலன்களின் ஆர்ப்பாட்டங்கள் - தேவைகள் - தேவைகள் இளைஞனும் அவன் சகாக்களும் பம்பரமாய் நடக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கிடையில் பூமித்தாய் சொரிந்து சொரிந்து தள்ளுகிறாள். பார்க்கிற இடமெல்லாம் உணவின் செழிப்பு. உற்பத்தி - உற்பத்தி என்று மண் கதறுகிறது. மனிதன் அதன் அசுரப் பசிக்குக் கூட்டுறவாய்ச் 'சமாளிப்பு' நடத்துகிறான். பசி என்கிற பதமே இல்லை.

புதிய மதம் 'மனிதனின் தனித்துவம்' என்கிற மதம் வளர்ந்து செழித்து விட்டது. அது செழிப்பா? என்னமாய் ஊன்றிப் பதிந்து போய் நிற்கிறது.

***

முனியப்பதாசன்

# எங்களை நாங்களே மாற்றியமைக்க முடியும்


**கரிகாலன்**

ஒரு மனிதனை பூரண அறிவாளியாக மாற்றுவது பாடசாலையில் கற்கும் கல்வி மாத்திரமல்ல. இலங்கையைப் பொறுத்தவரையில் அநேகமானோர் இது தான் தங்களின் இலக்கு என்று அக்கல்வியை மாத்திரம்தான் கற்று வருகிறார்கள். பெற்றோர்களும் இவ்விடயத்தில் போதிய கவனம் எடுப்பதில்லை. பாடசாலைக் கல்வி என்பது ஒரு ஆரம்ப உந்துதலே தவிர வேறொன்றும் எமக்குத் தரப் போவதில்லை. பாடசாலைக் கல்வியைப் பற்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறுவதென்றால்:- ஒரு கட்டடத்தை கட்டுவதற்கு முதலில் ஒரு அத்திவாரத்தினை அமைக்கின்றோம். அந்த அத்திவாரம் போன்றுதான் நாம் கற்கும் பாடசாலைக் கல்வியும். அதற்காக நான் பாடசாலைக் கல்வியினை கற்க வேண்டாம் என்று கூறவில்லை. அத்திவாரம் சரியான முறையில் அமைந்தால் தான் நாம்வேண்டிய முறையில் கட்டடத்தை அமைக்க முடியும். ஆகவே. நாம் பாடசாலைக் கல்வியினை மாத்திரம் நம்பியிருக்கக் கூடாது. நாலா பக்கங்களும் சிந்தனையைச் செலுத்தி கூடிய அறிவினை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் எப்போதும் சிந்தனைகளுக்கும் கல்வித் தேடல்களுக்கும் வேலி போடக் கூடாது. இங்கு ஒரு சிலரைத் தவிர ஏனையோர் இப்படியான ஒரு வேலியினைத் தங்களுக்குத்தாங்களே போட்டுக் கொள்கிறார்கள். வளர்ந்த நாடுகளுடன் இலங்கையை ஒப்பிடுகையில் இலங்கை எங்கோ நிற்கின்றது.

வளர்ந்த நாடுகளில் வாழ்கின்ற மக்கள் செவ்வாய்க் கிரகத்திற்கே போய் வருகின்றார்கள் என்றால் அவர்கள் தங்களின் சிந்தனைகளுக்கோ, தேடல்களுக்கோ வேலி போடவில்லை. அவர்கள் காலத்திற்கு ஏற்றவாறு தங்களின் அறிவு வளர்ச்சியை விரிவாக்கிக் கொண்டு செல்கின்றார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை தொழில் நுட்ப ரீதியில் வளர்வதற்குப் போதிய வசதிகள் உள்ளன. ஆனால் அதனைப் பயன்படுத்தும் அளவிற்கு அறிவாளிகள் மிகக் குறைந்தவர்களாகவே உள்ளார்கள். வளர்ந்த நாட்டுக்காரர்கள் இலங்கையில் பெருமளவான வளங்களைச் சுரண்டிச் செல்கிறார்கள். உதாரணமாக, திருகோணமலை புல்மோட்டையில் விளைகின்ற இல்மனைற்றைப் பயன்படுத்தி தொழில் நுட்பத்தினை வளர்த்துக்கொள்ளும் அளவிற்கு நாம் அறிவற்றவர்களாகத்தானே இருக்கின்றோம். வளர்ந்த நாடுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கின்ற தொழில் நுட்ப உபகரணங்களைக் கையாளக் கூடியவர்களாகக் கூட நாம் இல்லை. இதற்கு ஒரே ஒரு காரணம், நாம் போதிய அறிவைப் பெறவில்லை. அதற்கான முயற்சியைக் கூட சரியாக எடுப்பவர்களாக இருக்கின்றோமா, என்றால் அதுவும் இல்லை.

சூரியன் கிழக்கில் உதயமாகி மேற்கில் மறைகின்றது. அது உலகத்தின் நியதி, காலத்தின் கட்டளை, அதனை எவராலும் மாற்றி அமைக்க முடியாது. நாம் அப்படி இருக்கமுடியாது. எங்களை நாங்களே மாற்றி அமைக்க முடியும். அநேகமானோர் பிறந்தோம். வாழந்தோம், இறந்தோம், என்ற கிணற்றுத் தவளையின் சிந்தனைபோல் வாழ்ந்தனர், வாழ்கின்றனர். எமக்கு அடுத்துவரும் சந்ததி எமது அறிவியல் இருப்பை கூறும்படியாகவும் எங்களின் வரலாறுகளை அவர்கள் படித்து தங்களின் அறிவினை வளர்த்துக்கொள்ள கூடியவாறும் நாம் உயிருடன் வாழ்கின்ற இக் குறுகிய காலத்திற்குள் இம்மண்ணில் ஒரு முத்திரையினைப் பதித்துக்கொள்ள வேண்டும்.



கோழிக்கு உதவி செய்த தோமஸ் அல்வா எடிசன், மின்குமிழ் உட்பட பல அறிவியல் சாதனங்களைக் கண்டுபிடித்து உலகத்தவரால் போற்றப்படுகின்ற விஞ்ஞானியாகியிருக்கிறார். உலக வல்லரசும் எடிசனின் தாய் நாடுமான அமெரிக்கா கூட எடிசன் உயிர்நீர்த்த அந்த நாளில் அவருக்காக ஒரு நிமிடம் மின்னைக் கட்டுப்படுத்தி அவரை நினைவுகூருகின்றது. விடா முயற்சியும் சிந்தனைத்தேடல் ஓட்டமும் தான் இந்த நிலைக்கு எடிசனை உயர்த்தியது. இதேபோல் ஐசாக் நியூட்டன், மார்க்கோணி, பரட என்று பலரின் வரலாறுகளைக் கூறிக்கொண்டே போகலாம். அவர்கள் அனைவரும் பாடசாலைக் கல்வியில் மாத்திரம் தங்களின் அறிவினை வளர்த்துக் கொள்ளவில்லை. அவர்களின் பரவலான சிந்தனை ஓட்டமும் தேடலும்தான் அவர்களை இன்னும் உலகம் மறக்காமல் நினைக்கும் அளவிற்கு உயர்த்தியுள்ளது என்பதை நாம் மறக்கக் கூடாது. இப்படி எல்லாம் அவர்கள் தங்களின் பெயர்களை இவ்வுலகில் பதித்துச் சென்றுள்ளார்கள்.

இலங்கையில் வாழ்கின்ற இளம் சந்ததிகள் சிறு வயதிலேயே குடும்பப் பொறுப்பினைத் தாமே சுமந்து கொள்கின்றார்கள். சில பிள்ளைகளுக்கு பெற்றோரே சுமையினை அவர்களின் மீது செலுத்தி இப்படியான வாழ்வுக்குள் நிர்ப்பந்திக்கின்றார்கள். நான் இதனைக் கூறும்போது பெற்றோர்களுக்கு சில கேள்விகள் எழலாம். பிள்ளைகள் படிக்கவும் பணம் இருக்கோணுமே? படிப்பதற்கு நல்லபாடசாலை? ஆசிரியர் இருக்கணுமே? என பற்பல கேள்விகள் எழும். பிள்ளைகளைக் கற்பிப்பதற்கு பணம் வேண்டுமென்று பெற்றோர் கேட்க முடியாது. ஏனெனில், சேமிக்கும் பழக்கத்தை அன்றாட வாழ்வில் கொண்டு வருதல், சிக்கனமாக வாழப்பழகுதல், அதாவது வீண் செலவைத் தவிர்த்தல் எடுத்துக்காட்டாக சினிமா பார்த்தல், தேவையற்ற பொருட்களை வாங்குதல், ஆடம்பரமான செலவைத் தவிர்த்து அப்பணத்தை சேமித்து வைப்பதன் மூலம் பிள்ளைகளின் கற்றலுக்கு பயன்படுத்த முடியும்.

பிள்ளைகள் படிப்பதற்கு உயர்ந்த பாடசாலையில்தான் அல்லது பட்டம் பெற்ற ஆசிரியர்களிடம்தான் படிக்க வேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும் எனக் கருதக் கூடாது. இதற்குச் சிறு உதாரணம் ஊடாகவே விளக்கம் தருக்கின்றேன். சாதாரணமாக ஏதேனும் ஒரு கொடியைப் பாருங்கள் அதற்கு மரமோ வளைந்து தனது கிளைகளைக் கொடுப்பதில்லை. அக்கொடியே தனக்கு கிடைக்கின்றதைப் பற்றிப்பிடித்து படர்ந்து ஒரு நேரத்தில் அந்த மரத்தையே மூடும் அளவிற்கு தன்னை வளர்த்துக்கொள்கின்றது. எனவே, கிடைக்கும் ஆசிரியர்களை பயன்டுத்தி நாமும் ஆர்வத்துடன் செயற்பட்டால் அக்கொடியைப் போல எங்களையும் பார்த்துக்கொள்ள முடியும் என்பதை நாம் இவ் உதாரணத்தில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

எங்களில் சில பெற்றோர்கள் தாங்கள் இறப்பதற்குள் தங்களின், மகனின் அல்லது மகளின் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஒரு குறுகிய சிந்தனையுடன் மிகவும் குறைந்தளவு வயதிலேயே தங்களின் பிள்ளைகளின் தலையில் குடும்பச் சுமையினை சுமத்தி அவர்களின் அறிவுத் தேடல்களுக்கு தடையாக இருக்கின்றார்கள்.

உதாரணமாக, ஒரு ஐந்து வயது பெண் பிள்ளையிடம் உங்களின் எதிர்காலம் என்னவென்று கேட்டுப்பாருங்கள். அப்பிள்ளை உடனே கூறுவார் " ஆசிரியராக, வைத்தியராக, விஞ்ஞானியாக" என்றுதான். அவரிடமே ஐந்தாறு வருடங்கள் சென்ற பின்னர் கேட்டாலும் அதைத்தான் கூறுவார். ஏனெனில், அப்பிள்ளையின் இலக்கு அவ்வாறுதான் இருக்கிறது. அவ்விலக்கை அடைவதற்காக கற்பனையுடனும், நம்பிக்கையுடனும் இலக்கை நோக்கி நகரும். பின்னர் குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் பெற்றோரே ஒரு கட்டளையினை இடுகின்றார்கள். " நாளை நீ ஒருவனுடன் வாழத் தொடங்கிவிட்டால் ஒன்றும் தெரியாதவளாக இருக்கக் கூடாது." பிள்ளையோ தான் விரிவாக்கி வைத்திருந்த சிந்தனையினைச் சுருக்கி அதனை சமையல் கூடத்தினுள் செலுத்தி திருமணம் தொடர்பாகவே சிந்திக்கத் தொடங்குகின்றது. அப்போது, மனதில் வளர்ந்து கொண்டிருந்த கற்பனை உடைந்துவிடுகின்றது. அப்பிள்ளை மீண்டும் தனது அறிவாற்றலை வளர்த்துச்செல்ல தடைக்கல்லாக இருப்பது பெற்றோரின் குறுகிய சிந்தனைதான் என்பதை பெற்றோர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உளவியல் கூட இதனைத்தான் கூறுகின்றது. ஒருவன் சிறு வயதில் எத்தகைய இலக்கை தெரிவு செய்து அதனை நோக்கி தனது சிந்தனையைச் செலுத்தும் போது அவனுக்கு எந்தத் தடைகளும் ஏற்படாமல் இருந்தால் அவன் கட்டாயம் என்றோ ஒரு நாள் அவ் இலக்கை அடைவான். அவனின் ஆர்வமும் விடாமுயற்சியும் அவ்விடத்திற்கு அவனைக் கொண்டு செல்லும்.

நான் இவ்வாறே பெற்றோர் மீதும் பிள்ளைகள் மீதும் குற்றங்களைக் கூறிக்கொண்டே போகிறேன் என்று நினைத்து விடாதீர்கள். இலங்கையைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக யுத்தங்களுக் குள்ளேயே மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே, யுத்தத்தின் தாக்கத்தாலும் இலங்கை மக்கள் அறிவியலில் வளராமல் இருக்கின்றார்கள். மக்கள் ஒரே இடத்தில் இருந்து அறிவியல் ரீதியாக சிந்தித்துச் செயல்பட முடியாமல் இருக்கின்றார்கள். ஆகவே, யுத்தங்களைப் பெற்றோர்களோ, பிள்ளைகளோ தனிப்பட்ட ரீதியாக மாற்றிவிட முடியாது. ஏனெனில், இது அரசியலுடன் தொடர்புபட்ட விடயம்.

எனவே, ஒவ்வொரு பெற்றோர்களும் பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் தனிப்பட சிந்தித்து முடிவெடுக்க முடியும் . ஆகவே, அவர்களின் வளர்ச்சிக்கு எந்தவிதத் தடைகளையும் ஏற்படுத்தாதவாறு அவர்களின் முயற்சிகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் ஒத்துழைப்புக்கள் வழங்கி அவர்களுக்கென ஒரு இலக்கைத் தீர்மானித்து அறிவியல் ரீதியில் வளர்த்துவிட வேண்டும் என்பதில் போதிய கவனம் எடுக்க வேண்டும். பெற்றோர்களின் குறுகிய சிந்தனைகளில், செயல்களில் பிள்ளைகளே உங்களை இழந்து மடமைத்தனமாக செயற்படாமல் உங்களின் பெயர்களையும் இவ்வுலகில் நிரந்தரமாக பதிக்க வேண்டும் என்ற ஒரே சிந்தனையுடன் பாடசாலைக் கல்வியினை மாத்திரம் நம்பியிராமல் பலவிடயங்களையும் கற்று, பொது அறிவினையும் நன்கு வளர்த்துக்கொண்டு நீங்களும் வளர்ந்த நாட்டவர்கள் போல் அறிவியல் ரீதியாக உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணின் முத்தாக
23 – 07 – 1972



விடுதலை வித்தாக
26 – 10 – 2001

**கடற்கரும்புலி லெப். கேணல் அமுதசுரபி**
**(சின்னப்பு (நந்தா)**

அன்புச் செல்வமே அமுதசுரபியே!
இமயமே சரிந்தது அன்று எம் இதயமே வெடித்தது
ஓராண்டு ஆனது தாங்கமுடியவில்லையே
உங்கள் பிரிவை
உந்தன்முகம் காணாது துடிக்கின்றோம்- நாமெல்லாம்
செய்வதறியாதுள்ளோம் தெரிகிறதா உங்களிற்கு
தாய்மண்ணை மீட்கவென அண்ணனுக்கு அருகிருந்து
வழிகாட்டியவரே
உங்கள் உடல் தாய் நாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டாலும்
எம் உயிர் இருக்கும் வரை எம்முடனேயே
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்
அன்பும் உந்தன் நெஞ்சில் ஆழமாய் சுரக்கும்
அழியாத நின்புகழ் என்றும் நிலைக்கும்
தமிழீழம் ஒருநாளில் உருவாகும் அன்று
தளராது உங்கள் நினைவு நிறைவேறும்.

அமுதசுரபியின் 1ஆம் ஆண்டு நினைவுநாள் 26–10–2002 நாளை செம்பியன்பற்றில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் மதியபோசனத்தில் போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**செம்பியன்பற்று தெற்கு, வடமராட்சி.** (2536) **தகவல்: குடும்பத்தினர்.**

# பொங்கும் தமிழுணர்வில் பூரித்த தமிழ் நெஞ்சங்கள்



இந்திய நாடு பெயரளவில் தான் சனநாயக நாடு. அங்கே சுதந்திரமாக எதையும் பேசமுடியாது. தமிழகம் இராணுவமுகாம்கள் எதுவுமில்லாத சுதந்திர பூமி என்று கூறப்படுவதுண்டு. ஆனால் சுதந்திரங்கள் பறிக்கப்பட்ட சிறைக்கூடம். யாழ்ப்பாணம் இராணுவ முகாம்கள் சூழப்பட்ட சிறைக்கூடமாக இருந்தாலும் இங்கு எதையும் பேசக்கூடிய சுதந்திரம் இருக்கிறது.

கவிஞர் இன்குலாப்



தமிழினத்தின் வரலாற்றிலே தமிழ்த் தேசிய தேசிய இனத்துக்காகத் தோன்றி வளர்ந்து, தமிழ் இனத்தின் மானத்தைக் காப்பதற்காக, தன்மானத்தைக் காப்பதற்காக இராணுவ பலத்தோடு எழுந்து வீறு கொண்டிருக்கிறார். ஒரு தலைவர் என்று சொன்னால் அது தளபதி பிரபாகரன் மட்டும் தான்.

நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஈழத்தமிழன் யாரையும் சாரவும் தேவையில்லை. ஈழத்தமிழன் தான் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு வழி காட்ட வேண்டும். விடுதலைப்புலிகள் தான் வழிகாட்ட வேண்டும், தலைவர் தளபதி பிரபாகரன் தான் வழிகாட்டவேண்டும், தமிழ்த்தேசிய இனத்தின் தளபதி தலைவர் பிரபாகரன் தான் வழிகாட்டவேண்டும்.

விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன்



எழுபதுகளில் ஒரு முறை தமிழ் மாநாடு நடக்கும் போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு பல உயிர்கள் அழிக்கப்பட்டன. அது போல் இப்போது செய்து விடமுடியாது. ஏனெனில் தமிழன் இப்போது பலமானவன். எழுபதுகளில் இருந்த தமிழன் இப்போது இல்லை. அவனுக்கென்று ஒரு பலம் உண்டு. அவன் மிகவும் விழிப்பு நிலையில் இருக்கின்றான். அவனை இனி யாரும் வீழ்த்திவிடமுடியாது. நிலாந்தன்






மனித நேயம் மறந்த தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களுக்காவே இந்தப்படத்தை எடுத்தேன். ஈழத்தமிழர்களுக்காகவோ, விடுதலைப்போராளிகளுக்காகவோ நான் இந்தப் படத்தை எடுக்கவில்லை.எனது நீண்ட நாள் ஆதங்கத்தின் விளைவாக எனது சகோதரத்தமிழர்கள் சூடு சொரணையில்லாமல் இருக்கிறார்களே என்ற வேதனையின் விளைவாக எடுத்தேன்.

மனித நேய உதவி என்பது ஒரு தார்மீகக்கடமை அந்தக் கடமையைக் கூடசெய்யத்தயங்கும் ஒரு மனோபாவம் தமிழ் நாட்டில் வளர்ந்துள்ளது. அந்தத் தயக்கத்தை, அந்தச் சங்கடத்தை முறியடிக்கவேண்டும். அதைப் பதிவு செய்யவேண்டும் என எண்ணி தமிழ்நாட்டில் உள்ள, தமிழ்மண்ணில் உள்ள தமிழர்களுக்காகவே இந்தப்படத்தை எடுத்தேன்.

திரைப்பட இயக்குனர் புகழேந்தி தங்கராஜ்



அடக்குமுறை எங்கு ஓங்குகிறதோ அங்கெல்லாம் மானுடத்தின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும். மானுடத்தின் உணர்வுகளை நசுக்கும்போது போராட்டம் தோற்றம் பெறுகின்றது. எமது தமிழ் மக்களின் போராட்டத்தின் தார்மதன்மைகள், உண்மைத்தன்மைகளை வெளி உலகுக்கு எடுத்துக்கூறும் ஒரு குரலாக இந்த மானுடத்தின் தமிழ்கூடல் அமையும்.

பேராசிரியர் சிவத்தம்பி



நாம் எமது மண்ணை மீட்கப் போராடும் அதே வேளை, எமது மொழியையும், பாதுகாத்துக் கொள்வது அவசியம். எமது மொழித் தூய்மையை பேணாது விடில், எமது இனத்தின் சிதைவுக்கே அது வழிகோலி விடும். மொழித் தூய்மையை பேணிக் கொள்வதில் கலை, இலக்கிய, ஊடகத் துறைகளின் முடிவற்ற பங்களிப்பு குறித்து எமது தலைவர் பிரபாகரன் நன்கு அறிந்திருந்தார். அதனாலேயே அவர் கலை பண்பாட்டுக் கழகம், புலிகளின் குரல், நிதர்சனம், மற்றும் பத்திரிகைகளை, சஞ்சிகைகளை ஊக்குவித்து வந்தார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர்
வெ.இளங்குமரன்



இராணுவக் கட்டுப்பாட்டில் தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களை எமது எண்ணப்படி விடுவிக்கப்படாத பிரதேசங்கள் என்றே நாம் கருதுகின்றோம். ஏனெனில் இராணுவக் கட்டுப்பாட்டில் அதாவது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கு எல்லா வசதிகளும் தேவைக்கு அதிகமாகவே கிடைத்தன. ஆனால் அவர்களது வாழ்க்கைக் கான பாதுகாப்பும், நிம்மதியும் கிடைக்கவில்லை. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பாரிய கஷ்டங்களை எதிர்நோக்கினார்கள் என்பது யாராலும் மறக்க முடியாத உண்மை. ஆனால் அவர்கள் பாதுகாப்பாகவும் நிம்மதியுடனும் வாழ்ந்தார்கள். எமது மக்கள் இராணுவச் சூழலுக்குள் வாழ்வதை முற்றாக விரும்பவில்லை. ஆனால் அதை சரியாக வெளிப்படுத்துவதற்குரிய சூழ்நிலை அவர்களுக்கு கிடைக்கவில்லை. இதனை வெளிப்படுத்த யாரும் முன்வரவில்லை. செ.விந்தன்

மானுடத் தமிழ் அரங்கில் கேட்டவை

வாசக நேயர்களுக்கு

எமது வெள்ளிநாதத்தில் வெளிவந்த திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள் எழுதிய சுதந்திர வேட்கை - உள்ளிருந்து ஒரு நோக்கு என்னும் தொடர் தவிர்க்க முடியாத காரணத்தால் வெளிவராது என்பதை அறியத் தருகின்றோம்.


## பதவி விண்ணப்பம் கோரல்

### கிளி/மாவட்ட சிக்கன கடனுதவச் சங்கங்களின் சமாசம்

01)கணக்கு உதவியாளர்
(ஒப்பந்தம்)

கல்வித் தகைமை:
G.C.E 0/L கணிதம் , தமிழ் உட்பட 04 திறமைச்சித்தியுடன் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். G.C.E A/L கணக்கியல் உட்படட 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது : 18-40
சம்பளம் :
மாதாந்தம் ரூ. 3000/= வழங்கப்படும்.

[இப்பதவி கிளி/மாவட்டத்திலுள்ள ஆரம்பருதலைச் சி.க.கூ.சங்கங்களை கணக்காய்வு செய்து முடிக்கும் காலம் வரை மட்டுமே ஆகும்]

(சி-7443)

02) லிகிதர் (தற்காலிகம்)
கல்வித்தகைமை
G.C.E O/L கணிதம், தமிழ் உட்பட 04 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
G.C.E A/L கணக்கியலில் சித்தியடைந்திருத்தல் விரும்பத்தக்கது.

வயது : 18 - 45
சம்பளம் :- பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கு தகைமையுடையோர் 05.11.02 ம் திகதிக்கு முன்னதாக தங்கள் விண்ணப்பங்களை தலைவர் சி.க.கூ.சமாசம் கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

தலைவர்
சி.க.கூ.சமாசம் கிளிநொச்சி.


## பகிரங்க அறிவித்தல்

தமிழீழ மாவட்ட நீதிமன்று :- கிளிநொச்சி, வழக்கு ,இலக்கம் :- 01/002,
தன்மை :- மணநீக்கம்.

திரு. அந்தோனிப்பிள்ளை சிவகுமார், வை.எம்,சீ,ஏ,வீதி, பாரதிபுரம், கிளிநொச்சி.
-வழக்காளி-

திருமதி. எலிசபேத்யேந்தி சிவகுமார், செல்வாநகர் (பாடசாலை வீதி), கிளிநொச்சி.
-எதிராளி-

இவ்வழக்கின் வழக்காளியானவர் 12/02/2002 எதிராளியான உமக்கு எதிராக விவாகரத்து வழக்கொன்றை இம்முறை மன்றில் தாக்கல் செய்து அவ்வழக்கில் உமக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்க முயன்று முடியாமையினால் இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகிறது. மேற்படி வழக்கில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் நீரோ அல்லது உமது நிலையில் சட்டப்படியான அக்கறை உடையோரோ இவ் அறிவித்தல் பிரசுரித்து 14 நாட்களுக்குள் தோன்றி ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் தவறும் பட்சத்தில் மன்றானது குறித்த வழக்கை ஒருமுக விளக்க நடவடிக்கை ஊடாக தீர்வு காணும் என்பதை இப்பகிரங்க அறிவித்தல் ஊடாக அறியத்தரப்படுகிறது.

முறைமன்றின் கட்டளைப்படி

செல்வி.கலா, தியாகராசா,
வழக்காளியின் சட்டவாளர்,
கிளிநொச்சி.

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட முறைமன்று,
கிளிநொச்சி (2550)

# வெள்ளி நாதம்

## நேர் நோக்கு

# தீவிரம் அடையும் நெருக்கடி

19 வது திருத்தச்சட்டம் தொடர்பாக சிறிலங்கா உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு தென்னிலங்கையில் மீண்டும் ஓர் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஓராண்டுப்பதவிக்காலம் முடிவடைந்தபின்னர் எவ்வேளையிலும் தனது அரசாங்கம் கலைக்கப்படும் அபாய நிலையிலுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதனைத் தவிர்க்க எடுத்த முயற்சி வெற்றி பெறாது என்பதை தற்போது புரிந்து கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று மட்டும் அரசியலமைப்புக்கான 19–வது திருத்தத்தை நிறைவேற்றி விட முடியுமாயின் அதற்கான முயற்சியை தொடர்ந்து மேற்கொள்ளக்கூடும். ஆனால் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்துவதை விட பொதுத்தேர்தலுக்குச் செல்வதையே அவரது அரசாங்கம் விரும்புகிறது. ஏனெனில் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் அவரால் இந்தச் சட்டமூலத்தை மட்டுமே நிறைவேற்றிக்கொள்ளமுடியும். அத்துடன் அதை வெற்றிபெறச் செய்ய ஒரு பொதுத்தேர்தலை ஒத்த பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

அதனை விட பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்கொள்வது இன்றைய சமாதான முயற்சியின் அறுவடையாக தனது கட்சி தனித்து பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையையாவது —அதாவது 113 க்கு மேற்பட்ட ஆசனங்களையாவது பெற்றுவிடலாம் என எண்ணக்கூடும்.

ஆனால், பாராளுமன்றத்தை தற்போதைக்குக் கலைத்துவிடப் போவதில்லை எனவும், அதற்கான அவசியம் ஏற்படவில்லை எனவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது கட்சியினரும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர். இதன் கருத்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு ஆபத்தில்லை என்பதல்ல. ஆபத்து வேறுவிதமாகக் காத்திருக்கிறது என்பதேயாகும்.

அதாவது பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுதேர்தலை நடத்துமாறு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கோருவதை, சந்திரிகா அம்மையார் பாராளுமன்றக் கலைப்பாக அல்லாது ஆட்சிக்கலைப்பாக மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவதற்கான ஏது நிலையே காணப்படுகிறது.

1994 ஆம் ஆண்டில் கூட பொ.ஐ.மு அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்தவில்லை. அதாவது 105 பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டுமேகொண்டிருந்த பொ.ஐ.மு உதிரிக்கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சியை நடத்தி வந்தது. இதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்த நிறைவேற்று அதிகாரமும் அவர் ஏதோ சாதித்துவிடப் போகிறார் என மக்கள் மத்தியிலிருந்த நம்பிக்கையும், ஆதரவுமே காரணங்களாயிருந்தன.

ஆனால் 2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பொ.ஐ.மு பெரும் மோசடிகள் மூலம் 107 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றும் 11 மாதங்களுக்குக் கூட அதனால் ஆட்சியில் நீடிக்க முடியவில்லை. ஏனெனில் அப்பொழுது அது மக்களின் நம்பிக்கையை இழந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியை மட்டுமே கொண்டிருந்தது.

இவற்றை மறந்து தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, சில கட்சிகளையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தம்வசம் இழுத்து மீண்டும் பொ.ஐ.மு ஆட்சியை அமைத்துவிட சந்திரிகா அம்மையார் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடும்.

அதாவது பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்தினால் இப்பொழுதுள்ள ஆசனங்களில் கூட சிலவற்றை இழக்கக்கூடும் என்ற அச்சம் காரணமாக தேர்தலை நடத்தாது குறுக்கு வழியில் ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் அவர் இறங்குவதற்கான அறிகுறியே காணப்படுகின்றது.

எனவே தென்பகுதி அரசியல் நெருக்கடியானது கடந்த சில மாதங்களுக்கு முன் காணப்பட்டதைவிட எதிர்வரும் மாதங்களில் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களே காணப்படுகின்றன.

இந்த நெருக்கடியானது, சிறிலங்காவின் பொருளாதார நிலையில் தளம்பலை இப்பொழுதே ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது. 19–ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்க்கட்சியினர் கொண்டாடிக் கொண்டிருக்கையில் பங்குச் சந்தை விலைகள் வீழ்ச்சி அடைந்திருப்பதான செய்திகள் வெளிவந்தன.

சமாதான முயற்சிகள் குறித்த முன்னேற்ற கரமான நடவடிக்கைகளும் அது குறித்த நம்பிக்கைகளும் முதலீட்டாளர்கள் மத்தியில் ஏற்படுத்திய நம்பிக்கை வீழந்து கிடந்த சிறிலங்காவின் பொருளாதாரத்தைத் துளிர்விடச் செய்திருந்தது. ஆனால் இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி அதற்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த ஆட்சியைக் கவிழ்த்து விட்டு புதிய ஆட்சியொன்றை நிறுவும் முயற்சியில் ஈடுபடுமானால் பொருளாதாரப் பின்னடைவு மட்டு மல்ல சமாதான முயற்சிகளுக்கும் பாதகமான நிலை ஏற்பட்டுவிடக் கூடும் என்ற அச்சம் பரவலாக எழுந்துள்ளது.


மக்களும் உலக சமுதாயமும் சமாதான முயற்சிகளுக்கு வழங்கிவரும்ஆதரவு சனாதிபதி சந்திரிகா குமார துங்கவை சமாதான முயற்சிகளிலிருந்து பின்வாங்குவதைத் தடைசெய்யக் கூடுமாயின் அம்முயற்சிகள் இன்றுள்ள வேகத்திலாவது செல்லுமா? என்ற கேள்வி எழுவது இயற்கையே. ஏனெனில் பொ.ஐ.மு.வின் முன்னைய ஆட்சிக்காலம் அவ்வாறே இருந்துவந்துள்ளது.

அவ்வாறில்லாது இந்த ஆட்சியை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலைக்காது விட்டுவைத்தாலும் சமாதான முயற்சிகளுக்கு அவர் போட்டுவரும் முட்டுக்கட்டைகள் மேலும் வலுவடையும் வாய்ப்புக்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

**வேலவன்**

# சமாதான சூழலைப் பயன்படுத்தி யாழ்குடா மக்களை சுரண்ட முனையும் நிறுவனங்கள்...





சமாதானச்சூழலோடு யுத்தத்தால் மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணம் தெற்கில் விற்க முடியாதிருந்த கழிவுகளை சந்தைப்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பான பிரதேசமாக கருதப்பட்டிருக்கிறது. தெற்கின் வர்த்தகர்களுக்கு இது ஒரு சமாதானத்தின் இணைப்பு இலவசமாக கிடைத்திருப்பதாக அவர்கள் எண்ணுகிறார்கள்.

இந்தச் செயல்னுட்பத்தில் இப்பொழுது யாழ்ப்பாணத்திற்கு செல்லிடத் தொலைபேசி (Cellular phone) வந்திருக்கிறது. டயலக் நிறுவனம் இதனை இங்கு நடத்துகின்றது.

இது நல்ல காரியத்தைச் செய்ய முனைந்தவர்களைப்பற்றி ஏன் அவதூறுகளைப் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புகிறார்கள் என்று வாசகர்கள் எண்ணக்கூடும். ஆனால் இதற்குப்பின்னால் உள்ள செய்தி துக்கமும் துயரமும் நிறைந்தது.

யாழ்ப்பாணத்தின் டயலக்கின் இணைப்பைப் பெறவேண்டுமாயின் அவர்கள் விற்கின்ற செல்லிடத் தொலைபேசியை அவர்களிடம் வேண்டினால் தான் இணைப்பைத் தருவார்களாம். யாழ்ப்பாணத்தவருக்கு மட்டுமேன் இந்த விதி முறை? சரி சங்கதி அது மட்டுமா? அவர்கள் தொலைபேசியை பண்ணிரெண்டாயிரம் ரூபாவிற்கு விற்கிறார்கள். இதே செல்லிடத் தொலைபேசி தெற்கில் ஆறாயிரம் ரூபாய்க்கும் பெறமுடிகிறது.

சரி அவர்களிடமே வேண்டி இணைப்பை பெறமுடிந்ததுடன் பிரச்சினை முடிந்ததா? அதுதான் இல்லை.

யாழ்ப்பாணத்திற்கு கிற்காட்(Kit Card) இணைப்பை மட்டும்தான் தருவார்களாம். (இது கடையில் 1000 ரூபா அல்லது 400 ரூபா காட்டை வாங்குவதன் மூலம் கதைப்பதற்கு காசைச் செலுத்தும் ஒரு இணைப்பு முறை) (Package) பக்கேஜ் மாதவாடகை செலுத்தி இணைப்பைப்பெறும் பொதி(Package)இணைப்பொதி 100ரூபா, பொதி 500 ரூபா பொதி 2000ரூபா) யாழ்ப்பாணத்திற்கு இல்லையா? ஏன் இல்லை? இந்த இரு முறைகளிலும் கிற்காட் முறையில் தான் பாவனையாளர்கள் அதிகூடிய கட்டணத்தை செலுத்த வேண்டி இருக்கிறது. இதை நடாத்தும் நிறுவனமோ இந்த வகையில் தான் அளவுக்கு மீறிய லாபத்தை வசூலிக்கமுடிகிறது. தெற்கில் எல்லாம் கிற்காட் முறையை பாவனையாளர்கள் பெருமளவில் புறக்கணித்து விட்டார்கள். ஆனால் இங்கே அது ஒரு வகையில் நிர்பந்திக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகிறது.

சரி இத்துடன் விட்டார்களா? முடிந்ததா கதை அதனுடன் என்றால் அதுதான் இல்லை. அனைத்தையும் விட மாபெரும் துயரம் என்னவென்றால் குறிக்கப்பட்ட செல்லிடத் தொலைபேசி வாங்கினால் தான் இணைப்புத்தருவதாக விற்கப்படுபவர்கள் கூறுகிறார்கள். இத்தொலைபேசி மூளையின் நரம்பு மண்டலங்களை அதிகம் பாதிப்பதாக கண்டு பிடிக்கப்பட்டவற்றில் முக்கியமானதுங் கூட.

சமாதானத்தை பயன்படுத்தி எங்கள் தலைகளில் ஏறி மிளகாய்அரைக்கிறார்களே! சந்தேகம் கொள்ளாமல் இச்சமாதானத்தை எதிர்கொள்ள முடிகிறாதா எங்களால்? போர் பனையால் விழுந்தவனை சமாதான மாடல்லவா ஏறி மிதிக்கிறது.

## படமும் தகவலும்




சிம்பாப்பே நாட்டின் மேற்கு கறாறைப்பகுதியில் "லிங்கா" மாவட்டத்தில் கடும் பஞ்சம் நிலவுவது தெரிந்ததே. இதனால் கோடிக்கணக்கான மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளனர். படத்தில் தொண்டர் நிறுவனங்களால் வழங்கப்பட்ட பாண் துண்டொன்றை சிம்பாபே சிறுவனொருவன் பசியார்வத்துடன் உண்பதையும் அதை ஏக்கத்துடன் பார்த்து நிற்கும் எலும்பும் தோலுமான நாயையும் காணலாம்.



இந்தோனேசிய இராணுவ வீரர் ஒருவர் டென்ஸ் பாசர் மருத்துவமனைக்கு அருகே அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் சவப் பெட்டிகளை பதிவு செய்கிறார். 14–10–2002 அன்று நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்றில் தீவு ஒன்றில் விடுமுறையைக் களிக்கச் சென்றவர்களில். 183 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து அச்சம் காரணமாக நூற்றுக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் "பாலி" நகரைவிட்டு வெளியேறி வருகின்றனர்.



17–10–2002 அன்று அடுத்த ஏழு வருடங்களு க்கான சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பதவிப்பிரமாணம் செய்து கொள்ளுமுன் தனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட வாள் ஒன்றுடன் சதாம் காணப்படுகின் றார். ஈராக்கியர்கள் அமெரிக்காவின் எந்தவொரு தாக்குதலையும் எதிர்கொள்ள கடுமையாகப் போராட வேண்டும் என்று கூறியுள்ளார்.



2002 ஆம் ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசை வென்றுள்ள முன்னாள் அமெரிக்க சனாதிபதி ஜிம்மிக் காட்டர் நோபல் பரிசு பதக்க த்தை கழுத்தில் மாட்டியபடி புன்சிரிப்புடன் காணப்படுகின்றார்.



அமெரிக்க சகாதிபதி ஜோஜ் புஷ்சின் சகோதரரான புளோறிடா மாநில ஆளுநர் ஜெப் புஷ்சின் மகளான இருபந்தைந்து வயதுடைய நோயல் புஷ் போதைவஸ்து தொடர்பான குற்றச்சாட்டில் 10 நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். கடந்த செப்ரெம்பரில் "கோகெயன்" என்ற போதை வஸ்த்தை தனது சப்பாத்தினுள் மறைத்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.